

கல்கி
30
காசு
KALKI
2.7.1961


'அவரா லேசில் திருப்தியடைகிறவர்...'
'அதுவும் துணி விஷயத்திலா? அதெங்கே...' என்கிறார் பம்பாய்வாசியான ஸ்ரீமதி ஆர். ஆர். பிரபு. 'இப்போல்லாம் ஸன்லைட்டாலே வெளுக்கறேன் அவரோட துணிக எல்லாத்தையும். அவருக்கோ பெருமை! எனக்குந்தான். இருக்காதா? அமோகமா நுரைகட்டுது ஸன்லைட், தொட்டதெல்லாம் பளிச்சுன்னு வெளுப்பு. சலவைன்னு எனக்கு வேண்டியது ஸன்லைட்தான்!'
ஸன்லைட்
ஸன்லைட் அருமை -- நம் துணிகளுக்கு நன்மை!
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு.
SUNLIGHT SOAP
30-X52 TM


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
ஸ்டெயின் லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
எப்பொழுதும் பிரகாசத்துடன், நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & சன்ஸ்
122. கன்ஸ்ராசால்...பம்பாய்-2.


இப்பொழுது நடைபெறுகிறது!
பழனியப்பா புரொடக்ஷன்ஸ்
என்னைப்பார்
சங்கீதம் T.G. லிங்கப்பா
ஒளிப்பதிவு-டைரக்ஷன் G.R. நாதன்
ஸ்டூடியோ கோல்டன்
சென்னை
கெயிட்டி · மஹாராணி · நூர்ஜஹான்
மற்றும் தென்னாடெங்கும்....
தயாரிப்பு
CT.PL. சிதம்பரம் & P. ஆரோக்கியசாமி

கல்கி பொருளடக்கம்

பிலவ, ஆனி 18 ❁ ஜுலை 2, 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 20 | தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 49

சத்தியமே வெல்லும்

ராஜாஜி

பிரதமர் நேரு அவர்கள் பதவி ஏற்றபோது இந்த நாட்டு மக்கள் எல்லோரும் அவர்மேல் தம் அன்பைப் பொழிந்தார்கள். ஆனால் இன்றைக்கு—இதை நான் துயரத்துடன் சொல்கிறேன்—அந்த அன்புப் பிதிரார்ஜிதத்தை அவர் சிதைத்துவிட்டார். விவேகம் இருக்க வேண்டிய இடத்தில் வெற்றுப் பேச்சு மலிந்து கிடக்கிறது. மாபெரும் கட்சியொன்றுக்குத் தலைமை தாங்கும் கௌரவம் பெற்றிருந்தார் நேரு அவர்கள். இன்று அக்கட்சியைத் தமது சுய முன்னேற்றத்தை மட்டும் கருதும் ஒரு கோஷ்டியாவதற்கு அனுமதித்துவிட்டார். அது ஊழல் மலிந்த ஒரு ஸ்தாபனமாவதை அவர் தடுக்கவில்லை. இன்று நமது தேசமெங்கும் இந்தச் சீர்கேடு வெட்ட வெளிச்சமாகி விட்டது. என்றாலும், ஊழல் மூலம் பெற்ற ஆதாயங்களையே அரணாகக் கொண்டு இந்தக் கட்சி வேரூன்றுவதற்கு நேரு அவர்கள் இடமளித்து வருகிறார்.

ஒரிஸ்ஸா தேர்தல் ஊழலைப் பற்றி வெளிப்படப் பரவியுள்ள செய்திகளில்கூட முழு உண்மையும் வெளியாகவில்லை. இந்தத் தவறான போக்குகளைச் சகித்துக் கொண்டே இருந்தோமானால் அரசியல் நிர்ணயச் சட்டம் ஒரு கேலிக் கூத்தாகிவிடும். ஜனநாயக அமைப்பு அடியோடு அழிந்து விடும். இது வெறும் சட்ட விஷயம் மட்டுமல்ல. மக்களின் ஜீவாதாரமான உரிமைகள் பற்றிய விஷயம் இது; தருமத்தையே பாதிக்கக்கூடியது. இப்போது அமுலாவது சோஷலிஸம் அல்ல; அதிகார வெறிக்கும் பணத்தைக் கொண்டு இனி போடும் காரியம்தான். தில்லிச் சிங்காதனத்தில் பணத்துக்கு மகுடாபிஷேகம் செய்திருக்கிறார்கள். சந்தேகமிருந்தால் ஒரிஸ்ஸாவுக்குப் போய் திரு பட்நாயக் அவர்களைப் பார்த்தால் போதும். சுதந்திரம் பிழைக்க வேண்டுமானால் இந்தப் பணப் பேயை — பணத்தைக் காட்டிப் பித்தலாட்டம் செய்யும் செயலை — எதிர்த்தேயாக வேண்டும்.

பணத்தைக் காட்டிப் பாமர மக்களை மயக்கும் ஜாலம் ஒரு புறம். கொள்கை, கொள்கை என்ற கோஷங்களைக் கேட்டு, படித்தவர்கள் குழம்பிப் போகும் விந்தை மற்றொரு புறம். எல்லா அரசியல் கட்சிகளும் தத்தம் இலட்சியம் என்பதாக எதையெதையோ சொல்லிச் சொல்லி மக்கள் மனத்தில் குழப்பத்தை உண்டாக்கி வருகின்றன. உண்மையில் எல்லாக் கட்சிகளின் இலட்சியமும் ஒன்றுதான். நாட்டின் நல்வாழ்வு என்பதுதான் அது. நல்வாழ்வை அமைக்க எந்த உபாயத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், எந்த உபகரணங்களைக் கையாள வேண்டும் என்பதிலேதான் உண்மையான மாறுபாடு இருக்கிறது. ஒரே மாதிரியான உபாயத்தையும், உபகரணங்களையும் கொண்ட கட்சிகள் தனித்தனியாகப் பிரிந்து நிற்பதில் அர்த்தமே இல்லை. இதனால் ஆளும் கட்சிக்குச் சாதகமாகத்தான் வோட்டுக்கள் சிதறிப் போகும். பணபலத்தைப் போலவே இந்தக் கொள்கைக் குளறுபடியும் ஜனநாயகத்துக்கு மற்றொரு பேராபத்து ஆகும்.

பர்மிட், லைசென்ஸ், கோட்டா ராஜ்யம் வேண்டாம் என்போரும், பணத்தைக் கொண்டு தேர்தலில் வெற்றி பெற்று நிரந்தர ஏகாதிபத்தியம் நடத்தும் காங்கிரஸ் வேண்டாம் என்போரும் ஒன்று சேர வேண்டும்.

சுதந்திரக் கட்சிக்கு உள்ள கஷ்டங்கள் போதாதென்று, அதன் செயல் முறையை மேலும் கடினமாக்கி வருகிறார்கள் அரசாங்கத்தார். சுதந்திரக் கட்சிக்கு அகில இந்திய அங்கீகாரம் கொடுக்கக் கூடாது என்பதில் ஆளும் கட்சியும், தேர்தல் கமிஷனரும் முனைந்து நிற்பதாகத் தெரிகிறது. இதர கட்சிகளுக்குத் தருவது போல் சுதந்திரக் கட்சிக்கு வாக்காளர் பட்டியல் தரக்கூடாது என்பதும் அவர்கள் சங்கல்பம்போல் தோன்றுகிறது. காரணம் அதிவிசித்திரமானது. சென்ற தேர்தலில், அதாவது சுதந்திரக் கட்சி தோன்றுவதற்கு முன்னமேயே நியமித்த அளவுக்குச் சுதந்திரக் கட்சி வோட்டுகள் பெறவில்லையாம். இப்படிச் சொல்லுவது விவாகத்துக்கு முன்பே ஒருத்தி குழந்தை பெற்றுத் தன் ஆரோக்யத்தை நிரூபிக்கவில்லை என்று சொல்வதுபோலத்தான்.

தேர்தலில் சுதந்திரக் கட்சி ஜயித்தாலும் ஜயிக்காவிட்டாலும், மக்கள் பயத்திலிருந்தும் மயக்கத்திலிருந்தும் தெளிவு பெற்றாலும் பெறாவிட்டாலும், நான் ஒருவன் மட்டும் தனியொரு மனிதனாகப் போராட உறுதி கொண்டிருக்கிறேன். எனக்குத் துணை நிற்க வேறு யாருமே இல்லாவிட்டாலும் சரி, ஆண்டவன் மட்டும் ஆயுள் தந்தானானால், ஆரோக்கியம் தந்தானானால் அது ஒன்றே எனக்குப் போதும் - காங்கிரஸின் போக்கால் மண்டி வளரும் இந்த அதருமத்தோடு நான் ஒருவனே தனித்து நின்று போராடுவேன். என்னைப் பற்றிப் பெரிதாக நினைத்துக் கொண்டு இப்படிச் சொல்லவில்லை. என் எளிமையை நான் அறிகிறேன். உபநிஷதம் கூறும் வாக்கியங்களை - நமது தேசிய வாசகத்தை - நான் நம்புவதாலேயே சொல்லுகிறேன்.

ஸத்யமேவ ஜயதே நாந்ருதம்

உண்மையே வெல்லும்; பொய் வெல்லாது.

இன்று சத்தியத்துக்கு விரோதமான முறையில் ஒரு கட்சி, அதிகாரத்தை என்றென்றும் பிடித்து வைத்துக்கொள்ள முடியும் என்று நினைக்கிறது. சத்தியம் தோல்வியடையுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போமாக; தோல்வியடையாது என்பது என் நம்பிக்கை.

ஏட்டிக்குப் போட்டி!

மற்றக் கட்சிகளின் கொள்கைகளைச் சம்பத் கடன் வாங்கியிருக்கிறார்.
— ம. பொ. சி.

பற்பல நாமங்களில் சைக்கிள் திருடன்.
—தலைப்பு

தட்டெழுத்துத் தேர்வு முடிவுகள்!
—பெரிய தலைப்பு

காஞ்சிக்கு வர அழைப்பு அனுப்பவில்லை என்று ஆசைத்தம்பி சொல்வது சுத்தப் பொய். — திரு அண்ணாதுரை

இந்திய பவுண்டன் பேனாக்களுக்கு ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் கிராக்கி.

கைவண்டி இழுப்போருக்கு இலவசச் செருப்பு சென்னையில் கொடுக்கப்படுகிறது.
—செய்தி

பிளாஸ்டிக் ரயில் வண்டி இந்தியாவில் தயாரிக்க யோசனை - தண்டவாளம் தேவையாதாம்.
—செய்தி

வட்டி இல்லாத விஷயம் இது ஒன்றுதானே!

பலருக்கு அவன் நாமம் போட்டதில் வியப்பில்லை.

பரீட்சை எழுதியவர்களைத் தட்டி எழுப்பியிருக்கும் இச்செய்தி.

ஆசைக்கொரு தம்பிதானே! போகட்டும், விட்டுத் தள்ளுங்கள்.

நமக்கு 'டன்' கணக்கில் பவுன் கிடைக்க இது உதவினால் ரொம்ப நல்லதுதான்.

கை வண்டிக்காரர்கள் கடும் வெயிலில் இழுப்பதைப் பார்த்து ரோடு தாரே உருகுகிறது என்றால் மனம் உருகக் கேட்பானேன்!

உபயோகத்தில் வந்தால் அதன் வண்டவாளம் தெரிந்து விடுகிறது.

என்ன செதி?


திரு சஞ்சீவி ரெட்டிக்குச் கடக்கடப் பதில்

ஆந்திரத்தில் கூடிய காங்கிரஸ் அரசியல் மகாநாட்டில் காங்கிரஸ் தலைவர் திரு சஞ்சீவி ரெட்டி அவர்கள், கிருஷ்ணா கோதாவரி நதி தண்ணீர் சம்பந்தமாக ஆந்திரம்—மைசூர்—மகாராஷ்டிரம் ஆகிய மூன்று ராஜ்யங்களிடையே இருந்து வரும் தகராறில் ஆந்திர சர்க்காரின் கட்சியைப் பகிரங்கமாக ஆதரித்துப் பேசியிருக்கிறார். தாம் ஓர் ஆந்திரர் என்ற காரணத்துக்காக மட்டும் இல்லாமல், காங்கிரஸின் தலைவர் என்ற ஹோதாவிலும், ஆந்திர சர்க்காரின் கட்சியை ஆதரிப்பதாகப் பேசியிருக்கிறார். மகாராஷ்டிர முதன் மந்திரி திரு சாவன் அவர்கள் இதற்குக் கடக்கட ஒரு பதிலைத் தந்திருக்கிறார். "திரு சஞ்சீவி ரெட்டி, காங்கிரஸின் அகில இந்தியத் தலைவர் என்ற ஹோதாவில் நதி நீர்ப்பங்கீடு விஷயமாக ஆந்திர சர்க்காரின் கட்சியை ஆதரித்துப் பேசலாம். ஆனால் அதற்கு காங்கிரஸ் செயற் குழுவின் ஆதரவும் ஒப்புதலும் கிடையாது என்பதை வற்புறுத்த விரும்புகிறேன். இதை நான் மகாராஷ்டிரத்தின் முதன் மந்திரி என்ற ஹோதாவில் சொல்லவில்லை. காங்கிரஸ் செயற் குழுவின் அங்கத்தினர் என்ற முறைமையில் சொல்லுகிறேன்" என்று திரு சாவன் சொல்லியிருக்கிறார்.

சிங்கப்பூர் தமிழர்கள்

சிங்கப்பூர் தமிழர்களில் பெரும்பான்மையோர் தங்கள் குழந்தைகள் ஆங்கில மொழி மூலம் கல்வியறிவு பெறவேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றனர். சிங்கப்பூரில் மலாய், சீன மொழி, தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகள் மூலம் பாட போதனை நடத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள் எனினும் தமிழ்க் குழந்தைகள் ஆங்கிலத்தையே தேர்ந்தெடுத்தன. பள்ளிகளில் சேர்க்கப்பட்ட 55,354 பேர்களில் ஆங்கிலத்துக்கு 30,650 பேர்களும், சீன மொழிக்கு 20,174 பேர்களும், மலாய் மொழிக்கு 4,369 பேர்களும், தமிழுக்கு 161 பேர்களும் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதனைப் பார்த்துச் சிங்கப்பூர், மலாய் நாட்டுத் தமிழர்களுக்குத் தமிழ்ப்பற்றுக் கிடையாதோ என்று நினைத்து விடக் கூடாது. கடல் கடந்து வாழும் தமிழர்களின் தமிழ்ப் பற்று இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. இவ் விஷயம் தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழ்ப் புத்தகப் பதிப்பாள



முதல் இந்து இந்திய பாங்கிகளுள் ஒன்று என்று பிரபலமடைந்துள்ள யுனைடெட் கமர்ஷியல் பாங்கின் ஜெனரல் மானேஜர் திரு எஸ். டி. சதாசிவன் அவர்களின் புதல்வி சௌ. சித்கலாவுக்கும் திரு சத்தருக்கும் விவாகம் சென்ற மாதம் நடந்தது. மணமகன் திரு கே. கோவிந்தசாமியின் புதல்வர். திருமணத்துக்கு ராஜாஜி அவர்களும், சென்னை நகரப் பிரமுகர்களும் வந்திருந்து மணமக்களை ஆசிர்வதித்தனர்.

ரைக் கேட்டாலும் தெரியும். தமிழ்நாட்டில் எந்தத் தமிழ்ப் புத்தகம் வெளிவந்தாலும் உடனே படிக்க வேண்டும் என்று துடிப்பவர்கள் கடல் கடந்து வாழும் தமிழர்கள்தாம்.

ஆனால் இந்தத் தமிழ் ஆர்வம் அவர்களது அறிவுக் கண்களை மறைத்து விடவில்லை என்பதைச் சிங்கப்பூர் தமிழ் மாணவர்கள் ஆங்கிலத்தைப் பாடபோதனை மொழியாக எடுத்துக் கொண்டது வெகு தெளிவாக விளக்கி விட்டது. உலக விஞ்ஞான, தொழில் நுட்பக் கலைகளை அறிய ஆங்கிலம் முக்கிய சாதனம் என்பதை அறிந்திருப்பதனால்தான் அவர்கள் இந்த முடிவுக்கு வந்தார்கள்.

அறிவுக்குத் தடை

இந்திய மருத்துவ முறையில் ஜி. சி. ஐ. எம். என்ற 'டிகிரி' பட்டமும் எல். ஐ. எம். என்ற 'டிப்ளொ'மாவும் உண்டு. இதுகாறும் இயங்கி வந்த ஒரே இந்திய மருத்துவக் கல்லூரியையும் மூடி விட்டார்கள் என்றாலும் நேற்று வரை அதில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் தொழில் நடத்திக் கொண்டுதானிருக்கிறார்கள். இவர்களிடம் அரசாங்கம் பட்சபாதத்துடன் நடந்து கொள்கிறது என்ற குறை நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது. ஆங்கில வைத்திய முறையில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு உத்தியோகம் சம்பளம் போன்ற விஷயங்களில் சலுகை காட்டப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்திய மருத்துவ முறையைப் பயின்றவர்கள் ஆங்கில வைத்திய முறையைப் பயின்று எம். பி. பி. எஸ். பட்டம் பெறுவதற்கேனும் அனுமதிக்க வேண்டுமல்லவா? அதற்கும் சம்மதிக்க மாட்டோம் என்பது அநீதி.

ஆங்கில முறையில் டிப்ளொமா பெற்றவர்கள், எம். பி. பி. எஸ். பட்டம் பெற அனுமதிக்கப்படுகிறார்கள். இதற்கெனக் குறுகிய கால எம். பி. பி. எஸ். பாடதிட்டம் உள்ளது. (Condensed M.B.B.S., course) 'இந்த வகுப்புகளில் சேர எங்களுக்கும் அனுமதி தாருங்கள்' என்றுதான் இந்திய மருத்துவர்கள் கேட்கிறார்கள்.

இவர்கள் கோரிக்கையில் நியாயம் இருக்கிறதென்றாலும் அகில இந்தியத் திட்டமாக இந்திய மருத்துவ முறைகளுக்கு வந்துகொண்டிருக்கும் சில சிறப்பான மறுமலர்ச்சித் திட்டங்களின் முடிவு தெரியும் வரையிலாவது இந்திய மருத்துவர்கள் இந்தப் பிரச்னையை ஒத்திப் போடுவது நலம் என எண்ணுகிறோம்.


அகிலன் எழுதும்
புது வெள்ளம்
கல்கி
ஆகஸ்ட் 6
இதழில் ஆரம்பமாகிறது


ஜூலை [redacted] முதல்...
சென்னை
பாரகன் · பிரபாத் சரஸ்வதி
மற்றும் தென்னடெங்கும்...
சரவணபவா & யூனிடியின்...
எல்லாம் உனக்காக
டைரக்ஷன்
A. சுப்பாராவ்
வசனம்
K.S. கோபாலகிருஷ்ணன்
சங்கீதம்
K.V. மஹாதேவன்
ஸ்டுடியோ
நெப்ட்யூன்

புண்ணிய புருஷர் காஸா சுப்பாராவ்

சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர்

தர்மமும் சத்தியமும்தான் மனிதனின் சிறந்த பலம். இந்த பலமுள்ள மனிதனை தேவனென்று கூறலாம். இந்த பலமுள்ள மனிதனே மிகுந்த தைரியத்துடன் எது நல்லது, எது தவறு என்று சொல்ல வல்லமையுள்ளவன். இப்படிப்பட்ட மனிதன்தான் உலகத்திலுள்ள பிரஜைகளுக்கும் நற்பயனை அளிப்பவன். இப்படிப்பட்ட புண்ணிய புருஷர்கள் சிலர் நம் நாட்டில் இன்றும் இருப்பதால் தான் நம் நாட்டுக்குப் பெருமை. அவர்களில் மிகச் சிறந்தவரும், ராஜாஜி போன்ற மகாபுருஷர்களின் அன்புக்குப் பாத்திரமானவரும், தர்மம், சத்தியம், சுத்த மனம் இவைகளுடன் கூடியவருமான உத்தமர் ஸ்ரீ காஸா சுப்பாராவை நம் நாடு இழந்து விட்டது. ஸ்ரீ காஸா தமது பத்திரிகை மூலம் தர்மம், சத்தியம் இவைகளை உலகில் தைரியமாய்ப் பரப்பி, தீரபுருஷராய் விளங்கியவர். இளகிய மனமுள்ளவர்; தெய்வத்தினிடம் அளவு கடந்த பக்தி உள்ளவர். அதேபோல் ஸ்ரீ காமகோடி பரமாச்சாரியர்களிடத்திலும், ராஜாஜியிடத்திலும் அவர்களுக்கு இருந்த பற்று அளவற்றது. ஸ்ரீ ராஜாஜியிடமுள்ள தர்மம், சத்தியம், தெய்வ நம்பிக்கை, சுயநலமற்ற சேவை, தீர்க்க தரிசனம் இவைகளே ஸ்ரீ காஸாவின் மனத்தைக் கவர்ந்தன.

பீஷ்மர் முக்தியடையுமுன் பாண்டவர்களிடம் தர்மம், சத்தியம் முதலியவற்றையே கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

"பரத குலத்தில் பிறந்த பாண்டவர்களே! நீங்கள் சத்தியத்தையே நித்தியம் பேச முயல வேண்டும், சத்தியமே உங்களுக்குப் பெரும் பலம். இளகிய மனமுள்ளவர்களாக இருக்க வேண்டும். எப்பொழுதும் மனத்தை அடக்க வேண்டும். வேதத்தை வளர்க்க வேண்டும். தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். தவசீலர்களாய் இருக்க வேண்டும்" என்றெல்லாம் உபதேசித்து விட்டு, பிறகு தர்மபுத்திரரைப் பார்த்து, "எப்படி நடுவழியில் உள்ள ஓர் பழுத்த மரத்தை அண்டிப் பறவைகள் ஜீவிக்கின்றனவோ அதுபோல் சிநேகிதர்களும், பந்துக்களும், மற்றுமுள்ளவர்களும் உன்னை அண்டி நல்ல பயனை அடைய வேண்டும்" என்று சொன்னார்.

"எவர்களிடம் வைத்த அன்பு குறையாமல் வளர்ந்து வரும்?" என்று யக்ஷன் கேட்டார். அதற்குப் பதில் அளித்த தர்மபுத்திரர் "மஹா புருஷர்களிடத்தில் வைத்த சிநேகம் ஒருநாளும் குறையாது. நித்தியம் வளரும்" எனக் கூறினார். இதற்கேற்ப ஸ்ரீ காஸாவுக்கும், ஸ்ரீ ராஜாஜிக்கும் இடையே இருந்த அன்பு ஒருநாளும் குறையாமல் வளர்ந்து வந்தது. ராஜாஜி ஒருவரிடத்தில் சிநேகம் பூண்டால் அந்த மனிதர் எவ்வளவு சிறந்தவராக இருப்பார் என்பதை ஊகிக்கலாம்.

புராணங்களை ச்ரவணம் செய்யும் போது ஸ்ரீ காஸாவின் உருகிய மனத்தைக் கண்டு நான் ஆச்சர்யமடைந்தேன். பகவானைப் பற்றிப் பேசும் போது எந்த மனம் உருகவில்லையோ, அது கல்லென முனிவர்கள் கூறுகின்றனர். இப்படி பகவானிடத்தில் மனம் உருகி பக்தி வரவேண்டுமானால் அதற்கு ஜன்மாந்தரத்திலாவது செய்த ஜபம், ஹோமம், மந்திரம், தானம் முதலியவைகளும், மற்றும் பல சிறந்த தர்மங்களும் தான் காரணம் என்று சுகர் கூறியுள்ளார். ஸ்ரீ காஸா அவர்கள் தமக்கு நேர்ந்த வியாதி முதலிய துன்பங்கள் ஸ்ரீ பகவானின் சரித்திரங்களைக் கேட்டதாலேயே நீங்கின என்று மனம் உருகி அடிக்கடி என்னிடம் கூறியதுண்டு.

சுத்த மனமுடையவர்கள்தான் பிறரிடமுள்ள குணங்களையும், தோஷங்களையும் கண்டு சொல்ல முடியும். நல்லவர்களிடமும் சில தவறுகள் இருக்கலாம். அதை எடுத்துச் சொன்னால் அவர்கள் அதை விலக்கிக் கொள்ளலாம். இப்படித் தவறுகளை விலக்கிக் கொள்ள உதவி புரிந்த ஸ்ரீ காஸா சுப்பாராவ் அவர்கள் நம்மிடையே யிருந்து பிரிந்தது நம் நாட்டுக்கே ஒரு பெரிய நஷ்டம். அவர்களுடைய மறைவால் எல்லோருமே வருந்தினாலும் அவர்களைப் பக்கத்திலிருந்து பாதுகாத்து வந்த சில உத்தம நண்பர்களின் துயரம் மிகவும் பெரிதாகும்.

காலமானவரை நினைந்து நினைந்து கலங்கிப் பயனில்லை. நாம் நல்லவர்களாக இருந்து கொண்டு பகவானின் அருளை அடைய முயல வேண்டும். ஸ்ரீ காஸாவின் ஆத்மா சாந்தி யடையவும், தர்மம், சத்தியம், தெய்வ நம்பிக்கை முதலியன உலகில் எங்கும் பரவும்படியும் பகவானை வேண்டுகிறேன்.







அநுதாபக் கூட்டம்

ஸ்ரீ காஸா சுப்பாராவ் அவர்கள் மறைவைக் குறித்து ஓர் அநுதாபக் கூட்டம் சென்ற 17ம் தேதி மாலை மயிலாப்பூர் ஸ்ரீ சுந்தரேசுவரர் ஹாலில் நடைபெற்றது. ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய அய்யர் எம். எல். ஸி. அவர்கள் தலைமையில், சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர், மந்திரி திரு மாணிக்கவேலர், ஸ்ரீமதி ருக்மிணி தேவி, திரு ம. பொ. சிவஞானம், திரு பி. டி. ராஜன், திரு ஆர். வி. கிருஷ்ணய்யர், அமெரிக்க கான்ஸல் ஜெனரல் திரு ஸைமன்ஸ், பேராசிரியர் ரத்தினசாமி, திரு தேஷ்முக், ஸ்ரீமதி துர்காபாய் தேஷ்முக், திரு மோகன் குமாரமங்கலம், சித்ரா நாராயணசுவாமி, திரு ஏ. ஜி. வேங்கடாச்சாரி, ராஜாஜி முதலியோர் நெஞ்சம் நெகிழும் வண்ணம் பேசினார்கள். அந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த பொது மக்கள் திரு காஸா அவர்கள் எத்தனை வகைப்பட்ட மனிதர்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றிருந்தார் என்பதைக் கண்டு வியந்து போனார்கள்.







பேனா மன்னருக்கு அஞ்சலி

காஸா அவர்கள் மறைவுக்கு அநுதாபம் தெரிவித்து ஏராளமான தந்திகளும் கடிதங்களும் ராஜாஜி அவர்களுக்கும், 'கல்கி', 'ஸ்வராஜ்யா' பத்திரிகைகளின் அதிபர் ஸ்ரீ சதாசிவம் அவர்களுக்கும் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் சில:

காஸா! சுப்பாராவ் தேசத்துக்காகவும் பொது மக்களுக்காகவும் அளவற்ற ஈடுபாட்டுடன் பணி புரிந்தவர்; தலை சிறந்ததொரு பத்திரிகையாளர்.

டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

காஸா சுப்பாராவ் அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டுச் சொல்லி முடியாத துயரமடைந்தேன். இந்தியப் பத்திரிகை உலகுக்கு அவரது மறைவு மிகப் பெரிய நஷ்டம்.

ஸ்ரீ பிரகாசா
பம்பாய் கவர்னர்

அறிவுத்திறம் நிரம்பிய, திர்ப்பயமான அபிப்பிராயங்களை வெளியிட்ட ஒரு களங்கமற்ற ஆன்மா திரு காஸா. அவருடைய மறைவினால் இந்தியப் பத்திரிகை உலகம் நிறைவு செய்ய முடியாத நஷ்டத்தை அடைந்திருக்கிறது.

ஸி. பி. ராமசுவாமி அய்யர்

தேச சுதந்திரத்துக்காகத் தீரமாகப் போர் புரிந்த வீரர்களில் மேலுமொருவர் சென்று விட்டார்....மனிதர்களைப் பற்றியும், சம்பவங்களைக் குறித்தும் அச்சமின்றி விமரிசனம் செய்தவர் திரு காஸா.

கே. காமராஜ்

விடுதலைப் போராட்டத்தில் குதித்துப் பலத்த இன்னல்களுக்கு ஆளானவர் திரு காஸா. பத்திரிகை உலகில் ஜொலித்து விளங்கிய காஸா நட்புப் பான்மையிலும் சிறந்தவராவார்.

எம். பக்தவத்ஸலம்

வாழ்க்கையில் காஸா கொண்டிருந்த உயர்ந்த குறிக்கோள்களையும், அவரது அந்தரங்க சுத்தியையும் அவரை எதிர்த்தோரும் கூடத் தயங்காது ஒப்புக் கொள்வர்.

'ஸ்வராஜ்யா' அமெரிக்காவின் பல சர்வகலாசாலை நூலகங்களிலும் பத்திரிகைப் பணிமனைகளிலும் இடம் பெற்றுள்ளது. செய்திகளின் விசேஷத்தாலும், நேர்மையான முறையில் மக்களை முன் நின்று இட்டுச் செல்வதாலும், உயர்ந்த அறிவைப் பரப்புவதாலும் 'ஸ்வராஜ்யா' அமெரிக்காவில் போற்றப் படுகிறது. ஸ்ரீ காஸா சுப்பாராவ் எவ்வளவோ சிறப்பாகச் செய்த சேவையை 'ஸ்வராஜ்யா' தொடர்ந்து செய்யும் என நம்புகிறேன்.

டாக்டர் தாமஸ் டபிள்யூ. ஸைமன்ஸ்
(சென்னையிலுள்ள அமெரிக்கக் கான்ஸல் ஜெனரல்)

தமது 'ஸ்வராஜ்யா' மூலம் அச்சமற்ற, உண்மையான பத்திரிகையாளரின் பணியைப் புரிந்தார் ஸ்ரீ காஸா சுப்பாராவ். இன்றைய பத்திரிகைத் துறையில் அவ்வளவாகக் காண முடியாத அளவுக்கு நேர்மை செறிந்த நெறி, வெள்ளை உள்ளம், சிறுமையைக் கண்டவிடத்துச் சீற்றம் முதலிய உயர் பண்புகள் அவரிடம் இருந்தன.

ஸி. டி. தேஷ்முக்

காஸா உங்களையும் உங்கள் நாட்டையும் மட்டும் சேர்ந்தவரல்ல. எங்களுக்கும் எங்கள் நாட்டுக்கும் கூட அவர் சொந்தமானவர். சகாக்கள், தாய்நாடு இவற்றோடு உலக முழுவதின் சீரிய நலன்களையும் மனத்தில் கொண்டு, உதாரண புருஷராக வாழ்ந்தவர் அவர்.

பால் ஸி. ஷெர்பெர்ட்
(அமெரிக்காவிலுள்ள ஆசிய சங்கத்தின் நிர்வாக டைரக்டர்)

தனி மனிதன் சுதந்திரத்துக்கும், சத்தியத்துக்கும் அவர் முன் நின்று உழைத்தார். பண்பாடும், கற்பனா சக்தியும் நிறைந்தவர் காஸா சுப்பாராவ். வாழ்க்கையின் சிறந்த பொருட்கள் எதையும் தேரியாமல் வாழ்க்கையின் சிறந்த பண்புகளையே அவர் நாடினார்.

ஸ்ரீமதி ருக்மிணி தேவி

ஆசிரியத் தொழிலில் அவர் கண்டிருந்த உன்னத சாதனையினால் அவரது மறைவு மிகவும் துயரமளிக்கிறது.

பிலிப்ஸ் டால்பாட்
(அமெரிக்காவின் தெற்காசிய விவகார உதவிக் காரியதரிசி)

இலட்சியங்களுக்காக ஆத்ம சமர்ப்பணமான ஒரு வாழ்க்கை காஸா சுப்பாராவுடையது.

கே. எம். முன்ஷி

காஸா சுப்பாராவின் மறைவு அவரைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமின்றி நாட்டுக்கே ஈடு செய்ய முடியாத ஒரு நஷ்டமாகும்.

வி. பி. மேனன்

திரு காஸா, மரணத்தைக் கண்டு அஞ்சியவரே அல்ல. அவருடைய நண்பர்களின் நினைவுத்திரையில், தூய புன்னகை தவழும் முகத்துடனேயே காஸா என்றும் நிற்பார்.

என். ரகுநாதய்யர்

ஒரு வேதனைக் குரல்

[ஒரு வியாபாரி அன்பர் ராஜாஜிக்குப் பின்வரும் கடிதம் எழுதியிருக்கிறார்.]

என்னுடைய வியாபார இன்னல்களைப் பற்றித் தங்களுக்குப் பணிவுடன் தெரிவிக்க விரும்புகிறேன். 1950ம் வருஷம் ரூபாய் பத்தாயிரம் முதல் வைப்பதற்காக என்னுடைய நில புலன்களை யெல்லாம் விற்று வியாபாரம் ஆரம்பித்தேன். 1954, 1955 வரையில் ஏதோ வியாபாரம் ஒழுங்கான முறையில் நடந்து என் குடும்பமும் நடந்து வந்தது.

அதன்பின் அரசாங்கத் தொல்லைகள் ஏற்பட்டுத் தொழில் குறைய ஆரம்பித்தது. அதனால் முதல் குறைந்து கொண்டே வர நேரிட்டது.

இந்த இரண்டு வருஷ காலமாக வெகு மும்முரமாக அரசாங்கம் தலையிட்டு என்னைப் போன்ற சின்ன வியாபாரிகளைக் கசக்கிப் பிழிந்து விட்டது.

தினந்தோறும் வருமானவரி அதிகாரி, விற்பனை வரி அதிகாரி தொல்லைகள். சரக்கு எடுத்துப் போனால் நடுவழியில் சோதனைச் சடங்குகள், போலீஸ் தொல்லைகள் வேறு. அனாவசியமாய் இவர்கள் தொல்லைகள் கொடுக்கிறார்கள். நான் எந்தத் தவறும் செய்யாத காரணத்தால் என்னை அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஆனால் இவற்றால் நேர்மையான எனக்கு வியாபாரம் செய்ய இடைஞ்சலாய் இருந்தது. ஆகையால் ஒரு வருஷமாக வியாபாரத்தை நிறுத்தி விட்டேன். நான் நாலு பிள்ளைகள், மனைவியுடன் வாடகை வீட்டில் கண்யத்துடன் வாழ்ந்தேன். இன்று என்னுடைய வியாபாரம் போய், சொத்தும் போய், முதல் போய்க் கடன் தொல்லையில் இருக்கிறேன். எல்லாச் சரக்குகளுக்கும் லைசென்ஸ், கோட்டா, பர்மிட்டு என்று வைத்து விட்டார்கள். அரசாங்கத்திடம் போய்க் கேட்டாலும் எழுதி அனுப்பினாலும் ஒன்றும் கொடுப்பதில்லை. இதுவரையில் யாருக்கும் லஞ்சமும் நான் கொடுக்கவில்லை. அப்படிக் கொடுத்திருந்தால் கிடைக்குமா, கிடைக்காதா என்பது தெரியாது. ஆனால் என் மனத்தில் ஒரு பயம் இருந்ததினால் அந்த வழிக்குப் போகவில்லை. அப்படிப் போக எனக்கு விருப்பமும் கிடையாது. சிலர் என்னைப் 'பைத்தியக்காரன், வாழ வழி தெரியாதவன், வியாபாரம் செய்ய வழி தெரியாதவன்' என்று சொல்வதுதான் கண்டேன். என்ன செய்வது என்றே எனக்குத் தோன்றவில்லை.

எனக்கே இப்படி என்றால், தேசக் குடும்பத்தை நல்ல முறையில் கொண்டுபோயிருந்த தாங்கள் ஏன் வேதனைப்பட மாட்டீர்கள்? எல்லாம் வல்ல இறைவன் தங்கள் முயற்சிக்கு வெற்றியளிக்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

சென்னை 23—6—61 — 'வி. என். தேவநாதன், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரி

சுதந்திர நிதி

(25-5-61லிருந்து [23-6-61] வரை)

வி. தாமோதரன் கல்லிடைக்குறிச்சி	51	00
ராமகிருஷ்ண சாஸ்திரிகள்	10	00
எம். சுப்பிரமணியம்	17	00
எஸ். பாலன்	1	00
பக்குசாமி	5	00
வி. குப்புசாமி	2	00
கே. ஆர். நாராயணன்	2	00
டாக்டர் கே. ராமச்சந்திரன்	10	00
கலைாசனு சீனிவாசன்	1	00
பி. ஜே. ராமச்சந்திரன்	1	00
ஊரும் பேரும் தராத அன்பர்	100	00
எம். ஆர். தியாகராஜன்	1	00
எம். ஆர். சுந்தரம்மாள்	1	00
மலேயா அன்பர்	10	00
எஸ். என். சௌந்தரராஜன்	2	00
ஆர். சேஷாத்திரி ஐயங்கார்	1	00
கே. எஸ். ஜெகந்நாதன்	1	00
ஜனாப் அமீர் முகதீன்	2	00
டாக்டர் கானமேகம்	10	00
10-1-61 - 24-5-61 வரை	5154	45
மொத்தம் வரவு	5382	45

நன்கொடைகள் அனுப்பியவர்களுக்கு நன்றி. அனைவரும் ஆழ்ந்து யோசிக்க வேண்டிய விஷயம். பெரியதொரு அரசாங்கத்தைத் தன் கையில் வைத்துக் கொண்டு தன் அதிகாரத்தை நீடித்துக் கொண்டு போக எல்லா வேலையும் செய்து வரும் காங்கிரஸை எதிர்க்க இந்த நன்கொடைகள் எம்மட்டும் உதவும்? இந்த ஊக்கம் போதுமா? பெரியோர்களும் சிறியோர்களும் யோசனை செய்ய வேண்டும்.

24-6-61 சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

சுதந்திரக் கட்சிக்காகப் பண உதவி செய்கிறவர்கள் ஸ்ரீ ராஜாஜி c/o கல்கி காரியாலயம், சென்னை-10 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.


புதுமை பெறுக! இதம் பெறுக!
நளினமாய் இருங்கள்! நாள் முழுதும்!


CHARMIS
Talc

நாவல் பிறக்கிறது...

நாவல் பிறக்கிறது—வாழ்க்கையிலிருந்துதான் நாவல் பிறக்கிறது. நாவல் என்ன, எல்லா இலக்கியங்களுமே வாழ்க்கையிலிருந்துதான் பிறக்கின்றன. எல்லாக் கலைகளுமே அப்படித்தான். வாழ்க்கை வேறு, இலக்கியம் வேறு அல்ல. வாழ்க்கைதான் இலக்கியம்.

வாழ்க்கையின் படப் பிடிப்பு அல்ல அது. உள்ளதை உள்ளபடி எடுத்துக் காட்டுவது மட்டும் அதன் வேலையல்ல. வாழ்க்கையிலுள்ள உயிர்த் துடிப்பையும் இயக்க ஆற்றலையும் கொண்டிருப்பது இலக்கியம். வாழ்க்கையை விளக்கித் துலக்கி, அலசி ஆய்ந்து காட்டுகிற வேலையும் கொண்டது அது.

ஆர்வி

மேல் நாட்டு நாவலாசிரியர் கூறியிருப்பது இது: "கவி காவியத்தைப் படைக்கிறான்; காவியம் கவிஞைப் படைக்கிறது." அதைப் போலவே நாவலாசிரியன் நாவலைப் படைக்கிறான்; நாவல் நாவலாசிரியனைப் படைக்கிறது என்று கூறலாம். ஊன்றிப் பார்த்தால் இந்த உண்மை நன்றாக விளங்கும். வாழ்க்கையைக் கொண்டுதானே அவன் நாவலைப் படைக்கிறான்? வாழ்க்கையிலுள்ளவைதான் நாவலாசிரியனையும் படைக்கின்றன. வாழ்க்கையின் அடிப்படையான உண்மைகள் மறைந்து, விளக்கம் பெறாமல், மூடிக் கிடக்கும்போது அவற்றைத் துலக்கிக் காட்டத் துடித்து வெடித்துக் கொண்டு பிறக்கிறது அவன் படைப்பு. வாழ்க்கை போடுகிற எத்தனையோ விதமான புதிர்களை அறிவையும் உணர்ச்சியையும் குழைத்துக் கலந்து, விடுவித்து விளக்கம் கூற முற்படுகிறது நாவல்.

ஆனால் அது பிறப்பது எப்படி? பிறந்த ஒன்றைக் கொண்டுதானே அதைப் பார்க்க வேண்டும்? என் வரையில் இது நான் என்னையே உள்நோக்கிப் பார்த்துக் கேட்டுக் கொள்ளாத கேள்வி ஆகும். சிந்திக்கத் தொடங்கும் போதே இலக்கிய உணர்வும் ஆக்கத் திறனும் என்னுள்ளே முனைப்பாகத் தான் நிற்கின்றன. அந்த நிலையில் என்னுடைய அகக் கண் எதிரே நானே இரு கூறுகளாகப் பிரிந்து நிற்கக் காண்கிறேன். ஒரு கூறு மனச்சாட்சி என்ற பெண் வடிவும், மற்றொரு கூறு அறிவு என்ற ஆண் வடிவும் கொண்டு என்னை இரு கூறுகளாக்கிக் காட்டுவதையும் ஒன்றை ஒன்று நோக்குவதையும் உணர்கிறேன். அன்பும் பண்பும் மனச்சாட்சி என்ற உணர்ச்சிப் பெண்ணுக்கு அணிகலன்களாக விளங்குகின்றன. அனுபவமும் வேட்கையும் அறிவு என்ற ஆணுக்கு ஆடைகளாக விளங்குகின்றன. சிந்தனை, எட்டிய வரையில் முன்னும் பின்னும் மேலும் கீழும் துருவிச் செல்லப் பார்க்கிறது. புறக் கண்களால், காணும் காட்சிகளும், புறச் செவிகளால் கேட்கும் குரல் ஒலிகளும், நுகரும் வாசனைகளும், சுவைக்கும் ருசி பேதங்களும், தீண்டும் பொருள்களும் என்னுள்ளே இருக்கும் உணர்வுகளும் அந்த ஆணையும் பெண்ணையும் கிளர்ச்சியுறச் செய்கின்றன. அதைத் தொடர்ந்து பிணக்கு உண்டாகிறது. பிணக்குத் தீர்ந்து வெற்றி இணக்கத்தில்தான் கரு உருவாகிறது.

அந்தக் கணம் முதல் உள்ளத்தின் ஒரு கோடியிலுள்ள கருப்பையிலே அந்த உயிர்க் கரு இடம் தேடி, வளர்ச்சி பெறத் தொடங்குகிறது. கதையோ, கவிதையோ, கட்டுரையோ, நாடகமோ அவ்விதக் கருவிலிருந்துதான் தோன்றி உருப்பெறுகிறது. நாவலும் அப்படித்தான். அணு அண்டமாகி, அண்டம் பிண்டமாகி, பிண்டம் உருவமாகிப் பூரண வளர்ச்சி பெற்றதும், உரிய காலம் ஆனதும் ஒரு படைப்பாக, தோன்றிய இடத்திலிருந்து வெளிவரத் துடிக்கிறது. அதற்கு வேதனைதான்! அந்த வேதனையின் முடிவாகப் பிறக்கிறது எழுத்து; அல்லது நாவல்.



இலக்கிய அனுபவங்கள் என்றால் வாழ்க்கையனுபவங்கள்தான். வாழ்க்கையில் இல்லாதவற்றையோ, ஒட்டாதவற்றையோ படைத்துக் காட்ட முயல்வது அல்ல நாவல். வாழ்க்கைப் புதிர்களை விடுவிக்க வருகிறது அது.

அப்படிப்பட்ட புதிர் ஒன்றிலிருந்து பிறந்ததுதான் 'திரைக்குப் பின்'. அந்த நாவல் பிறந்தது எப்படி என்று என் நினைவுக் குதிரையைத் திருப்பி ஓட்டிப் பார்க்கிறேன். அந்தக் கரு தோன்றிய நாளைக் குறிப்பிட்டுச் சொல்ல இருபது ஆண்டுகளுக்கு முன்னால் நான் போக வேண்டியிருக்கிறது!

நினைவுக் குதிரை குதித்த இடம் வந்ததும் நின்று விட்டது. இருபது ஆண்டுகளுக்கு முன்னே நான் இவ்வளவு சிறியவனாகவா இருந்தேன்? நானா இது? அந்தக் காலத்துப் புகைப்படத்தைப் பார்த்தால் என் இளமை தெரிகிறது. பெண்ணைப் போல் பால் வடியும் முகம் தெரிகிறது.

இன்னொன்று தெரிகிறது. என்னைப் பார்ப்பவர்கள் இரண்டாம் முறையும் கவனித்துப் பார்ப்பதை நான் கண்டிருக்கிறேன். அதனால் ஏதோ ஒரு தற்பெருமை; நம்பிக்கை; மண்டையில் சிறிது கனம்கூட.

கோடையில் காற்றுக்காக வாசல் குறட்டில் படுக்கையைப் போட்டுக் கொண்டு தூங்குவது எனக்கு வழக்கம். பொழுது விடியுமுன்னே, கருக்கு வெளிச்சத்திலேயே சளசளவென்று தண்ணீர் தெளிக்கும் சத்தம் விழிப்பூட்டி விடும். விழிப்பு வந்ததுமே முதலில் என் கண்ணில் தென்படுவது கோயில் கோபுரம்தான். கிழக்குப் பக்கத்திலே, சாம்பிராணிக் கட்டி நிறத்திலே அகன்று உயர்ந்து நிற்கும் கோபுரத்துக் கலசங்கள் என் பார்வையில் படும். அடுத்த தொடியே யாளி விளிம்பு மேலே வெள்ளை வெளேரென்று இரண்டு புறாக்கள் உட்கார்ந்திருப்பதைக் காண்பேன். அத்தனை வெள்ளென வேளையில் கோபுரத்தின் மீது யார் தண்ணீர் தெளித்து எழுப்புகிறார்களோ, தெரியாது. ஒன்று, அவை நான் பார்ப்பதற்குச் சற்று முன்னால் வந்து உட்கார்ந்திருக்கும்; அல்லது, அப்போதுதான் ஒன்றன்பின் ஒன்றாக வந்து உட்கார்ந்து கொள்ளும். அந்தக் கவின் மிகு காட்சி என்னுள்ளே ஆழப் பதிந்து போயிருக்கிறது.

'திரைக்குப் பின்' என்ற நாவலே அந்தக் கோபுரக் காட்சியில்தான் தொடங்குகிறது. நீல விசும்பிடையே நிமிர்ந்து நிற்கும் அந்தக் கோபுரத்தில் என்னுடைய மாடப் புறாக்கள் இரண்டையும் காணலாம். அத்துடன் மட்டுமல்ல; நான் எழுதிய எந்த நாவலிலுமே, சமீபத்தில் எழுதி வெளியான 'தேன்கூடு' என்ற தொடர் நாவலில் கூட, அந்தக் கோபுரம் இடம் பெற்றிருக்கிறது.

கோயிலில் திருப்பணி வேலைகள் நடந்து கொண்டிருந்தன.

கோயில் மண்டபத்துக்கு மேலே சாரங்கள் கட்டி, மழை, வெயிலுக்குப் பாதுகாப்பாகத் திரைபோட்டு மறைத்து உள்ளுக்குள்ளே சிற்ப வேலைகள் நடந்து வந்தன. எனக்கும் இளம் ஸ்தபதி ஒருவருக்கும் நட்பு ஏற்பட்டு விட்டது. ஹைஸ்கூல் படிப்பு முடிந்திருந்த எனக்குச் சிற்ப சாஸ்திரம் கற்கலாமா என்று ஆசையாக இருந்தது. வாயிலே வெற்றிலைக் கலவையும் கையிலே தூரிகையுடன் வண்ணக் கலவையுமாக உட்கார்ந்திருக்கும் சிற்பி, அத்தனை பேரை விட்டு விட்டு என்னிடம் மட்டும் நட்புப் பாராட்டுவானேன்? அவரிடம் சிற்ப சாஸ்திரம் எதையும் நான் கற்கவில்லை. ஆனால் வெற்றிலை போடும் பழக்கத்தை மட்டும்தான் கற்றுக் கொண்டேன்.

"போடுங்க தம்பி, கம்மாறு வெற்றிலை! வாயிலே எச்சில் ஊற ஊற, கற்பனையும் ஊறும்!" என்றார் அவர்.

கும்பாபிஷேகம் எல்லாம் ஆன பிறகு கூட, சாரத்தைப் பிரிக்கவில்லை. ஒருநாள் மாலையில் வழக்கம் போல் மேலே ஏறிச் சென்றேன். ஸ்தபதிக்கு ஒரு சிறிய பகுதியில் இன்னும் கொஞ்சம் வேலையிருந்தது. நான் விமான கோபுரத்தைச் சுற்றி வந்தேன். எதிரே பளிச்சென்று கோபுரத்துச் சிற்பம் ஒன்று இறங்கி நிற்பதுபோல ஓர் இளம் பெண் வண்ணச் சேலையும் கனக வண்ணமுமாக நின்று கொண்டிருந்தாள். முற்றிலும் புதிய முகம். இப்படிப்பட்ட பெண் ஒருத்தியை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை. எத்தனை நீளமான கண்கள்! எத்தனை அழகான புருவங்கள்! தோகை போன்ற இமைகள்! பின்னல்!

"தம்பி, இன்னும் கொஞ்சம் தள்ளி நில்லு, பார்ப்போம்!"

அந்தக் குரல் கேட்டுத் திரும்பினேன். அது ஸ்தபதியின் குரல்தான். பக்கத்திலே தோள்பட்டையில் தோல் வாரும் கையிலே காமிராவுமாக ஓர் இளைஞர் காணப்பட்டார். என்னை இன்னும் கொஞ்சம் நெருங்கினாற்போல் நிற்கும்படி அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

சட்டென்று திரும்பினாள் அந்த மங்கை. அதற்கும் 'கிளிக்' என்ற ஒலி வருவதற்கும் சரியாக இருந்தது. அவள் அப்போது

என்னைப் பார்த்த பார்வை! அழகாகக் கனிந்த தணல்தான்!

"யார் தம்பி அது. உன்னோடு வரவில்லையா?"

"யாரோ, எனக்குத் தெரியவில்லையே!"

"இது தெரியாமல் போச்சே! ஏதாவது வம்பாகிவிடப் போகிறது. என்ன கோபம் பார்த்தாயா, கண்களில்!" என்றார் இளம் ஸ்தபதி.

நாவல் பிறக்கிறது

அநுத்தமா

போக வேணுமோ, போ! இங்கே உனக்கு வேலையில்லே. கதவைத் திறக்க மாட்டேன்!"

"வேண்டாமே; பக்கத்திலே எல்லோரும் விழித்துக் கொண்டிருக்கிறார்களே!" என்று மெல்லிய குரலில் கெஞ்சியது அந்தப் பெண் குரல்.

"இருக்கட்டும்; உன் முகத்தில் காறித் துப்பட்டும்!" சற்று நேரம் பொறுத்து மீண்டும் கதவைத் தட்டும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து, "மறுபடியும் தட்டினாயோ கழுத்தைப் பிடித்து வெளியிலே தள்ளுவேன்!" என்று மிரட்டியது ஆண் குரல்.

சத்தம் நின்றுவிட்டது.

எனக்கு வெகு நேரம் வரையில் தூக்கம் வரவில்லே. எங்கிருந்தோ சோக மயமான குரல் ஒன்று என் காதருகே ஒலித்துக் கொண்டேயிருந்தது. ஒரு பெண்ணிடம் இத்தனை இரக்கமற்று ஒருவனால் நடந்துகொள்ள முடியுமா? அதற்கு விடை கிடைக்கவில்லே. நண்பனின் குறட்டைதான் கேட்டது. இடையிடையே பக்கத்து வீட்டினுள்ளே ஒரு குழந்தையின் அழுகுரலும் கேட்டது.

காலையில் வெகு நேரம் கழித்துத்தான் விழித்து எழுந்தேன். அடுத்த வீட்டைத் தற்செயலாக எட்டிப் பார்த்தபோது அதில் பெரிய பூட்டாகமாட்டிப் பூட்டிக் கிடந்தது.

நண்பனைப் பார்த்து, "வீடு பூட்டிக் கிடக்கிறதே!" என்று கேட்டேன்.

"அவர்கள் தங்கள் ஊருக்குப் போய் விட்டார்கள்:"

"அப்புறம் கதவு திறந்ததா?"

"இல்லே; அவள் எங்கே போனாளோ, தெரியாது. மற்றவர்கள் வண்டியிலேறிப் போய்விட்டார்கள்!"

கணவனுக்கும் மனைவிக்கும் அந்தக் கோடி வீட்டுப் பெண் வந்ததிலிருந்து புகைச்சல். அவளோடு பழக வேண்டாம் என்று மனைவியைத் தடுத்திருக்கிறான் கணவன். ஏதோ பழகிய குற்றம், பால்ய நட்பு. தடுத்தது நிற்கவில்லை! 'தான் ஏதோ ஒரு பாகத்தில் நடித்த படம்; அன்றோடு கடைசி' என்று அவள் வற்புறுத்தி அழைத்துச் சென்றிருக்கிறாள். அது இப்படி வந்து முடிந்துவிட்டது.

அன்று மாலை ஊர் திரும்ப ரயிலடிக்கு வந்தேன். நண்பனும் வந்திருந்தான். முதலில் வடக்கே போகிற வண்டி வந்திருந்தது. "அதோ பார், அவள் தான் நேற்றிரவு கதவைத் தட்டியவள்!"

கோபித்துக் கொண்டு போகும் அந்தப் பெண்ணின் உருவம் மறுநாள் அவருடைய நோட்டுப் புத்தகத்தில் பதிவாகியிருந்தது.

பிறகு ஒரு சமயம் உறவினர் ஒருவருடைய ஊருக்குச் சென்றிருந்தேன். என் வயதை ஒட்டிய நண்பர்கள் சிலர் கூடியிருந்தார்கள். இரவுச் சாப்பாடு முடிந்து, ஒரு கவுளி வெற்றிலை காலியாகும் வரையில் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தோம். நடுநிசிக்கு மேல் ஆகிவிட்டதால் நண்பர்கள் போய் விட்டார்கள். நானும் என் உறவு நண்பனும் அவனுடைய தாயும் மட்டுமே எஞ்சியிருந்தோம்.

நானும் நண்பனும் படுக்கைக்கு ஆயத்தம் செய்தபோது எங்கள் பக்கத்து வீட்டில் கதவைத்தட்டும் ஓசைகேட்டது. வீட்டினுள்ளிருந்து சத்தமே வரவில்லே. என் நண்பனும் அவனுடைய தாயும் வியப்போடு பார்த்துக் கொண்டார்கள்.

"அவன்தான்! சினிமாவுக்குப் போய் விட்டு வந்திருக்கிறான் போலிருக்கிறது. கதவைத் தட்டுகிறாள்!" என்றாள் நண்பனுடைய அம்மா, அடிக் குரலில்.

"தனியாகவா?"

"இருக்காது; அந்தக் கோடி வீட்டுப் பெண்ணோடுதான் போயிருப்பாள். கோயிலில் இரண்டு பேரையும் சேர்ந்து பார்த்தேன்!"

"பாதிராத்திரியில் தட்டுகிறாளே என்று கூட இல்லாமல் அப்படியா அவன் தூங்குவான்?" என்றான் நண்பன்.

"தூங்கினால் எழுந்திருக்க மாட்டானா? எல்லாம் விழித்துக் கொண்டுதான் இருக்கிறான்! வேண்டும் என்றுதான் இருக்கிறான்!" என்றாள் அவன் அம்மா.

இந்த வீட்டுக்கும் அடுத்த வீட்டுக்கும் இடையே ஒற்றைக் கல் சுவர்தான். திடீரென்று ஆண்குரல் ஒன்று கேட்டது:

"ஏன் பிசாசுபோலக் கதவைத் தட்டுகிறாய்? உனக்கு வெட்கம், மானம் இல்லே? போ, போ! அவள் வீட்டுக்கே போய்க் கதவை இடி. இன்னும் எங்கே

என்று இரண்டு பெண்களில் ஒருத்தியைச் சுட்டிக் காட்டினன் நண்பன்.

நான் திகைத்துப் போய்விட்டேன்! முன்பு ஒரு நாள் கோயில் விமான கோபுரத்தில் என்னைச் சுட்டெரிப்பவள் போல் பார்த்துவிட்டு மறைந்தாளே, அதே பெண்தான் அவள். கோடி வீட்டுப் பெண்ணிடம் விடைபெற்றுக் கொண் டிருந்தாள்.

என்னுள்ளே இரு கூறுகளாக இருந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் மௌனப் போர் மூண்டுவிட்டது.

"நட்புக்கு இரங்குவது அத்தனை தகாத குற்றமா?" என்று கேட்டாள் அந்தப் பெண்.

"கணவன் கருத்தை மதிக்காமல் மீறி யது குற்றமில்லையா?" என்று கேட்டான் அந்த ஆண் பிள்ளை.

"அதற்கு இத்தனை பெரிய தண்ட னையா? பெற்ற பிள்ளையைக்கூட அவளிட மிருந்து பறித்துச் செல்வதா?"

"அதைக்கூட விட்டு விட்டு, அந்தக் கோடி வீட்டுப் பெண்ணோடு சினிமாவுக் குப் போனவளுக்கு அந்தச் சுமை வேறு எதற்கு?"

போர் ஓயவில்லை.

பல வருடங்கள் ஓடிவிட்டன. என் கண் பார்வையில் ஏதோ கோளாறு. டாக்டர் ஒருவரின் 'நர்ஸிங் ஹோ'முக் குச் சென்றேன். டாக்டர் சுறுசுறுப்பா கக் காணப்பட்டார். பெரிய உல்லாசப் படகுபோல் வாசலில் ஒரு மோட்டார் நின்றிருந்தது. இன்னும் பெரிய மனிதர்க ளாகக் காணப்பட்ட சிலர் அங்கே குழுமி யிருந்தார்கள். 'பெரிய இடத்துக் கேஸ் போலிருக்கிறது. பிறகு வரலாமா?' என்று தயங்கினேன்.

"உட்காருங்கள், ஐயா! டாக்டர் வந்து விடுவார்!" என்றான் உதவியாள்.

"ஏதாவது ஆபரேஷன் கேஸோ?"

"அதெல்லாம் ஆயிட்டுது. ஆனல் ஒரு கண் போய் விட்டது. கண்ணாடித் துண்டு பாய்ந்தால் கண்போகாமல் இருக்குமா?"

"கண்ணாடித் துண்டு என்றால் மூக்குக் கண்ணாடியா?"

"அதை ஏன் கேட்கிறீர்கள்? சொந்தப் பிள்ளை, உடைந்த கண்ணாடியை எடுத்துக் கண்ணிலே வீசி விட்டது!"

"அப்புறம் என்ன ஆச்சு?"

"என்ன ஆச்சு? ஒரு கண் போச்சு! ஆனல் அந்தப் பிள்ளைக்கு என்ன உப சாரம் நடக்குது, தெரியுமா? அதை ஏன் கேட்கிறீர்கள்!"

நான் திரும்பிப் பார்த்தேன்.

தலை சுற்றியது. வடக்கே சென்னைக்குச் செல்லும் வண்டியில் ஏறி உட்கார்ந் தாளே, அதே பெண்தான் அவள்! இப் பொழுது அரிவைப் பருவத்தைக் கடந்து தெரிவைப் பருவத்தில் காணப்பட்டாள். நீளமான, பளபளத்த விழிகள் இரண் டையும் வர்ணக் கண்ணாடி அணிந்து மறைத்துக் கொண்டிருந்தாள். இருந் தாலும் இடது கண்ணை மறைத்து வில்லை யாக ஒரு பச்சைத் திரை தொங்கியது தெரிந்தது. ஆறு ஏழு வயதுச் சிறுவன் ஒருவனை அணைத்தவாறு அவள் வாயிலைக் கடந்து, பெரிய வண்டியில் போய் ஏறிக் கொண்டாள். கூட வந்திருந்தவர்கள் அனைவரும் வண்டியைப் போய்ச் சூழ்ந்து கொண்டார்கள். அவளுக்குப் பக்கத் திலே உரிமையோடு போய் ஏறி உட் கார்ந்து கொள்கிறானே, அவன்தான் கதவைத் திறக்க மறுத்த கணவனோ?

இருக்கலாம்; அந்தச் சிறுவன் அதே சாயலாக இருப்பதால்.

என்னுள்ளே ஒரு கிளர்ச்சி! தூக்கம், பசியற்ற அமைதியின்மை. ஒருவிதமாக நான் ஓய்ந்து போனேன். அறிவுக்கும் மனச்சாட்சிக்கும் நடந்த துவந்துவப் போரில் வெற்றி எதற்கோ, தெரிய வில்லை. எது வெற்றி பெற்றால் என்ன, அந்தப் போரில் வெற்றி பெற்றவருக்குத் தானே தோல்வி!

கருவுண்டாகி விட்டது. சூல்கொண்ட பின் கரு சும்மா இருக்குமா? அனுபவம் என்ற செடிகள் பணிவிடை செய்ய அது கற்பனை வலை பின்னவும் பூரண வளர்ச்சி பெறவும் உள்ளத்திலே ஓர் இடத்தைத் தேடிப் பிடித்துக் கொண்டது.

அதற்கும் சில ஆண்டுகளுக்குப் பிறகு, எங்கள் பக்கத்தில் புயல் புரிந்த கொடு மையைப் பார்க்கப்போன இடத்தில் சற்றும் எதிர்பாராதவாறு என் பழைய நண்பர் - ஸ்தபதியைக் காண நேர்ந்தது. அவர் தீட்டிய ஓவியக் குறிப்புக்களையும் காண நேர்ந்தது. விமான கோபுரத்திலே என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சென்றாளே, அந்தப் பெண்ணின் படத் தைக் கண்டேன். அடேயப்பா, அந்தப் பார்வை! அழகாகக்கனிந்த தணல்தான்!

'நிலவுக்குப் பின்!' என்ற நாவலில் அந்த அழகிய பெண்தான் கதாநாயகி பாமினியாக விளங்குகிறாள். என்வரை யில் அது மிகவும் அழகான நாவல் என்பதில் ஐயமில்லை. அழகான பெண் ணொருத்தியைப் பற்றின கதை என்பத னால் எனக்கு இந்த அபிமானம் வந்து விடவில்லை. நான் எத்தனை நினைத்தேனோ அத்தனையையும் எழுத்திலே கொண்டு வந்து வடித்து விடவுமில்லை. ஆயினும் பெண்ணுக்கு எது உண்மையான உயர் வையும் அழகையும் தருகிறதோ, அதைப் பற்றிய கதை என்பதனால்தான் அழகான நாவல் என்று சொல்கிறேன்.

லிப்டன்

லாவோஜி டீ



சிக்கனத்தின்
சின்னம்
சிறப்பின் சிகரம்

LLC 2 TM

அன்பே ஆரமுதே

அத்தியாயம் பதின்மூன்று

வாசல் தாழ்வாரத்தில் உட்கார்ந்து துப்பறியும் நாவல் படித்துக் கொண்டிருந்த சுப்புசாமி கார் ஹாரனைக் கேட்டு நிமிர்ந்தார்.

“சந்திரா! சந்திரா!” என்று உள்ளே பார்த்துக் கத்தினார்.

“ஏன் மாமா?”

“ருக்கு வந்து விட்டாற் போலிருக்கு... இலையைப் போடு.”

“சரி, மாமா!”

நாகம்மாள் உடனே வெளியே வந்தாள். “ருக்கு வந்து விட்டாளா?”.

“நம் கார் மாதிரிதான் சத்தம் கேட்கிறது.”

“அவளை ஏதாவது கேட்டு வைக்காதீர்கள், அண்ணா! நான் சொன்னதாக ஒன்றும் காண்பித்துக் கொள்ள வேண்டாம்.”

“பின்னே எதற்காக என்கிட்ட சொன்னே? நான் தெரிந்து கொண்டேன் என்று தெரிஞ்சா, என்ன ஆகிவிடும் என்கிறாய்?”

“என்னமோ, இதெல்லாம் என்ன கேள்வி! பொம்மனாட்டி மனசு!”

“மனசு நபும்சகலிங்கம்.... ராமனுடைய மனசு வருந்தினான், சீதையோட மனசு துக்கப்பட்டாள் என்று யாரும் சொல்ல மாட்டார்கள்.”

“உங்களோடே பேசவே முடியாது அண்ணா!” என்ற அவள் மேலே பேசுவதற்குள் ‘சர்ர்’ என்று இரண்டு கண் விளக்குகளும் தாழ்வாரத்தில் பாய, கார் காம்பவுண்டுக்குள் திரும்பி வளைந்து முகப்பில் வந்து நின்றது.

ருக்கு நாலைந்து புத்தகங்களோடு இறங்கி வந்தாள். “இந்தாங்க, மாமா!” என்று அவர் முன்னால் புத்தகங்களை வைத்தாள்.

“என்ன இது?” என்றார் சுப்புசாமி.

“உங்களுடைய தேவாரம், திருவாசகம், சுந்தர காண்டம், எல்லாம்தான்.”

“வை, வை” என்று துப்பறியும் தலைப்புக்களைப் பார்த்துக் கொண்டே உற்சாகமாகச் சொன்னார் சுப்புசாமி. சொல்லி விட்டு உள்ளே போய் மணிபர்ஸை எடுத்து வந்தார். காரை நிறுத்தி விட்டு முகப்புக்கு அப்பால் ஒதுங்கி நின்று கொண்டிருந்த குருசாமியிடம் சென்று பணத்தைக் கொடுத்து என்னவோ சொல்லிவிட்டு வந்தார். உடனே காரை எடுத்துக் கொண்டு வெளியே கிளம்பி விட்டான் அவன்.

புத்தகங்களை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தார் அவர்.

“இலை போட்டாச்சு, அண்ணா!”

“இதோ.”

இலை முன் உட்கார்ந்தவர் பக்கத்திலேயே புத்தகங்களை வைத்துக் கொண்டார். ஒவ்வொன்றாகப் புரட்டினார்.

“மாமா! இன்னும் நாலு நாட்கள் விச்ராந்தியாகப் பாராயணம் பண்ணலாம்!” என்றாள் சந்திரா.


“ஆமாம்” என்று பிஸ்கட்டைக் கண்ட குழந்தை போல் அந்தத் துப்பறியும் நாவல்களைப் புரட்டிப் புரட்டி, தடவித் தடவிப் பூரித்தார் சுப்புசாமி. “நீயானா டால்ஸ்டாய், பர்னாட் ஷா, தாமஸ் மான் இப்படிக் குப்பை எல்லாம் வாங்கி வந்து என் தலை மேலே உதிர்த்துக் கொட்




டுவே" என்று சந்திராவைப் பார்த்து முகத்தைச் சுளித்தார். "மாமாவுக்கு கம்பன், காளிதாசன், ஷேக்ஸ்பியர்கூடக் குப்பை தான். நீங்கள் இன்னும் இரண்டு மூணு துப்பறியும் நாவலே வாங்கி வாருங்கள். மாமாவுக்குக் கனகாபிஷேகம் பண்ணினாற் போல ஜன்ம சாபல்யம் வந்துவிடும்" என்றான் சந்திரா ருக்கு வைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே...

"ஆமாம். வாழ்க்கையைத் தோண்டி எடுத்துக் கண் முன்னாலே காட்டுறாங்களாம். இந்தச் சோத்துக்கு லாட்டரியையும் ஏமாத்தை யும்தான் கண்ணாலே பார்த்து, பட்டு அனுப விச்சிண்டிருக்கோமே. அப்பறம் இவங்க வேற என்னத்துக்குச் சொல்லணும்? வேலெ மெனக் கட்ட தடிப் பயலுங்க."

ருக்குவுக்குச் சிரிப்பாக வந்தது. "ஏன் மாமா, நீங்கள் இதுவரையில் எத்தனை துப்பறி யும் நாவல்கள் வாசித்திருப்பீர்கள்?" என்றான்.





"இவ்வளவு" என்று இலை ஓரமாக நாகம்மாள் வைத்த பருப்புப் பொடியைச் சுட்டிக் காட்டினார் அவர். "இந்த ஒரு ஸ்பூன் பருப்புப் பொடியிலேஎத்தனை பொடி இருக்குன்னு. எண்ணிச் சொல். அதுக்கும் மேலே பத்து புத்தகம் அதிகம் வாசித்திருப்பேன்."

"ஐயோ...என்ன நடாக! என்ன புண்ணியம்! த்லொ த்லொ த்லொ!" என்று சந்திரா மூக்கைக் கொட்டினாள்.

"நீ ஆயிரம் தடவை மூக்கைக் கொட்டினாலும் தகுமடி, பெண்ணே!..."

"இத்தனை வாசித்தும் அலுக்கவில்லையா, மாமா?" என்று குறுக்கிட்டாள் ருக்மிணி.

"ஏன் அலுக்க வேண்டும்?" என்றார் சுப்புசாமி சாவதானமாக.

"ஏதாவது பிரயோசனம் உண்டோ, இவ்வளவு வாசித்து?"

"நானே துப்பறிகிற மேதாவியாய் விட்டேனே."

"அப்படியா?"

"ஆமாம். இப்ப நீ எங்கே போய் விட்டு வந்தாயென்று சொல்லட்டுமா?. நீ சொன்னது கடைக்குப் போகிறேன் என்று... ஆனால் போனது அனந்தசாமியின் வீட்டுக்கு."

ருக்குவுக்கு இதைக் கேட்டதும் சட்டென்று யாரோ தள்ளிவிட்டாற் போலிருந்தது. ஆனால் மனத்தளவில் அந்தத் திகைப்பை அடக்கி, கண்ணில் தெரியாமல் சமாளித்துக் கொண்டு சிரித்தாள்.

"குருசாமி சொல்லியிருப்பான்."

"குருசாமியோடுதான் பேசினேனா? அதை நீதானே பார்த்துக் கொண்டிருந்தாய்."

"புஸ்தகத்தைக் கூடப் பிரிக்காமல் அவனிடம் என்னமோ வாசலில் போய்ப்பேசினீர்களே."

"அதுவா? சினிமாவுக்கு நாலு டிக்கெட்டு 'புக்' பண்ணிக் கொண்டு வாடா என்று சொல்லப் போனேன்."

"சினிமாவுக்கா?"

"ஆமாம்."

"என்றைக்கு?"

"இதோ, சாப்பிட்டவுடன்."

"இப்ப எதுக்கு சினிமா?"

"முப்பது வருஷங்களாக ஏமாற்றினவனைப் பார்த்திருக்கிறாய். அந்த அதிர்ச்சி தணிய வேண்டாமோ?"

உடனே ருக்மிணி நாகம்மாளை நிமிர்ந்து பார்த்தாள். நாகம்மாள் அண்ணனைப் பார்த்தாள். அண்ணன் புஸ்தகத்தை இடது கையால் பிரித்துக் கொண்டிருந்தார். சந்திரா தலை நிமிரவில்லை.

இரண்டு விநாடிகள் கழித்துப் புத்தகத்தைக் கீழே வைத்து நிமிர்ந்த ருக்குவைப் பார்த்தார் சுப்புசாமி.

"நீ என் தங்கையை அப்படிப் பார்க்கிறது எனக்குப் பிடிக்கவில்லை" என்றார்.

ருக்குவின் தலைகுனிந்து விட்டது.

"எனக்குத் தெரியாமல் எந்த ரகசியத்தைக் காப்பாற்றப் போகிறாய் நீ? நான் என்ன மனுஷன் இல்லையா? உன் சிநேகிதிக்கு அண்ணா இல்லையா? எனக்கு அப்புறம்தானே இந்தச் சிநேகிதியே உனக்குச் சிநேகிதமானாள்! சரி. அப்படியும் பெரிய ரகசியமாக ஒன்றும் சொல்லி விடவில்லையே அவன்! கலியாணம் பண்ணிக்க வேண்டியவன் ஓடிப் போனான். அந்தப் பெண்ணும் கலியாணம் பண்ணிக்காமலேயே நாளை ஓட்டி விட்டது. கடைசியில் ஒரு நாள் சிநேகிதர்கள் வீட்டிலேயே அவனைப் பார்த்தது. என் தங்கைக்குத் தெரிந்து நான் தெரிந்து கொள்ளக் கூடாத ரகசியம் என்ன இருக்கிறது இதிலே?"

பொய்க் கோபமும் சிரிப்புமாக வந்த அந்தக் குரலில் ஒரு தனிப் பரிவு ஆழ்ந்து தொனித்தது. கூடல், மனம் எல்லாவற்றையும் நினைக்கிறாற் போன்று ஓர் ஒட்டுறவு. ருக்குவை அந்தப் பாசம் ஒரு கணம் சிலிர்க்க அடித்தது.

"நீங்கள் ஆனாலும் முரடு மாமா" என்றாள் சந்திரா.

"பார்த்தால் தெரியவில்லையோ! நீ வேறு அதைச் சொல்லணுமா?" என்றார் சுப்புசாமி.

அப்புறம் அந்தப் பேச்சு தொடரவில்லை. தொடரக் கூடாது என்று வேண்டுமென்றே எல்லோரும் முடிவு கட்டினாற்போல் அந்தரத்தில் நின்று விட்டது.

ருக்குவுக்கு மனசு திடீரென்று இலேசாகி விட்டது. எதிர்பாராமல் காலில் இடித்து உயிரைத் துடிக்கச்செய்யும் வலி மறைந்து விட்டாற்போல் மனம் விடுதலைப் பெருமூச்சு விட்டது. சுப்புசாமியும் அந்த ரகசியத்தை அறிந்து கொண்டது. திடீரென்று யாரோ கத்தியால் அறுத்துச் சிகிச்சை செய்து பளுவை நீக்கி விட்டாற் போல் தோன்றியது. தன்னறியாமல் "நாகம்மா கைதான்" என்று முகம் மலர்ந்து சொன்னாள் ருக்கு.

"என்னடி வந்தது என் கைக்கு?"

"இந்த மாதிரி வற்றல் குழம்பு வைக்கத் தெரிந்த கைதான் கை."

"ஏன், உனக்கு வைக்கத் தெரியாதா?" என்றார் சுப்புசாமி.

"எனக்கு வற்றல் குழம்பின் சரித்திரம் தான் சொல்லத் தெரியும்."

"என்ன சரித்திரம், சொல்லு?"

"கறிகாய் கிடைக்காத பாலை நிலத்தில் பிறந்த முறை இந்தக் குழம்பு."

"அது பூகோளமல்லவா? சரித்திரம் இல்லையே! இதைவிட நன்றாகச் சரித்திரம் சொல்லுவேனே நான். ஓர் அளவுக்கு வருங்காலத்தின் சரித்திரம்கூடச் சொல்வேன்."

"வருங்காலச் சரித்திரம் கூடவா?"

"ஆமாம், உதாரணமாக, இந்த ஜூலை மாசத்திலிருந்து, நீ இந்தப் பட்டணத்துக் காலேஜிலேயே வேலை பார்க்கப்போகிறாய்?"

"என்ன மாமா இது?"

"காலமே வேடிக்கையாகச் சொன்னேன். இப்போது வினையாகச் சொல்கிறேன்" என்றார் சுப்புசாமி.

"எந்தக் காலேஜ் மாமா?" என்று கேட்டாள் சந்திரா.

"ஏதோ ஒரு காலேஜ்."

"நான் எதுக்கு இங்கே வரணும், டில்லியிலிருந்து?"

"எதுக்கு என்றால்? இருபத்தைந்து வருஷங்கள் டில்லியில் இருந்தாயிற்று. இனிமேல் நம்ம மனிதர்கள் இருக்கிற இடத்தில் இருக்கிறது."

"மாமா சொல்கிறதும் வாஸ்தவம் தான்" என்றாள் சந்திரா. "கோடி ரூபாய் சம்பாதித்தாலும் கோடி வசதிகள் இருந்தாலும் வேற்று மண்ணில் போய் எப்படிச் சுகமாக வாழ முடியும்? வேடிக்கைக்காக வேண்டுமானால் கொஞ்ச நாட்கள் இருக்கலாம்."

ருக்குவுக்குக் கொஞ்சம் குழப்பமாக இருந்தது. இவள் எங்கே இருந்திருக்கிறாள், எந்தத் தேசத்தில் எத்தனை வருஷங்கள் வளர்ந்திருக்கிறாள், இப்படியெல்லாம் பேச?

"என்ன பார்க்கிறீர்கள்? நான் சொல்கிறது சரியில்லையா?" என்றாள் சந்திரா.

"நீ சொல்கிறதனால்தான் சந்தேகமாயிருக்கிறது. அப்படி அலுத்துப் போகும்படியாக நீ எவ்வளவு காலம் வேறு இடத்தில் இருந்தாயோ!"

"இரண்டு நாட்கள், இரண்டு வாரம் உல்லாசப் பயணம் என்று வெளியில் சுற்றும்போது எனக்கு 'வீட்டுக்கு எப்பொழுதடா போய்ச் சேருவோம்' என்றிருக்கும். மூன்றும் வருஷம் திருக்குற்றாலம்போய் ஒரு பதினைந்துநாள் தங்கினது கூட எனக்குத் தாங்கவில்லை."

"இந்த மெட்ராஸ் புழுக்கம், குழாய்த் தண்ணீர் எல்லாவற்றுக்கும் ஏங்கிப் போய் விட்டாயாக்கும்!" என்றார் சுப்பு.


அழகு மிகுந்த நீண்ட
அடர்ந்த கூந்தலுக்கு
பாமாலிவ்
பெர்ப்யூம்ட் கோகோனட் ஹேர் ஆயில்
குடும்பம் முழுவதிற்கும்
மிக்க உகந்தது !
பெரிய எகானமி அளவு புட்டியிலும்
பணம் மிச்சமாகிறது! மூன்று விற
விருப்பான வாசனைகளில் கிடைக்கும்:
லவண்டர், மல்லிகை, ரோஜா.

இந்தியாவில் 50 ஆண்டுகளுக்கு
மேலாக வீடுகளிலும்
தொழில்களிலும் பெரிதும் விரும்பி
உபயோகிக்கப்படுபவை



ஷாலிமார் உட்கோட்

ரெடி மிக்ஸட் பெயிண்ட்

மரச் சாமான்களின் உள் பூச்சு. வெளிப்பூச்சுகளுக்கு. நீடித்து உழைக்கும் வெடிப்பு உண்டாகாது.

* ஸ்டீல் வேலைக்கு ஷாலிமார் ஸ்டீல்கோட் உபயோகிக்கவும்.

ஷாலிமார் லஸ்ட்ரால்

அலுமினியம் பெயிண்ட்

கடுமையான சீதோஷ்ணகாலங்களில் வெளிப்பாகங்களை நன்கு பாதுகாக்கிறது. கொப்புளம் உண்டாதல், உதிர்ந்து போதல் கறுப்பாகுதல் இவை ஒன்றும் இருக்காது.

BRIGHT

SHALIMAR

SHALIMAR PAINT, COLOUR & VARNISH CO., LTD.

Calcutta - Bombay - Madras - New Delhi - Kanpur

(பர்மாவிற்கும் சிலோனுக்கும் ஏற்றுமதியாளர்கள்)

JWTSPW.544 TAM

ருக்கு யோசித்தான். சந்திரா சொன்னது பெரும்பாலும் உண்மை என்று தான் தோன்றியது.

இருபத்தைந்து வருஷங்கள் டில்லியில் வாழ்ந்தது அவனுக்கு நினைவு வந்தது. புதுடில்லியின் மலர்கள் நினைவுக்கு வந்தன. வேப்பஞ்சாலைகளும், நாவல் சாலைகளும், வாதரட்சை சாலைகளும் நினைவுக்கு வந்தன. தன் வீட்டு வாசலில் ஊசி ஊசியாக இலைகளைத் தொங்க விட்டு அசையும் பைன் மரம், தோரணை வில்லேலா, ஜூகராண்டா, வேப்ப மரங்கள் - நினைவுக்கு வந்தன. பழைய டில்லி, புதுடில்லியின் மூலை முடுக்கெல்லாம் அத்துபடியாகி விட்டது அவனுக்கு. புதிதாக வருபவர்களிடம், தான் டில்லியிலேயே பிறந்து வளர்ந்தது போல் பல சமயங்களில் பேசின நினைவு கூட வந்தது அவனுக்கு. அவ்வளவு சொந்தமாகப் பழகி விட்டது அந்த மண். ஆனால் திடீர் திடீர் என்று இந்தச் சொந்தம் எல்லாம் மறைந்து விடும். கட்டை வண்டியில் முட்டைகோஸையும் கத்திரிக்காயையும் மலைமலையாகச் சுமத்தி ஓட்டி வரும் காய்கறிவாலாவைப் பார்க்கும் போது, அவனுடைய கச்சம், சட்டை, முன்னால் மேல்நோக்கிக் கூர்ந்து வளைந்த செருப்பு, சட்டை மேல் போட்டிருக்கிற கையில்லாத கம்பளி மார்புச் சட்டை, நெற்றிச் சுருக்கம்—இவைகளைப் பார்க்கும்போது, தான் ஏதோ சத்திரத்தில் வந்து தங்கியிருக்கிற நாடோடி மாதிரி ஓர் உணர்ச்சி அவனைத் தனியாக நிற்க வைத்து விடுகிறதுண்டு. வெளுத்த துணிகளை இஸ்திரி போட்டுத் தருவதற்காக, மத்தியானம் தள்ளு வண்டியைத் தள்ளி வரும் பையனைப் பார்க்கும் போதும் இந்தத் தனிமை வந்து விடும். அவன் குல்லாய், அமுக்கு நிஜார், காதில் வளையம் — எல்லாம் இந்த உணர்ச்சியைப் பெருக்கிக் கொண்டேயிருந்த நினைவு வந்தது. அவர்களுடைய நடை, பார்வை சாலை ஓரமாக முழங்காலைக் கட்டி உட்கார்ந்திருக்கிற இளைப்பாறல் — எதைப் பார்த்தாலும் இந்த "எங்கள் ஊர் இது" தெரியாமல் இராது. 'உங்கள் புத்தி, உழைப்பு எல்லாவற்றையும் நாங்கள் வாடகைக்கு எடுத்திருக்கிறோம். இருக்கிற வரையில் சௌகரியமாக இருந்துவிட்டு ஊரைப் பார்க்கப் போய்ச் சேருங்கள்' என்று சொல்வது போலிருக்கும். மரத்தடியில் ஐஸ்கட்டி மீது கரும்புத் துண்டங்களை நறுக்கி வைத்து விற்கும் கரும்புக்காரனின் தூக்கத்தைப் பார்க்கும்போது, தான் பிழைக்க வந்தவன், அந்த மண்ணில் ஒட்ட முடியாதவன் என்ற தனிமை தான் ஓங்கி நிற்கும்.

சந்திரா அனுபவித்துச் சொன்னாளோ, என்னவோ, சொன்னது நிஜம்தான்.

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் சந்திரா.

"நீ சொல்வது சரிதான். ஆனால் இந்த உணர்ச்சியை அழித்து விடத்தானே இன்றைய உலகம் கச்சை கட்டிக் கொண்டிருக்கிறது. நாடுகள், எல்லைகள், பாஷைகள் எல்லாவற்றையும் இடித்து விட்டு மனித குலம், உலகம் எல்லாம் ஒன்று என்று சொல்லிக் கொண்டு" என்றான் ருக்மிணி.

"அப்படியானால் அந்த எலைக்மா அவ்வளவு கஷ்டப்படுவானேன்? பேசாமல் கங்கைக் கரையிலேயோ, காவேரிக்கரையிலேயோ வந்து வேண்டும் என்பதைத் தின்றுகொண்டு சௌக்கியமாகக் காலந்தள்ளக் கூடாதா? ஏன் அந்தப் பனிப் பொட்டலில் உயிரை வைத்து இழுக்க வேண்டும்?"

"அப்படிச் சொல்லாதே. டில்லியில் முருங்கைக்காய் என்ற பேர்கூட அந்தக் காலத்தில் கிடையாது. இங்கிருந்து இரண்டு மூன்றுபேர்கள் போத்தைக் கொண்டு போய் நட்டார்கள். இப்பொழுது டில்லி முருங்கைக்காயின் ருசி இந்த ஊரிலோ, காவேரிக் கரையிலோ கிடைக்காது."

"அந்த முருங்கைக்காய் ஹிந்துஸ்தானி பேசுகிறதோ?"

"போதும். இந்தச் சண்டைக்கு முடிவே கிடையாது. வர்ணம், பாஷை, பருமன் - ஒரு வித்தியாசமுமில்லாத மனிதன் பிறக்கட்டும். நானோ, நீயோ அந்தக் கிருதயுகத்தைப் பார்க்கப் போகிறதில்லை. இப்பொழுது நடக்க வேண்டியதைச் சொல்லு. நீ இந்த ஊரில் இருக்கப் போகிறாயா, இல்லையா? உங்கள் சித்தப்பாவும் இல்லை. சித்தியை வைத்துக் கொண்டு, டில்லியில் என்ன கொட்டிக் கிடக்கிறது? இங்கேதான் வந்து இரேன்" என்றார் கப்புசாமி.

அனந்தசாமியிடம் தன் தீர்மானத்தைச் சொல்லிவிட்ட அதே ருக்குவுக்கு, இவ்விடம் "சரி" யென்று சட்டென்று வாய்விட்டுச் சொல்ல நா வரவில்லை.

'அதற்கென்ன வந்து விட்டால் போகிறது!" என்று இழுத்தான்.

"பின்னே பேசாமல் இரு."

கப்புசாமி ஏன் இப்படி வற்புறுத்தாமல் வற்புறுத்துகிறார் என்று அவனுக்குப் புரியவில்லை. ஆனால் உள்ளுக்குள்ளே ஆழ்ந்து ஒளிந்த அன்பின் தொனிப்பு அவனைச் சற்றைக்கொருதரம் பாதுகாப்பாக அணைப்பது போலிருந்தது. அப்பா, சித்தப்பா இரண்டு பேரும், மறைந்து விட்டு, மீண்டும் ஒரு வடிவாகக் கூடி வந்து நிற்பது போலிருந்தது. (தொடரும்)



என்ன புத்தகம் படிக்கிறார்?
720

தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்

லிமிடெட்

★

எல்லா மக்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய

ஒரு ரெக்கரிங்
டெபாஸிட் திட்டத்தை

ஆரம்பித்திருக்கிறார்கள்

★

குறைந்தபட்சம் ரூ. 5/—லிருந்து அதிகபட்சமாக, அதன் பெருக்குத் தொகை ரூ. 500/— வரையில் டெபாஸிட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

பிரதி மாதம் டெபாஸிட் செய்யும் தொகையான

	ரூ. 5	ரூ. 10	ரூ. 50	ரூ. 100
	கீழ்க்கண்டபடி பெருகும்			
34 மாதங்களில்	ரூ. 180	ரூ. 360	ரூ. 1,800	ரூ. 3,600
48 மாதங்களில்	ரூ. 250	ரூ. 500	ரூ. 2,500	ரூ. 5,000
85 மாதங்களில்	ரூ. 500	ரூ. 1,000	ரூ. 5,000	ரூ. 10,000

முழு விவரங்களுக்கு பாங்கின் எந்தக் கிளைக் காரியாலயங்களுக்காவது தயவு செய்து எழுதவும் :

எம். ஸிடி. முத்தையா
சேர்மன்

ஸி. பி. துரைக்கண்ணு
ஜெனரல் மானேஜர்



அஞ்சறைப் பெட்டி

"உலக சரித்திரத்தில் அளப்பரிய கொடுங்கோன்மையும் அழித்தலும் அராஜகமும் இருந்து வந்துள்ளது என்றாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. ஆனால் இவ்வளவுக்கும் பிறகு மனித சமுதாயம் கௌரவம், தைரியம், அன்பு, நன்னடத்தை இவற்றைக் கைவிடாமல் பாதுகாத்துக் கொண்டிருப்பதுடன் அதிகரித்துக் கொண்டுமிருப்பது வியக்கத்தக்க விஷயம்தான். இதனை உணர்ந்து நாம் ஊக்கமடையலாம்."

எரிக் பிராம் என்ற அறிஞர் இப்படி எதிர்காலத்திலும் மனித குலத்தினிடமும் தமக்குள்ள நம்பிக்கையைப் புலப்படுத்துகிறார்.

அவர் நம்பிக்கை வீண் போகாதிருக்கட்டும். மூன்றாவது உலக மகா யுத்தம் மூளாமலே போகட்டும். ஆனால் அவர் நம்பிக்கை பொய்த்துப்போய்




"அதோ தூங்குகிறதே குழந்தை அதன் இதழ்களில் ஒளியாட்டம் காட்டும் அப்புன்னகை எங்கு உதயமாயிற்று என்று யாரேனும் அறிவாரா? பிறை மதியின் சாம்பிய இளம் கதிரொன்று தேய்ந்து மறையும் கார்கால மேகத்தின் விளிம்பைத் தொட்டது. அப்போது தான், அங்குதான், பனியினால் கழுவப்பட்ட உதய காலம் கண்ட கனவாக அந்தப் புன்னகை பிறந்தது."

அலெக்ஸாண்டர் பிளமிங் 1929-ம் வருஷம் பெனிஸிலினைக் கண்டு பிடித்தார். சிறிது காலத்தில் அதன் மகிமையை உணர்ந்து கொண்ட மருத்துவர்கள் சஞ்சீவி மூலிகையைக் கண்டதுபோல் ஆனந்தமடைந்தார்கள்.

ஆனால் சமீப காலத்தில் பெனிஸிலினுடைய 'மவுசு' வெகுவாகக் குறைந்து போயிருக்கிறது. காரணம் இதுதான்:

நோய் உண்டு பண்ணும் கிருமிகளுக்குத் தேவையான ஆகாராதிகள் அவற்றுக்குக் கிடைக்காமல் தடுத்துவிடுகிறது பெனிஸிலின். அது கிருமிகளைச் சாகடிக்கும் விதமே இப்படித்தான். ஆனால் அந்தப் பொல்லாத கிருமிகளோ தங்களுக்குத் தேவையான ஆகாராதிகளைத் தாங்களாகவே உற்பத்தி செய்துகொள்ளும் திறமையை விரைவில் பெற்றுவிடுகின்றன. அதன்பின்னர்



புதாக ரேடியோக்கள் பல அந்தக் கடையில் இருந்தன. ஜரிகை அங்கவஸ்திரம் பட்டுச் சொக்காய் சகிதம் வந்த அவருக்கு ஒவ்வொரு ரேடியோவின் குணாதிசயத்தையும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார் கடைக்காரர். ரொம்ப அக்கறையுடன் கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெரிய புள்ளி "புது ரேடியோவை வாங்கும் போது பழைய செட்டுக்கு ஒரு விலை போட்டு



"தோழா மானுடா! ஏனப்பா, உன் பார்வை குனிந்தே போய் விட்டது?" என்ற குரல் பல யோசனைகளுக்கு அப்பாலுள்ள மனிதனுடைய உள்ளத்தில் ஒலித்தது.

மனிதன், தன்னுடைய நம்பிக்கை வறண்ட கண்களைக் கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

"நீர் எப்போதும் அங்கேயே இருக்கிறீரே?" என்று பதில் கேள்வி கேட்டான்.

"நான் என்ன செய்யட்டும்? உன்னை மாசுபடுத்தும் அந்தப் புழுதி தோய்ந்த கரங்களுடன், மார்புடன் என்னைக் கட்டித் தழுவ முயலுகிறாயே?"



மூன்றாம் உலக மகாயுத்தம் மூண்டு விட்டால் அப்போது வல்லரசுகள் அணு ஆயுதங்களைத்தான் உபயோகிப்பார்களா? அல்லது அதைக் காட்டிலும் பயங்கர ஆயுதங்களை அதற்குள் கண்டு பிடித்து விடுவார்களா?

இதைப்பற்றி ஐன்ஸ்டீனுடைய கருத்து: மூன்றாவது உலக மகாயுத்தத்தில் எத்தகைய ஆயுதங்கள் பயன்படுத்தப்படும் என்பது பற்றி நான் திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை.


ஆனால் நான்காவது உலக யுத்தம் ஏற்பட்டால் எந்த ஆயுதங்களை உபயோகிப்பார்கள் என்று தீர்மானமாகச் சொல்ல முடியும்: வில் அம்பும் குண்டாந்தடியும்தான்!

இதுபோன்ற நெஞ்சையள்ளும் வாசகங்களைக் கொண்டது குருதேவர் தாகூரின் கீதாஞ்சலி. வங்காளியில் தாகூர் இயற்றிய இந்தக் 'கீதாஞ்சலி'யின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு நோபல் பரிசும் கிடைத்தது. உடனே கவியரசருக்கு உள்நாட்டிலிருந்து பாராட்டுக் கடிதங்கள் வந்து குவிய ஆரம்பித்தன. வாழ்த்துரை அனுப்புவதில் வங்காள சர்வகலாசாலை மட்டும் பின்தங்கி விடுமா என்ன? அதுவும் அனுப்பி வைத்தது. அப்போது தாகூர் எழுதினார்:

"இந்தப் பாராட்டுக்களெல்லாம் நோபல் பரிசுக்குத்தானே ஒழிய எனக்கில்லை." இப்படி அவர் மனம் கசந்து எழுதக் காரணமும் இருக்கத்தான் செய்தது. அன்று வரையில் வங்காளி மொழிப் பரீட்சையில், 'கீழ்க்கண்ட பாடல்களிலுள்ள பிழைகளைத் திருத்தவும்' என்ற வினாவின் கீழ் அவரது இதே கீதாஞ்சலியின் மூலக் கவிதைகளில் பல கொடுக்கப்பட்டு வந்தது அவர் அறியாத சமாசாரம் அல்லவே!

எத்தனை பெனிஸிலினை உடலில் ஏற்றினால்தான் என்ன? அந்தக் கிருமிகளுக்கு லட்சியமில்லை! ஜாம் ஜாமென்று உயிர் வாழ்கின்றன. நோயாளிக்கு வேதனை தருகின்றன.

பெனிஸிலினுக்குத் தம்பி ஸ்ட்ரெப்டோமைஸின் என்னும் மருந்து. கிருமிகளை அழிப்பதற்காகக் கொடுக்கப்படும் இம்மருந்து கிருமிகளுக்கு ஆகாரமாகவே அமைந்து விடுகிறது! ஆம், நாளடைவில் மருந்தையே உண்டு கொழுத்து வளர அக்கிருமிகள் பழகிக் கொள்கின்றன! மருந்து கொடுப்பதை நிறுத்தினால் பட்டினியால் சாகின்றன! நோயாளி குணம் பெறுகிறான்!



எடுத்துக் கொள்வீர்களா?" என்று கேட்டார்.

"ஓ, பேஷாக!" என்றார் கடைக்காரர்.

"அப்படியானால் உடனே இந்த 'செட்'டை எடுத்துப்போய்க் கோவிந்துதெருவில் எட்டாம் நம்பர் வீட்டிலுள்ளோர் தலையில் எப்படியாவது கட்டி விட்டு வாருங்கள்" என்றார் ஜரிகை அங்கவஸ்திரக்காரர்.


கடைக்காரருக்கு ஏமாற்றமாய்ப் போய் விட்டது. "நீங்களே இந்த ரேடியோவைக் கேட்க ஆசைப்படுவீர்களோ என்று நினைத்தேன்" என்றார் ஏக்கத்துடன்.

"நான்தான் ஐயா கேட்கப் போகிறேன்" என்றார் வந்தவர். "அதே தெருவில் ஏழாம் நம்பர் வீட்டில் வசிக்கிறேன் நான். இப்போது பக்கத்து வீட்டிலுள்ள ரேடியோ மகா மோசம். கேட்கவே பிடிக்கவில்லை!" என்று ஒரு போடு போட்டார் அவர்.

"என்னைச் சிருஷ்டிக்க நீர் உபயோகித்த புழுதியை விட்டு நான் எப்படி விலகமுடியும்? நான் நிமிர்ந்து நேராக நிற்பதற்கே இந்தப் புழுதிதானே ஆதாரம்? புழுதியைக் கண்டு அஞ்சும் உமக்கு, அதன் மீது நின்றும் என்னை அறிந்து கொள்ளச் சக்தி உண்டா? நீர் அந்தச் சக்தி பெற்றுக் கீழே வரும் வரை நான் இந்தப் புழுதியில் கண்டெடுத்த—அதில் என்னோடு பிறந்த என் சகோதரனை இந்த இரும்புத் துண்டை வைத்து என்னைப் பாதுகாத்துக் கொள்கிறேன்" என்று குனிந்து நெருப்பை ஊதலானான். குகையில் பளபளவென்று மின்ன ஆரம்பித்தது.

—புதுமைப் பித்தன்





ஜூலை
1 முதல்
நரசு
ஸ்டூடியோவின்
உன்னத
தயாரிப்பு
ஸ்ரீ
வள்ளி
முழு நீள கலர் படம்
டைரக்ஷன்
T.R. ராமண்ணா
சென்னை
காஸினோ · பிராட்வே · உமா
மற்றும் தென்னாடெங்கும்
நரசு ஸ்டுடியோஸ்

ELEGANT



31. ஐரோப்பிய யாத்திரை

விமர்சகர்களிலே சில 'தேவாங்குகள்' உண்டு. எந்த அற்புதமான நிகழ்ச்சியாக இருந்தாலும் சரி, எவ்வளவு உயர்ந்த புத்தகமாக இருந்தாலும் சரி, அனுபவிக்கச்சிறிதும் கொடுத்து வைக்காத பிறவிகள் இவர்கள். காய்ச்சல்காரனுக்குப் பாதம் ஹல்வா சாப்பிட்டாலும் கசப்பாகத்தான் இருக்கும் அல்லவா! அந்த மாதிரி ஒரு நோய் பிடித்த மனிதர்கள் இவர்கள்! கசப்பு என்பது ஹல்வாவில் இல்லை. ஜுரத்தின் கோளாறு அது!

இப்படிப்பட்ட இலக்கிய நோயாளிகளிலே ஒருவர் எனக்கு அருகிலே விருந்த இருக்கையில் உட்கார்ந்து கொண்டு எடின்பரோத் திருவிழாவில் நடைபெற்ற உன்னதமான சில கச்சேரிகளைப் பிய்த்து எறிந்துகொண்டிருந்தார்! எல்லாருக்கும் பிடித்திருந்த சில நிகழ்ச்சிகளைக் காரசாரமாகத் தாக்கிப் பேசுவதே தம்முடைய மேதைக்கு அடையாளம் என்று நினைத்து 'விமர்சனம்' செய்துகொண்டிருந்தார்! எனக்கு முன் வரிசையிலே உட்கார்ந்திருந்த பெண்மணி அடிக்கடி பின்புறம் திரும்பி விமரிசகரின் அபிப்பிராயங்களை உணர்ச்சியோடு எதிர்த்துப் பேசினார். நேரம் போவதே தெரியாமல் யாத்திரை நடந்து கொண்டிருந்தது! கடைசியில் ஒரு கட்டத்தில் அந்தப் பெண்மணி என்னைப் பார்த்துச் சொன்னார். "இவர் சொல்லுகிற கருத்துக்கள் ஒன்றையும் காதிலே போட்டுக் கொள்ளாதீர்கள். சுவையான பண்டங்களை இவர் சாப்பிடுவதில்லை. ஜீரணக் குறைவு என்பதை அனுபவ பூர்வமாகச் சொல்லுகிறேன்!"

இந்தப் போடு போட்ட பிறகுதான் கணவரின் விமர்சனம் நின்றது! இதற்குள் எங்கள் மோட்டார் வண்டியும் விடுதிக்கு வந்து சேர்ந்து விட்டது!

நாங்கள் சுமார் முப்பது பேர் லண்டனிலிருந்து ஒரு கோஷ்டியாகக் கிளம்பியிருந்தோம், ஐரோப்பாவை நோக்கி! பெல்ஜியம், ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, இத்தாலி, ஸ்விட்ஸர்லாந்து, பிரான்ஸ் ஆகிய ஆறு தேசங்களையும் காரிலேயே சென்று சுற்றிப் பார்ப்பதற்கான ஏற்பாட்டில் லண்டனிலிருந்து புறப்பட்டிருந்தோம்.

எங்களுடைய பிரயாணம் முதலில் விமானத்திலே தொடங்கியது. லண்டனிலிருந்து விமான மூலம் இங்கிலீஷ் கால்வாயைக் கடந்து பெல்ஜியத்திலுள்ள 'ஆஸ்டெண்ட்' நகரம் போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்து கார்ப் பிரயாணம் தொடங்கியது.

எங்கள் கோஷ்டியிலே மேலே சொன்ன வயிற்றுவலிக்காரக் 'கிரிடிக்' தவிர ஆரோக்கியமான இதயப் பண்பாடுள்ள ஓவியர்களும் எழுத்தாளர்களும்இருந்தார்கள். இரண்டொரு பாடகர்கள் இருந்தார்கள். புதிதாகக் கல்யாணமான இளம் தம்பதிகள் இருந்தார்கள். அரசாங்கப் பணியாளர்களுள் இரண்டொருவரும் இருந்தார்கள். எல்லாரும் ஆங்கிலேயர்கள். ஐரோப்பாவின் முக்கியமான நகரங்களுக்குக் காரிலே செல்வது என்றும் அங்கங்கே தங்கி அவரவர்கள் விருப்பப்படி ஊர் சுற்றிப் பார்க்க வேண்டியது என்றும் ஏற்பாடு!

பெல்ஜியம் நாட்டில் ஆஸ்டெண்ட் விமான நிலையத்திலிருந்து எங்கள் கார் புறப்பட்டதுமே ஒரு முக்கியமான மாறுதலைக் கண்டேன். இங்கிலாந்திலும் ஸ்காட்லாந்திலும் வண்டிகள் எல்லாம் நம்முடைய நாட்டிலே உள்ள பழக்கத்தைப் போலவே சாலையின் இடது புறமாகவே சென்று கொண்டிருந்தன. இங்கேயோ சாலையின் வலதுபுறமாகச் சென்றன.

இன்னொரு முக்கிய மாறுதலும் கவனித்தேன். ஐரோப்பிய நாடுகளில் ஆங்கிலமொழி மட்டும் தெரிந்திருந்தால் பயனில்லை! ஆங்கில உடையிலே எதிர்ப்படுகிற ஐரோப்பியர்கள் பலருக்கு ஆங்கிலம் தெரியாது! கார் சென்று கொண்டிருக்கும்போது வழியில் எங்காவது ஒரு விடுதியில் நின்றால், விடுதிக்குள் சென்று குழப்பமில்லாமல் சாப்பிட்டுவிட்டு வெளியே வரவேண்டுமானால் ஐரோப்பிய மொழிகளில் ஏதாவது ஒன்று தெரிந்திருக்க வேண்டும்!

லண்டனிலிருந்து நான் புறப்பட்டபோதே பி. பி. ஸி. நண்பர் ஒருவரின் யோசனைப்படி ஒரு முக்கியமான புத்தகம் வாங்கி வைத்துக் கொண்டேன். ஆங்கிலம், இத்தாலியன், ப்ரெஞ்சு, ஜெர்மன், ஸ்பானிஷ் ஆகிய ஐந்து மொழிகளிலும் சில வாக்கியங்கள் கொண்ட புத்தகம் அது. "இது என்ன விலை?" "தபால் ஆபீஸ் எங்கே இருக்கிறது?" "பாங்குக்கு இங்கிருந்து எப்படிப் போக வேண்டும்?" — இவை போன்ற சில ஆங்கில வாக்கியங்களைக் கொடுத்து, அவற்றுக்கு நேராக மற்ற நான்கு



ரீம்ஸ் நகரத் தோற்றம்

பாஷைகளிலும் மொழிபெயர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள் இந்தப் புத்தகத்திலே! இது ஒன்று கையிலே இருந்துவிட்டால் பிறகு நாம் தான் ராஜா! எந்த வீதி முனையிலும் அல்லது கடையிலும் நின்று புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தவாறு ஐரோப்பிய மொழிகளை அடித்து நொறுக்கலாம்.

இந்தப் புத்தகம் தவிர, லண்டனிலிருந்து புறப்பட்டபோது என்னை ஐரோப்பாவுக்கு அனுப்பி வைத்த 'இம்பீரியல் ரிலேஷன்ஸ் ட்ரஸ்ட்'டின் காரியதரிசி ஓர் அச்சிட்ட சிறு புத்தகமும் கையிலே கொடுத்திருந்தார். இதில் பவுன் ஷில்லிங்களுக்குச் சரியான ஐரோப்பிய நாணயங்களின் கணக்கு கொடுத்திருந்தது! லண்டனிலிருந்து புறப்பட்டபோது இதன் முக்கியம் எனக்குப் புலப்படவில்லை. பெல்ஜியத்திலும் ஜெர்மனியிலும் நுழைந்த பிறகு தான், நாணயங்களை மாற்றுவதும் கணக்குப் பார்ப்பதும் எத்தனை குழப்பமான காரியங்கள் என்று தெரிய வந்தன. அச்சிட்ட அந்தக் குறிப்பு மட்டும் என்னிடம் இல்லையென்றால் திணறிப் போயிருப்பேன். நாட்டுக்கு நாடு நாணயங்களும் அவற்றின் மதிப்பும் மாறுகின்றன. புதிய ப்ராங்குகள், பழைய ப்ராங்குகள் என்று ஒரு கணக்கு இருக்கிறது. இது மன்னாதி மன்னனையும் மதிமயங்க வைத்துவிடும். இதை யெல்லாம் பார்த்த போது அகில உலகத்துக்குமே ஒரே நாணயச் செலாவணி இருந்தால் எத்தனை வசதியாக இருக்கும் என்று நினைத்தேன்.

பெல்ஜியத்திலிருந்து ப்ரான்ஸ் நோக்கிச் செல்லும்போது வழியெல்லாம் உலக யுத்தத்தின் வடுகள் மறைந்தும் மறையாமலும் நிற்கக் கண்டேன். முதல் உலக யுத்தம், இரண்டாம் யுத்தம் ஆகிய இரண்டு பெரும் போர்களிலும் மடிந்த வீரர்களின் கல்லறைகளைப் பத்தி பத்தியாகக் கட்டி நிறுத்தி யிருந்ததைப் பார்த்தபோது மனம் துயரமடைந்தது. யுத்த அரக்கனின் பயங்கரமான நகக் குறிகளைப் போலக் கட்டடங்களில் எல்லாம் 'ஷெல்' விழுந்த காயங்களும், கோரைகளுமாக இருந்தன!

ரீம்ஸ் நகரத்திலே சுற்றிப் பார்த்து அனுபவித்த இடங்களில் மிக முக்கியமானதும் அருள்மயமானதுமாய் இருப்பது இ ந்த கோவில்தான். இங்கேதான் பழங்காலத்தில் ப்ரான்ஸ் மன்னர்களுக்கு மகுடாபிஷேகம் நடந்ததாம். 'ஜோன் ஆப் ஆர்க்' என்ற மாதரசியின் சோகக் கதை நினைவுக்கு வந்தது! அரச போகமும், உல்லாசமும், சரித்திர முக்கியமும், கலைக்காதலும் நிரம்பிய ப்ரெஞ்சு மன்னர்களின் வரலாறுகளை யெல்லாம் அந்தக் கோவில் எடுத்துச் சொல்லிக் கொண்டு நிற்கிறது! அதனுடைய கம்பீரமும், விசாலமும், பவித்திரமான தொழுகைக்கூடமும் உள்ளத்தைக் கவர்ந்தன.

ரீம்ஸ் நகரத்திலிருந்து நாங்கள் புறப்பட்டபோது காலை எட்டு மணி. பாதையின் இரு புறமும் நூற்றுக்கணக்கான ஆப்பிள் மரங்கள்! கொத்துக் கொத்தாகப் பழங்களைத் தாங்கிக் குலுங்கிக் கொண்டிருந்தன! தரையெல்லாம் பழங்கள் உதிர்ந்து கவனிப்பாரற்றுக் கிடந்தன! வயல்களிலே குதிரைகள் கட்டி உழும் காட்சி விநோதமாக இருந்தது! வரப்பும் வேலியும் கிடையாது. மற்றப்படி நம்மூர் வயல்களைப் போலவே இருக்கின்றன. வரப்புகளுக்கு ஊடே தண்ணீர் ஓடுவதற்குப் பதிலாகப் பல வயல்களில் பெரிய இரும்புக் குழாய்களின் மூலம் தண்ணீர் ஓடிப் பாய்வதைப் பார்த்தேன்!

ஆப்பிள் மரங்களைப் போலவே 'ஸிகமோர்' மரங்களும் ஏராளமாக வளர்ந்து நின்றன, சாலையின் இருமருங்கிலும்! கண்ணுக்கு எட்டிய தொலைவிலே சிறுசிறு மலைகள், பள்ளத்தாக்குகள், புல்வெளிகள்! அங்கங்கே மஞ்சள் நிற மலர்களோடு பூத்துக் குலுங்கும் அடர்த்தியான புதர்கள்! ஊடே ஊடே மூன்று இலையும் மத்தியில் செந்நிறப் பூவும் கொண்ட 'க்ளாவர்' செடிகள். நான்கு இலையும் பூவும் கொண்ட 'க்ளாவர்'ச்செடி மிகவும் அபூர்வம்! இப்படி ஒன்றைப் பார்த்தால் அது பெரிய அதிருஷ்டம் என்ற ஒரு நம்பிக்கை ஆங்கில மக்களிடையே உலவுகிறது! நானும் கழுத்து வலியும் மட்டும் எம்பினேன்! பயனில்லை! அதிருஷ்டம் அவ்வளவுதான்!

'ஜூஸ்' என்ற மலையைத் தாண்டி ஓடியது எங்கள் மோட்டார் வண்டி. பள்ளத்தாக்கில் கழுதைகள் பூட்டிய பார வண்டிகள் 'ஜம்' என்று போய்க் கொண்டிருந்தன! மலையைக் குடைந்து செல்லும் கணவாய்ப் பாதைவழியாக எங்கள் கார் சாடியபோது, பாதையின் நெருக்கமும், இரண்டு புறமும் காணப்பட்ட சரிவான பள்ளத்தாக்குகளும் பயங்கரமாக இருந்தன! 'கறுப்புக் காடுகள்' என்று அழைக்கப்படுகிற வனாந்தரத்திலே பெரிய பெரிய 'பைன்' மரங்கள் பூதாகாரமாக வளர்ந்து நின்றன! 'பர்' மரங்கள், 'ப்ளம்' மரங்கள்,

'பெர்ரி'ச் செடிப் புதர்கள் எல்லாம் ஒரே அடர்த்தியாக இருந்தன!

பிரான்ஸ் தேசத்தின் எல்லையாக விளங்கும் 'ரைன்' நதியைக் கடந்து ஜெர்மனிக்குள்ளே நுழைந்ததும் அழகான சூரிய காந்தி மலர்கள் கண்ணைக் கவர்ந்தன! இந்த மலரின் விதையிலிருந்து ஒரு தைலம் எடுக்கிறார்களாம். எனவே இந்தச் சூரிய காந்திச் செடிகளை ஏராளமாகப் பயிர் செய்கிறார்கள் இங்கே!

ஜெர்மன் நாட்டுக்குள் புகுந்ததும், என்னை மிகவும் கவர்ந்த காட்சி அவர்களுடைய வீட்டின் அமைப்பே! ஜெர்மன் தேசத்துக் கிராமங்களிலேயுள்ள பழைய வீடுகள் எல்லாம் நம் நாட்டுக் கிராமத்து வீடுகளைப் போலவே முற்றமும், சுற்றுச் சுவரும், வளைவுகளுமாக இருக்கின்றன!

ஜெர்மானியர்கள் மிகவும் சுறுசுறுப்புநிரம்பியவர்கள். காலையில் ஏழரை மணிக்கெல்லாம் ஜெர்மானியக் குழந்தைகள் கையில் புத்தகம் தாங்கிப் பள்ளிக்கூடம் செல்லுவது ஒரு நேர்த்தியான காட்சி. யுத்தத்தின் சிதைவுகளிலிருந்து ஒரு மனித சமூகம் எப்படி மறுபடியும் எழுந்து நடமாடுகிறது என்பதைக் குழந்தை முதல் முதியவர்கள் வரை எல்லாரிடமும் காணப்படுகிற சுறுசுறுப்பு மிக நன்றாக எடுத்துக் காட்டுகிறது. நவீன இயந்திர சாதனைகளைச் செய்து முடிப்பதிலே அவர்களுக்குள்ள திறமை உலகப் பிரசித்தி. ஆனால் அதே சமயம் தத்துவவிசாரணை, இந்திய மொழி ஆராய்ச்சி, ஆன்மஞானம் போன்ற துறைகளிலும் ஜெர்மானியர்களுக்கு ஒரு நாட்டம் இருந்து வந்திருக்கிறது. இது காரணமாக இந்தியர்களிடத்தில் அவர்களுக்கு ஒரு தனியான வாஞ்சையும் மதிப்பும் இருப்பதைப் பார்க்கலாம்! அறிஞர்கள், பேராசிரியர்கள் ஆகியோரைப் போலவே சாதாரணப் பொதுமக்களுக்கும் இந்தியர்கள் என்றால் ஒரு கவர்ச்சி இருக்கிறது.

தொழிற்சாலைகள், ஆராய்ச்சிக் கூடங்கள் இவற்றை யெல்லாம் சென்று பார்த்துத் தெரிந்து கொண்ட விஷயங்கள் ஒருபுறமிருக்க, ஜெர்மானியர்களிடம் நான் கண்ட இந்த இதயப் பண்பும் வாஞ்சையும் மறக்க முடியாத அனுபவமாக இருந்தது.

இந்த ஐரோப்பியப் பிரயாணத்திலேயே சுவை மிக்க காட்சிகளும், கலை நிகழ்ச்சிகளும், நிரம்பியதாய் இருந்தது இத்தாலிப் பயணந்தான்! வெனிஸ், ப்ளாரன்ஸ், ரோம், பீஸா, மிலான் ஆகிய ஐந்து நகரங்களும் ஐந்து விதத்தில் முக்கியமும் பெருமையும் கொண்ட பெரு நகரங்கள். இந்த நகரங்களிலும், பாரிஸ் நகரத்திலும் தொடர்ச்சியாகச் சில நாட்கள் தங்கிப் பார்க்க வேண்டும் என்று கருதியே லண்டனிலிருந்து நாங்கள் புறப்பட்டிருந்தோம். இந்த இடங்களை விரிவாகச் சென்று பார்ப்பதற்கு உதவியாகவே மோட்டார்ப் பிரயாணம் மேற்கொண்டிருந்தோம்! எனவே, ஜெர்மனியிலிருந்து புறப்பட்டு நெடுஞ்சாலை வழியாக ஆஸ்ட்ரியா தேசத்துக்குப் போய் அங்கிருந்து வெனிஸ் செல்வதாகத் திட்டம்! செங்குத்தான ஆல்ப்ஸ் மலைகளுக்கு மேலே சரிவானதொரு பயங்கரப் பாதையிலே ஆஸ்ட்ரியா தேசத்தை நோக்கிச் சென்றது மோட்டார் வண்டி! (தொடரும்)

'டெட்'டில் சலவை செய்த துணிகளினால்



பெருமையடையுங்கள்

- டெட்-சலவை செய்யப்பட்ட துணிகள் பிரகாசிக்கின்றன


டெட்டின் தனிரக சலவைசெய்யும் குணங்கள் உங்கள் ஆடைகளுக்குப் புத்துணியின் பிரகாசத்தை அளிக்கின்றன.

- டெட் கண்கவர பளபளவென்று சலவை செய்யும் சக்தி வாய்ந்தது

டெட் துணிகளைத் துப்புரவாக சலவை செய்கிறது. வெள்ளைத் துணிகளை மேலும் வெண்மையாக்குகின்றது.

- டெட்டினால் உங்கள் துணிகளை நவீன முறையில் சலவை செய்யுங்கள்

டெட் வெந்நீரிலும் மென்னீரிலும் துரிதமாகச் சலவை செய்கிறது. அபரிமிதமாக நுரை கட்டுகிறது டெட்டில் சலவை செய்வதால் வெள்ளை அல்லது கலர்—துணிகளுக்கோ, சில்க், ரேயன், உல்லன் துணிகளுக்கோ யாதொரு கேடும் கிடையாது.



ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிமிடெட், பம்பாய்.



திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

12

இறைவனே குருவாக வந்து ஞானத்தை ஊட்டுகிறான் என்பது நம்முடைய சமயக் கொள்கைகளின் அடிப்படையாகும். ஆசாரியனைத் தெய்வமாகவே கண்டு வழிபடுவது ஒன்றே, வீட்டைத் திறப்பதற்குரிய திறவுகோல். இந்த மூல உண்மையை நமக்கு அறிவுறுத்துகிறார் திருமூலர்.

குருவின் உருவத்தில் வந்து நமக்குத் திருவருள் புரிகின்ற இறைவனின் அந்தத் திருமேனியைத் தரிசிப்பதே ஞானத்துக்கு வேண்டிய பயிற்சி. குருநாதனின் திருநாமத்தைச் செப்புவது, குருபெருமானின் திருமொழிகளைச் செவியில் கேட்பது, அவனுடைய திரு உருவத்தை எப்போதும் தியானித்தல் ஆகிய எல்லாமே மெய்ஞ்ஞானம் பெறுவதற்குரிய வழிகளாம். இதைப் பாடுகிறார் திருமூலர்.

இந்தப் பாட்டில் ''தெளிவு'' என்று சொல்லப்படுவது ''ஞானம்''. அந்த ஞானத்தைப் பெறுவதற்கான முறைகளுக்கும் அதுவே ஆகுபெயர்.

தெளிவு குருவின்
திருமேனி காண்டல்,
தெளிவு குருவின்
திருநாமம் செப்பல்,
தெளிவு குருவின்
திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு
சிந்தித்தல் தானே!

[தெளிவு-ஞானம்; ஞானத்தைப் பெறும் முறைகளுக்கும் அதுவே ஆகுபெயர். முடிவில் முறையும் பயனும் ஒன்றாகும். முறையே பயனாக முற்றும்]

காண்பது அவனுடைய திருமேனியை; மந்திரம் அவனுடைய திருநாமம்; கேட்பது அவனுடைய திருவார்த்தையை; சிந்திப்பது அவன் திருவுருவத்தை. இவையெல்லாம்தான் ஞானத்தை அடையும் முறையாகும். அதுவே பூரணமடைந்த பொழுது ஞானமும் ஆகும்.

• • •

குருபக்தியும் ஞானமும் ஏற்பட்டு விட்டால் அதன் பின் உண்டாகிற நலன்கள் என்ன?

தானே புலன்ஐந்தும்
தன்வசம் ஆயிடும்

[தானே—புற உதவியின்றித் தானாகவே]

''காண்பதும், செப்புவதும், கேட்பதும், சிந்திப்பதும் இறைவனாகிய குருவையே பற்றி நிற்குமானால் அதாவது ஆசாரியனை இறைவனாகவே பாவித்துப் பற்றி நின்றால், மூர்க்கப் புலன்கள் ஐந்தும் தாமாகவே உன் வசம் அடங்கி விடும்'' என்று உறுதி கூறுகிறார் முனிவர்.

தானே புலன்ஐந்தும்
தன்வசம் போயிடும்

ஆன்மாவின் வசப்பட்ட ஐந்து புலன்களும், இனிமேல் ஆன்மப் போக்கிலேயே நடந்து செல்லும். 'பாகன் வழி நடத்த, அவன் ஆணையிலேயே கட்டுப்பட்டு நடந்து செல்லும் யானையைப் போல்' என்று ஒரு பழைய உரைகாரர் உதாரணம்காட்டி விளக்குகிறார். உபநிஷத்தில் புலன்களைக்

குதிரைகளாகச் சொல்லி அவற்றை நல்ல சாரதி தன் வசமாக்கிச் செலுத்துவதாக உபமானம் கூறப்படுகிறது. அதுவே இங்கேயும்.

தானே புலன்ஐந்தும்
தன்வசம் போயிடும்

[போயிடும் - வழியில் நடந்து செல்லும். தன் வசம்-ஞானம் அடைந்தவனுடைய வசம், அவனுக்குக் கட்டுப்பட்டு, அவனது ஆணைக்கு உட்பட்டு]

தானே புலன்ஐந்தும்
தன்னில் மடைமாறும்

[மடைமாறும் — செல்லும் வழி பெயரும்.]

உலக இச்சைகளில் செல்கிற புலன்கள் மடைமாறி மெய்ப்பொருளை நாடிச் செல்லும்.

இத்தனை பெரிய சாதனை எப்படிச் சித்திக்கும்? ஆன்மா தன்னைச் சார்ந்து நின்ற மற்றப் பற்றுக்களையெல்லாம் களைந்தெறிந்து விட்டுத் தன்னந் தனியே சென்றால், எம்பிரானைச் சந்திக்கும்.

தானே தனித்துஎம்
பிரான்தனைச் சந்தித்தே

[தனித்து—பற்றுக்களின் தளைகளை நீக்கிக் கொண்டு]

மனம், மொழி, மெய் இம்மூன்றும் இறைவனாகிய ஞான குருவினிடத்திலேயே ஒன்றி நின்று விட்டதால், ஆன்மாவுக்கு என்ன நேர்ந்தது என்பதைப் பாடுகிறார் திருமூலர். மற்றப் பற்றுக்களையெல்லாம் நீக்கித் தன்னந் தனியாக இறைவனைச் சந்தித்தது ஆன்மா! இந்தச் சந்திப்பினால் புலன்கள் ஐந்தும் வெளியே சென்று திரிவதை விட்டொழித்தன. ஆன்ம ஆணையில் நின்று இயங்கின. விஷய சுகங்களிலே சென்ற இச்சையானது தனது பாதையை மாற்றிக் கொண்டது. அத்தனை வேகமும் சேர்ந்து இப்பொழுது இன்னொரு வாய்க்காலிலே பாய்கிறது.

இந்த உடம்புக்குள் நிற்கிற ஆன்மா குருவின் உபதேச வழியாக, இறைவனை இந்த உடம்புக்குள்ளேயே "சந்திப்பது"தான் தவயோகம். அந்தத் தவயோகம் குருவின் திருவருளினாலே தான் சித்திக்கும். அதை இந்தப் பாட்டில் உபதேசிக்கிறார் திருமூலர்.

தானே புலனைந்தும்
தன்வசம் ஆயிடும்
தானே புலனைந்தும்
தன்வசம் போயிடும்
தானே புலனைந்தும்
தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம்
பிரான்தனைச் சந்தித்தே!

'விஷயாவிநிவர்த்தந்தே' என்கிற கீதை வாக்கியமும் இதையே உபதேசிக்கிறது. ஒருவன் உபவாசம் இருந்தால் உணவினின்று அகன்று நிற்கிறான். உணவில் அவன் காணும் ருசி அகலவில்லை! அந்த விஷய ருசியும் அகன்று விடும், பரம்பொருளைக் கண்டவுடன்! இந்த உறுதிமொழியையே திருமூலரும் தருகிறார்,

தானே தனித்தெம்
பிரான்தனைச் சந்தித்தே

என்று!

ஞானிகள் காணும் பேருண்மை ஒன்றேயானபடியினால், எல்லா சாஸ்திரங்களிலும், எல்லா மொழிகளிலும் அந்த உண்மை வியக்கத்தக்க முறையில் ஒன்றுபோலவே சொல்லப்பட்டிருப்பதைக் காண்கிறோம். "பரம் த்ருஷ்ட்வா" என்கிற கீதாசாரியனின் சொற்றொடரும் திருமூலரின் "பிரான்தனைச் சந்தித்தே" என்கிற சொற்றொடரும் ஒன்று போலவே அமைந்திருப்பதைக் கண்டு வியப்பும் ஆனந்தமும் அடைகிறோம்!



கால்கேட்டின் மூலம்
நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை
அகற்றி பற்கள்
சொத்தையாவதையும் தடுங்கள்!
COLGATE
DENTAL CREAM
வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது!
துர்நாற்றத்தை அகற்றுகிறது
சொத்தையைத் தடுக்கிறது
பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது
COLGATE
TOOTH POWDER
COLGATE
DENTAL CREAM
பரிசுத்தத்திற்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்ணிற பற்களைப் பெறவும் உலகத்திலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

கோவிந்த சந்நியாசி தனியாக ஆற்றோரம் ஒரு சின்னக் குடிசையில் ஜபதபம் செய்து வந்தார். ஊரார் 'பிக்ஷை' கொண்டு வந்து கொடுப்பார்கள். அவர்கள் தந்த அரிசி, பருப்பு, உப்பு இவற்றை ஒரு பாத்திரத்திலிட்டு அவரே அடுப்பில் ஏற்றி, பொங்கலாகச் சமைத்து சுவாமி பூஜை செய்து விட்டுச் சாப்பிடுவார். பிரம்மசாரி சீடர்கள் யாராவது ஊரிலிருந்து வந்து சில்லறைக் கைங்கரியங்கள் செய்வார்கள்.

பால், மோர், நெய் ஏதும் சாப்பிட மாட்டார். யாராவது கொண்டு வந்து கொடுத்தால் திருப்பி விடுவார்.

சந்நியாசி ரொம்ப நல்லவர். குழந்தைகளோடு விளையாடுவார். கதைகள் சொல்லுவார். ஊர்ப் பசங்களுக்கு அவரிடம் ரொம்ப அன்பு.

* * *

ஒரு நாள் கண்ணனும் வெங்கடராமனும் சந்நியாசியின் காவித் துணியைத் தோய்த்துக் காயப்போட்டு ஒரு பக்கம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு நாயும் அவர்கள் பக்கத்தில் படுத்து அவர்கள் பேசுவதைக் கவனிப்பது போல் காதை ஆட்டிக் கொண்டு அவர்களைப் பார்த்த வண்ணமாகப் படுத்திருந்தது.

"அப்படியெல்லாம் சொல்லாதே! நாய் போய் சுவாமியிடம் எல்லாம் சொல்லிவிடும். கோபித்துக் கொள்வார்" என்றான் வெங்கடராமன்.

கண்ணன் "நாய் போய்ச் சொல்லிவிடுமா? நாய் பேசுமா?" என்றான்.

"பேசும்! அதன் பேச்சு சுவாமிக்குத் தெரியும். நமக்குத் தெரியாது" என்றான் வெங்கடராமன்.

இவ்வாறு வெங்கடராமன் சொன்னதும் நாய் எழுந்து ஆசிரமத்துப் பக்கம் ஓடிப் போயிற்று.

"பார்த்தாயா! நாய் எங்கே போகிறது!" என்றான் வெங்கடராமன். கண்ணன் பயந்து போனான்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்தது கோவிந்த சந்நியாசியின் பூர்வாசிரம சரித்திரம். கண்ணனுடைய பாட்டி அவனுக்குச் சொன்ன கதை.

* * *

கோவிந்த சந்நியாசி அப்போது எட்டு வயதுப் பையன். தேசிகன் என்பது அவன் பெயர். சந்நியாசியாகிவிட்ட பிறகு 'கோவிந்தா!' 'கோவிந்தா!' என்று அடிக்கடி சொல்லி வருவதால் சந்நியாசிக்குக் கோவிந்த சந்நியாசி என்று ஊரார் பெயரிட்டார்கள்.

தேசிகன் அவனுடைய பெற்றோருக்கு ஒரே குழந்தை. சத்தியமங்கலத்தில் ஓர் ஏழைக் குடும்பம்.

பக்கத்தில் ஒரு கிராமம்—திருமங்கலம் என்பது கிராமத்தின் பெயர்—அங்கே தேசிகனுடைய தகப்பனார் சீனிவாசய்யங்காருக்கு ஒரு பரம்பரைச் சொத்து—ஒரு சிறு நிலம்—அதில் விளையும் நெல்லில் ஒரு பங்கு குடியானவன் எடுத்துக் கொண்டு மிகுதியைச் சீனிவாசய்யங்காருக்குக் கொடுப்பான். வீட்டுக்கு வேண்டியது போக மிச்சத்தைச் செட்டியாருக்கு விற்றுவிட்டு அதைக் கொண்டு குடும்பத்துக்கு வேண்டிய மற்றச் சாமான்கள் அவ்வப்போது வாங்கிக்கொண்டு கஷ்ட ஜீவனம் செய்து வந்தார். ரொம்பச் சிக்கனமாகவும் சாமர்த்தியமாகவும் வாழ்க்கை நடத்தி வந்தார். மனைவி ஜானகியம்மாளும் மிக சாமர்த்தியசாலி. ஆனபடியால் ஏழைகளாயிருந்தாலும் எப்படியோ யோகக்ஷேமம் கடன் படாமல் பார்த்து வந்தார்கள்.

* * *

பக்கத்து கிராமத்திலிருந்து மாரியக்கா தினமும் தயிர் கொண்டு வந்து சத்தியமங்கலத்தில் வீடு வீடாகச்

மாரக்காவின் கணக்கு



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

சென்று விற்று விட்டுப் போவாள். வழக்கப்படி அவரவர்களுக்குத் தயிர் அளந்து கொடுத்து விட்டு, சாணி மெழுகிய தரையைத் தேய்த்து எடுத்துச் சுவரில் கால் படிக்கு ஒரு பொட்டு போட்டுவிட்டுப் போவாள். மாதக் கடைசி, பொட்டுக்களை எண்ணிக் கணக்கு தீர்த்துக் கொண்டு சேரவேண்டிய பணம் வாங்கிக் கொண்டு போவாள். இது பரம்பரை வழக்கம். யார் வீட்டிலும் கணக்கைப் பற்றிச் சச்சரவு கிளம்பியதில்லை.

* * *

ஒருநாள் ஜானகியம்மாள் சுவரிலிருந்த தயிர்க்காரியின் பொட்டுக்களை ஏதோ செய்து கொண்டிருந்தாள். தூர நின்று கொண்டிருந்த தேசிகன் பார்த்துக் கொண்டிருந்தான். சில பொட்டுக்களைத் தேய்த்துவிட்டு அந்த இடத்தில் ஜானகியம்மாள் சுண்ணாம்பும் தண்ணீரும் பூசிவிட்டுத் திரும்பினாள்.


"ஏனம்மா மாரக்கா பொட்டுக்களைத் தேய்த்தாய்?" என்று கேட்டான் தேசிகன்.

"சும்மா இரு. உனக்கு ஒன்றும் தெரியாது. நீ பள்ளிக்கூடத்துக்குப் போ!" என்றாள் தாயார்.

தயிர்க்காரிக்குக் கொடுக்க வேண்டிய பாக்கியில் நாலு அணா குறைத்துக் கொடுப்பதற்காக இம்மாதிரி ஜானகியம்மாள் செய்தாள். தரித்திரத்தின் கொடுமை அவளுக்குத் தெரியும். பாவம், பையனுக்கு எப்படி விளங்கும்?

பத்து நாட்கள் கழித்து மாரியக்கா கணக்குத் தீர்த்துக் கொள்ளுவதற்காகப் பொட்டுக்களை எண்ணினாள்.

அவளுக்கு மனசு திருப்தியாகவில்லை. ஏதோ பொட்டுக்களில் கணக்கு பிசகு என்று சந்தேகப்



யட்டுப் பேசினான். "பொட்டு போட மறந்து விட்டிருக்க வேண்டும்" என்று அவன் வாதாடினான்.

"அதெப்படி மறப்பாய்? எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது" என்று ஜானகியம்மாள் வாதாடினாள். கொஞ்ச நேரம் பேச்சு வார்த்தை நடந்தபின் தயிர்க்காரி "அம்மா, நீங்கள் பிராமணாள்; நாங்கள் ஏழை. எங்களை மோசம் செய்து விட்டு நீங்கள் லாபம் சம்பாதித்து என்ன சுகம் அடையப் போகிறீர்கள்?" என்று கோபமாகப் பேசி விட்டுக் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டாள்.

• • •

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான் தேசிகன். தயிர்க்காரி மாரக்காளிடம் தேசிகனுக்கு ரொம்பப் பிரியம். அவன் எதிரில் நின்றபோது தயிர்ச்சட்டி விளிம்பில் ஒட்டியிருக்கும் வெண்ணெயை எடுத்துத் தேசிகனுக்குக் கொடுப்பாள்.

அன்று அவனுக்கு மனம் நிம்மதியில்லை. அன்று மாலை கோயிலில் வெகு நேரம் அவன் பாட்டுக்குத் தனியாய் உட்கார்ந்திருந்தான். சாப்பிட வரவில்லை. அப்பா போய் அழைத்து வந்தார்.

"ஏன் தேசிகன் ஒருமாதிரியிருக்கிறான்? உடம்பு ஏதோ சரியாக இல்லைபோலிருக்கிறது" என்றார் சீனிவாசய்யங்கார் மனைவியிடம்.

"ஒன்றுமில்லை. அவன் அப்படித்தான். ஒவ்வொரு நாள் மந்தமாக இருப்பான்" என்றாள் ஜானகியம்மாள்.

• • •

"எங்கே பையன்? எங்கே தேசிகன்?" என்று எல்லாருடைய வீடுகளிலும் குளத்தங்கரையிலும் இன்னும் பல இடங்களிலும் ஊரெல்லாம் தேடினார் சீனிவாசய்யங்கார். பையன் எங்கும் காணப்படவில்லை. ஒரு துப்பும் கிடைக்கவில்லை.

ஒரு வாரம் ஆயிற்று, இரண்டு வாரம் ஆயிற்று, ஒரு மாதம் ஆயிற்று, பையன் மறைந்தவன், மறுபடி எங்கும் காணவில்லை. அய்யங்காரும் ஜானகியம்மாளும் நிராசை பண்ணிக் கொண்டார்கள். பத்து ஆண்டுகள் கழித்து சீனிவாசய்யங்கார் விஷ சுரம் கண்டு இறந்து போனார்.

• • •

யாரோ ஸ்ரீரங்கத்திலிருந்து சத்தியமங்கலம் வந்த ஒருவர் சொன்னார்: ஸ்ரீரங்கத்து மடத்தில் ஒரு சந்நியாசி வந்திருப்பதாகவும், அவர் சத்தியமங்கலத்தில் பிறந்தவர் என்றும், ஏதோ வீட்டில் சண்டை பிடித்துக் கொண்டு ஓடிப் போய் ஊர் ஊராக அலைந்து வடக்கே பதரி சென்று சந்நியாசியாய் விட்டுப் பிறகு ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்திருப்பதாகவும் சொன்னார். இந்தக் கதை ஜானகியம்மாளுக்கு எட்டியதும்,— அப்போது விதந்து ஜானகியம்மாள் 60 வயதுக் கிழவி — தன் மகன்தான் என்று மனத்தில் அவள் நிச்சயம் செய்து கொண்டாள்.

• • •

"ஆண்டவனே, என்னுடைய பாவம் எப்படித் தீரும்!" என்று அழுதாள். அவளுடைய துக்கத்தை யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. எப்படியாவது ஸ்ரீரங்கத்துக்கு யாத்திரை போக வேண்டும், போய் மகனைக் கண்ணால் கண்டு ரங்கநாதரிடம் சரண் புகவேண்டும் என்று நிர்மானித்தாள்.

அவ்வாறே செய்தாள். ஆனால் அவள் ஸ்ரீரங்கம் போவதற்கு ஆறு மாதங்கள் ஆயின. அதற்குள் சந்நியாசி ஸ்ரீரங்கத்து மடத்தை விட்டு விட்டு எங்கேயோ கால் நடையாகப் போய்விட்டார், திரும்பி வரவில்லை என்று மடத்தில் சிலர் சொல்ல, அவள் வருத்தமுற்றாள்.

கிழவி ஸ்ரீரங்கத்தில் ஒரு வாரம் இருந்தாள். அங்கே காலரா வியாதிப் பட்டு இறந்து போனாள். எங்கேயோ இருந்த சந்நியாசி இவர் என்று ஆதிசங்கரர் போல் அந்தச் சமயம் வந்து சேர்ந்ததாகவும், தாயாருக்கு ஈமக்கடன் செய்து பிரேதத்தை எரித்து விட்டதாகவும் ஊரில் கதை.

"தயிர்க்காரியைத் தாயார் ஏமாற்றிய பாவம் இப்படியெல்லாம் ஆயிற்று" என்று கண்ணன் தன் பாட்டி சொன்ன கதையை வெங்கடராமனிடம் சொன்னான்.

• • •

"அப்பன்களே! என்ன பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? ஏதாவது கதையா?" என்று கேட்டார் கோவிந்த சந்நியாசி.

ஒருவன் முகம் ஒருவன் பார்த்து வெட்கம் கொண்டு கண்ணனும் வெங்கடராமனும் மௌனமாக இருந்தார்கள்.

"நாங்கள் பேசிக் கொண்டிருந்ததை நாய், சுவாமியிடம் சொல்லிவிட்டது" என்று கண்ணனும் வெங்கடராமனும் எண்ணினார்கள். சுவாமியாரின் முன் தரையில் வீழ்ந்து நமஸ்காரம் செய்தார்கள்.


"ஊர் வம்புக் கதைகள் எல்லாம் காதில் போட்டுக் கொள்ளாதீர்கள்! கோவிந்தா! கோவிந்தா!" என்றார் சந்நியாசி.

பையன்களும் "கோவிந்தா! கோவிந்தா!" என்றார்கள்.



என்ன, உங்கள் மனைவி டினோபாலை உபயோகிப்பதில்லையா?

உங்கள் கணவன் சட்டைகள் எப்படியிருக்கின்றன? சில சமயங்களில் சலவை செய்யப்பட்ட ஆடைகள்கூட மங்கலாகவும், பழுப்பு நிறத்துடனும் தோற்றமளிக்கின்றன. காட்டன் மற்றும் ரேயான் வெள்ளைத் துணிகளை துவைத்தால் மட்டும் போதாது. அவைகளை துவைத்த பிறகு டினோபாலில் கலந்து வெள்ளை வெளேரென்று மின்னுவதைக் கவனியுங்கள்! உங்கள் வண்ணானையும் டினோபாலை உபயோகிக்கச் சொல்லுங்கள்! ஞாபகமிருக்கட்டும்...எல்லோரும் டினோபாலை உபயோகிக்கிறார்கள்.



டினோபால் என்ற வார்த்தை ஜே. ஆர். கெய்கி எஸ். ஏ., பாஸ்ல், ஸ்விட்சர்லாந்து என்பவர்களுடைய ரெஜிஸ்டர்டு ட்ரேட் மார்க்காகும்.

ஒரு சிறிதளவு **டினோபால்** வெள்ளைத்துணிகளை மிக வெண்மையாக்கப் போதுமானது

தயாரிப்பாளர்கள்:
சுஹ்ரித் கெய்கி லிட்., வது வாடி., பரோடா.

பூர்ண விநியோகஸ்தர்கள்:
சுஹ்ரித் கெய்கி டிரேடிங் லிட்., த.பெ 965, பம்பாய்-1.

TAM SISTA'S-SG. 138 A

அது வேறு உலகம்!



இந்தக் கோடை விடுமுறைக்கு டில்லியிலிருந்து கோபு வரப் போகிறன் என்று தெரிந்ததுமே குழந்தைகளுக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சி. டில்லியில் அலுவல் பார்க்கும் என் தம்பியின் பிள்ளைதான் கோபு.

"உங்களுக்கெல்லாம் விசேஷப் பரிசுகளைக் கோபு கொண்டு வருகிறன்" என்று அவர்களுடைய சித்தப்பா எழுதியிருந்ததைப் பார்த்ததும் குழந்தைகளுக்கு இன்னும் மகிழ்ச்சி. கோபுவை அவர்கள் 'எப்பொழுதோ' பார்த்தது. ஆகையால் கணந்தோறும் அவன் வரவை எதிர்பார்த்தும், அவன் வந்த பிறகு அவனோடு விளையாடப் போகும் விளையாட்டுக்களைக் கற்பனை செய்தும் பொழுதை விரட்டிக் கொண்டிருந்தார்கள்.

"டேய்! நாளைக்கு இந்த நேரத்தில் கோபு இங்கே இருப்பான். இல்லையா?" என்று ஆரம்பித்தான் சந்துரு.

அதற்கு மற்றவர்கள் யாரும் நேரடியாகப் பதில் சொல்லவில்லை. எல்லாரும் அதைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்ததால் மௌனத்தாலேயே அந்தக் கேள்வியில் தொக்கி நின்ற உடன்பாட்டை ஊர்ஜிதம் செய்தார்கள்.

"கோபு எப்படி டிரஸ் செய்து கொண்டிருப்பான்? நம் மாதிரி அரைநிஜார் போட்டுக்கொண்டிருப்பானு, 'புல்பான்ட்,' கோட்டு, பூட்ஸ் எல்லாம் போட்டுக்கொண்டிருப்பானு? சொல்லுங்கள், பார்க்கலாம்" என்று புதிர் போட்டான் மூர்த்தி.

"போடா அவன் கம்பளி, பிளானல் எல்லாம் தான் போட்டுக் கொண்டிருப்பான். அங்கேயெல்லாம் ரொம்பக் குளிராம், அப்பாவே சொல்லியிருக்காரே" என்று தைரியம் கூறினன் விச்சப்பயல்.

"அட, மண்டு! அப்பா எப்பொழுதோ சொன்னதை வைத்துக்கொண்டு பேத்துகிறயே! டில்லியிலே இப்பொழுதெல்லாம் ஒரே வெய்யில் கொளுத்தும்டா" என்றாள் வாசந்தி—என் செல்லப் பெண்.

"அட மண்டு" என்று வாசந்தி ஆரம்பித்த உடனேயே, "நான் ஒன்றும் மண்டு இல்லை. நீதான் மண்டு, மக்கு, அசடு....." என்று பழக்க தோஷத்தால் வார்த்தைகளை வரிசையாக அடுக்கத் தயாராக இருந்த விச்சு, வாசந்தி கூறியதில் அடங்கியிருந்த உண்மையை உணர்ந்து புத்திசாலித்தனமாக வாயை மூடிக் கொண்டான். இருந்தாலும் தனது அசட்டுத்தனத்தை வெளிக்காட்டாமல், "போடி, எனக்குத் தெரியாதா என்ன? நீங்களெல்லாம் விழித்துக் கொண்டிருக்கிறீர்களா இல்லையா என்று பார்க்கத்தான் அப்படிச் சொன்னேன்" என்றான்.

ஆனால் போக்கிரி வாசந்தி, "எல்லாம் தெரியும்டா. யாரிடம் கதை விடுகிறய்? சமூகப் பாடத்தில் உன் மார்க் எங்களுக்கெல்லாம் தெரியாதாக்கும்" என்று அவனுடைய 'குட்'டை உடைத்து விடவே விச்சு வெற்றிகரமாகப் பின் வாங்கிக் கொண்டான்.

தொடர்ந்து கோபு முன்னைக்கு இப்பொழுது எப்படி மாறி விட்டிருப்பான் என்ற பிரச்னை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாசந்தியும் மூர்த்தியும் முன்பு கோபுவைப் பார்க்கும்போது மிகவும் சிறியவர்கள். ஆதலால் அவர்கள் விவாதத்தில் ஒப்புக்குக் கலந்து கொள்ளத்தான் அனுமதிக்கப் பட்டார்கள். அவர்களுக்கு வோட்டளிக்கும் உரிமை கிடையாது! முன்பு, தான் வாசந்தியிடம் தோற்றதற்குப் பிரதியாக இதையே ஒரு பெரிய வெற்றியாகப் பாவித்துக் கும்மாளமிட்ட அற்ப சந்தோஷி விச்சுவுக்கு, "வெவ்வெவ்வே" என்று அழகு காட்டினள் வாசந்தி.

முன்பு வந்திருக்கும்போது கோபு எப்படி இருந்தான் என்பதிலேயே சந்துருவுக்கும், விச்சுவுக்கும் பலத்த தகராறு ஏற்படவே, எல்லாரும் கோபு முன்பு வந்திருந்தபோது எடுத்த குடும்பப் புகைப்படத்தைப் பார்ப்பதற்காக மாடிக்கு விரைந்தார்கள்.

ஆள்கொண்டான்


யாரோ தெரிந்தவர்கள் துணையோடு கோபுவை வண்டி ஏற்றிவிட்டிருந்தான் என் தம்பி. 'நானும் வருவேன், நானும் வருவேன்' என்று முரண்டு பிடித்த எல்லாரையும் அடக்கிவிட்டு, வாசந்தியை மட்டும் என்னுடன் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றேன்.

டாக்ஸியில் என்னுடனும், வாசந்தியுடனும் வந்து இறங்கிய கோபுவை வியப்புடன் பார்த்தார்கள் வாயிலில் நின்று கொண்டிருந்த சந்துரு, விச்சு, மூர்த்தி ஆகியவர்கள். கோபுவும் அவர்களை ஒரு விதப் புதுமையுணர்ச்சியுடனும், கூச்சத்துடனும் பார்த்தான். மற்றவர்கள் அசடு வழிய நின்றுகொண்டிருந்த போதே வாசந்தி, அவனிடம் அதிக நாள் பழகியவள் போல் "வாடா கோபு" என்று அழைத்துச் சென்றாள். ரயில் நிலையத்திலிருந்து வீட்டுக்கு வருவதற்குள் அண்ணனுக்கும் தங்கைக்கும் அவ்வளவு அன்னியோன்யம் வளர்ந்து விட்டது! வாசந்தியை ஒரு விதப் பொறாமைக் கண்களுடன் பார்த்துக் கொண்டே மற்றவர்கள் பின்தொடர்ந்தனர்.

பத்து நிமிடங்களுக்குள் எல்லாரும் கலகலவென்று பழகத் தொடங்கி விட்டார்கள். ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகப் பரிசுப் பொருள் கொண்டு வந்திருந்தான் கோபு. பெரிய மனிதத் தோரணையில் கோபு ஒவ்வொன்றாகப் பெட்டியிலிருந்து எடுத்துவைப்பதை வியப்புடன் வாய் மூடாது பார்த்துக் கொண்டிருந்தனர் மற்றவர்கள்.

கோபுவை "நான், நீ" என்று போட்டி போட்டுக் கொண்டு உபசரித்தனர் ஒவ்வொருவரும். ஒவ்வொருவரும் தானேதான் கோபுவின் கவனத்தை அதிகபட்சமாகக் கவர வேண்டும், தன்னுடன்தான் கோபு அதிகமாகப் பேச வேண்டும் என்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். அந்த ஆர்வம் நிறைந்த முயற்சிகளின் மோதல்களிலும் அவ்வப்போது எனது குழந்தைகளுக்கிடையே ஏற்படும் சிறு பூசலும், பிணக்கும் கவனிப்பதற்குச் சுவையாக இருந்தன.

அன்று பிற்பகல் நான் சற்று நேரம் கண்ணயர முடியாமல் குழந்தைகள்



அனைவரும் சத்தம் போட்டுத் தாயம் விளையாடிக் கொண்டிருந்தார்கள். கோபுவுக்கு அந்த விளையாட்டே புதியது. அவனுக்கு எல்லோருமாகச் சேர்ந்து உற்சாகத்துடன் அந்த விளையாட்டைக் கற்றுக் கொடுத்தார்கள். பிறகு, கோபுவும் வாசந்தியும் ஒரு கட்சி, சந்துருவும் மூர்த்தியும் ஒரு கட்சி என்று பிரித்துக் கொண்டார்கள். விச்சு 'அம்பய'ராக இருக்க ஒப்புக் கொண்டான்.

விளையாட்டு ஆரம்பமான சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்களுக்குள் ஏதோ தகராறு வந்து விட்டது. 'அம்பயர்' விச்சு 'தண்ணீர் குடித்து விட்டு வருகிறேன்' என்று அப்பொழுது தான் உள்ளே போயிருந்தான். தப்பாக ஆடிவிட்ட கோபுவை ஆட்ட மும்முரத்தில் சந்துரு, "என்னடா, ஏமாத்தி ஆடுகிறாய்? 'மொண்டி' அடிக்கிறான் பார் மொண்டி" என்று சொல்லி விட்டான்.

எதிராளியை ஏமாற்றி விளையாடுவதைக் குறிக்கும் அந்தப் பரிபாஷையின் சரியான உருவத்தையே அறிந்திராத கோபு, ரோசத்துடன் அதையே திருப்பிச் சொல்லுவதாக எண்ணிக் கொண்டு, "நான் ஒன்றும் 'நொண்டி' அடிக்கலே. நீதான் நொண்டி" என்று சொல்லி விட்டான்.

விச்சு திரும்பி வருவதற்குள் வாய்ச் சண்டை முற்றிக் கைச்சண்டை நிலைக்கு வந்து விட்டது. விச்சுவும் 'அம்பயர்' தர்மத்துக்கு விரோதமாகச் சந்துரு — மூர்த்தி பக்கம் சேர்ந்து விட்டான்.

கோபுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "போங்கடா 'இடியட்ஸ்'" என்று கத்தினான் அழமாட்டாத குறையாக.

"இவர் பெரிய துரைடா! டில்லியிலிருந்து வந்து விட்டார் பாரு" என்றான் சந்துரு.

"இல்லேடா. அவர் டில்லி 'துக்ளக்'டா" என்றான் விச்சு புதிதாகக் கோபுவுக்கு ஒரு கேலிப்பட்டம் சூட்டி விட்ட திருப்தியில்.

"ஆமான்டா அதுதான்டா சரியான பெயர்" என்று மற்றவர்கள் ஆமோதித்தார்கள். தொடர்ந்து "டில்லி துக்ளக்! டில்லி துக்ளக்!" என்று மூவரும் சேர்ந்து கூச்சலிட்டார்கள். வாசந்தி கோபுவை அந்த இடத்தை விட்டு அப்பால் அழைத்துக் கொண்டு போன பிறகும் கூச்சல் ஓயவில்லை!

அன்று மாலை கோபுவோடு வாசந்தியைத் தவிர வேறு யாரும் விளையாடுவதற்குத் தயாராக இல்லை. வீட்டுக்கு முன் காம்பவுண்டில் கிரிக்கெட் மட்டையுடன் கோபு நின்று கொண்டிருந்தான். வாசந்தி அவனுக்குப் பந்தை 'பவுல்' செய்து கொண்டிருந்தாள்.

அந்தப் பக்கமாக வந்த விச்சு, "டே 'துக்ளக்' கிரிக்கெட் விளையாடுகிறாடா, பொண் பிள்ளையோடு" என்று கேலி செய்தான். "ஐயய்யே" என்று மற்றவர்கள் கையைக் கொட்டிப் பரிகாசம் செய்தார்கள்.

வராந்தாவில் அமர்ந்து எல்லாவற்றையும் கவனித்து வந்த என்னால் அதற்கு மேலும் சும்மாஇருக்கமுடியவில்லை. அவர்கள்கோபுவை அழவைப்பதை நானும் மத்தியானத்திலிருந்து பார்த்துக் கொண்டுதானே இருக்கிறேன்!

விடுவிடென்று எழுந்தேன். கன்னம் மூன்று என்று கைபோன வாக்கில் தலைக்கு நாலைந்து அறைகள் அறைந்தேன் மூவரையும். "ஏன்டா கழுதைகளா, இனிமேல் கோபுவைக் கலாட்டா பண்ணுவீர்களாடா?" என்று கேட்டுக் கொண்டே மேலும் அறைந்தேன். 'வீல்' என்று கத்திக்கொண்டே, "இல்லேப்பா, இனிமேல் இல்லேப்பா" என்று ஒவ்வொருவனும் கதறும் வரைக்கும் நான் விடவில்லை. "நீ வாடா கோபு!" என்று கோபுவைப் பரிவோடு அருகில் அழைத்துத் தட்டிக் கொடுத்தேன். பாவம், கோபுவுக்கு இப்பொழுது தான் திருப்தியாக இருந்திருக்கும்.

அன்று இரவு யாரும் கோபுவின் பேச்சுக்குப் போகவில்லை. 'பயல்களுக்குப் புத்தி வந்து விட்டது. இனிமேல் ஒழுங்காக இருப்பார்கள்' என்று திருப்தியடைந்தேன்.

மறுநாள் மாலை நான் வெளியில் போய் விட்டு வீடு திரும்பும்போது எல்லாரும் சேர்ந்து சத்தம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். 'என்ன மறுபடியுமா இந்தப் பயல்கள் கோபுவை வம்புக்கு இழுக்கிறார்கள்?'—நான் விரைந்தேன்.

நான் வாயிற் படியைத் தாண்டும் போது கோபு மற்றவர்களிடம் ஏதோ சொல்லிக் கொண்டிருப்பதைக் கேட்டு அப்படியே திடுக்கிட்டு நின்று விட்டேன்.

"......பெரியப்பா ஆளும் ரொம்ப மோசம்டா. இல்லேயா? நேத்து எப்படி உங்களைப் போட்டுப் பிசாசு மாதிரி அடித்து விட்டார். பாவம் உங்களுக்கு ரொம்ப வலித்திருக்குமே!" என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தான் கோபு.

"அட கடவுளே!" என்று என்னையும் அறியாமல் என் வாய் முணுமுணுத்தது.


தோல் பெட்டியைக் கைமாற்றிக் கொண்டு, தோளில் ஊஞ்சலாடும் 'டூர்'ப் பை நழுவி விடாமல் சரி செய்தவாறு, ஊரின் எல்லைக்குள் அடி வைத்து வருகையில் ராஜாவின் இதயத்தில் எண்ணற்ற மலர்கள் பூத்துச் சிரித்தன. மெல்லிதழ்களின் நன் மணத்தில் நினைவு லயித்து மயங்கியது.

எட்டு வருஷங்களுக்குப் பின் சொந்த ஊரைப் பார்க்கும்போது மனத்துக்குப் பிடித்தமான ஒரு மாற்றமும், புதுமையும் ஏற்பட்டிருப்பதை உணர முடிந்தது. ஆனுல் எங்கே, என்ன மாற்றம் என்று தான் சரியாகப் புரிபடவில்லை. பருவத் தழுவலில் பெண்மை மலர்வதுபோலத்தான்.

தெருவின் திருப்பத்தைத் தாண்டும்போதே கோடிக்குக் கோடி பார்வை தாவி, தெரிந்த முகங்கள் ஏதாவது தென்படுகின்றனவா என்று தேடி அலைந்தது. தெரிந்தவர்களைக் கண்டாலும் அத்தனை நாளைய இடைவெளிக்குப் பின் அடையாளம் கண்டு கொள்ள முடியும் என்பது நிச்சயமா? அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அவனுக்கு எதுவுமே மறக்கவில்லை. பிறந்து வளர்ந்து பதினேந்து வருஷங்கள் அவன் ஆடித் திரிந்த தெரு அது. அதனுல் அதன்மேல் அலாதியான பிரேமை அளவிட முடியாமல் தோன்றி நிற்கையில் அவனும் எதையுமே மறந்திருக்க முடியாது. இப்போது வளர்ந்து முதிர்ந்து விட்டதால் அவனை வேண்டுமானுல் பிறர் அடையாளம் கண்டுகொள்ளாமல் தடுமாறலாம்.

மலர்ச்சி

வீ.சுவாமிநாதன்



அப்போது அவன் சிறுவன். பதினேந்து வயது தான் இருக்கும். அவனுடைய தந்தைக்கு பம்பாயில்வேலை. தன் குழந்தைகளின் படிப்புக்காகச் சொந்த ஊராகிய அங்கு குடும்பம் அமைத்திருந்தார். பிறகு சென்னைக்கு மாற்றல் கிடைத்து வந்ததும் குடும்பத்தைத் தம்முடன் சென்னைக்கு அழைத்துக் கொண்டார். சமீபத்தில் தான் வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின் அவர் தம் குடும்பத்தோடு சொந்த ஊருக்கே திரும்பக் குடிபுகுந்தாயிற்று. இதற்குள் ராஜாவுக்குக் கல்லூரிப்படிப்பு முடிந்து, சென்னையிலேயே வேலை

யும் கிடைத்து விட்டதால் அவன் அங்கேயே தங்க நேர்ந்தது. இப்போது லீவெடுத்துக் கொண்டு சொந்த ஊருக்கு வருகிறான் அவன்.

தெருவிலே சாரி சாரியான வீடுகளின் பின்புறத்திலிருந்து சூரியனின் பொற்கிரணங்கள் உதயமாவது தெருவுக்கே அலாதியான அழகைத் தந்தது. தெருவின் மறுகோடியில், அதனை அணைந்து ஓடும் காவேரிக்கரையில், வானத்தை எட்டும் அரச மரமும் அதன் பின்னரங்கில் பஞ்சு மேகங்களும் நாடகமேடைக்கு ஜோடனை அமைத்தாற்போல் இங்கிருந்தவாறே தெரிகின்றன. காற்றின் தன்மையில் உடல் சிலிர்த்துக் குறுகுறுக்கிறது.

அதோ, தெருவின் நடுவில், மல்லிகைக் கொடி கட்டுக்கு அடங்காமல் படர்ந்திருக்கும் வீட்டின் வாசற் குறடுகளில் நின்றபடி அம்மாவும் அப்பாவும், அன்புத் தங்கை கமலாவும் அவன் வருகைக்காகக் காத்திருப்பது தெரிகிறது.

அதே சமயம் ஏதோ ஓர் ஆவலில் ராஜாவின் விழிகள் அடுத்த வீட்டின் வாசலுக்குப் பாய்ந்து, தங்கித் தயங்கின. அங்கு அமர்ந்திருந்த வடிவம் கண்களைப் பறித்தது. தெருவை அடைத்து, நீர் தெளித்த நிலத்தில், பிரும்மாண்டமான பூக் கோலத்தின் நடுவே, தோளில் சரியும் புடவைத் தலைப்பும், தரையில் புரளும் கூந்தலுமாய் இழை இழுத்துக் கொண்டிருக்கும் அவளை அவன் கடக்கும்போது அவள் நிமிர்ந்தாள். நழுவிய தலைப்பை ஒரு கையால் விசிறிப் போட்டபடி மற்றொரு கையால் கூந்தலை ஒதுக்குகையில் குலுங்கும் வளையல்கள் கொட்டும் வண்ணத்திடையே இரு கருவிழிகள் தனித்துப் பளபளத்துக்கொண்டு அவன் நெஞ்சின் நினைவையெல்லாம் மீட்டிவிட்டன.

ராதைதானே இது?


கிணற்றில் சிறு கல்லை இட்டதும் மேற்பரப்புக்கு நழுவி வரும் நீர்க் குமிழ்கள் போல் மலர்ந்து எழும் எண்ணங்களில் பூவிதழ்களின் மென்மை விருந்தது.

மழைக்குப் பின் மின்னும் பயிராய் இதற்குள் ராதை எப்படி மாறியிருக்கிறாள்! முன்னால் பார்த்து, பின்னால் தூரிகையால் கண் திறந்த பின் அதே ஓவியத்தைக் காணுதல்போல், அடையாளமே தெரியாதபடி எத்தனை எழில் மலர்ச்சி அவளிடத்தில்!

அவனெதிரே அவளுடைய நடை மெல்லத் தயங்கியது. விளங்காத இன்பம் பொங்கும் இன்பத்தில் மேனி சிலிர்த்துக் கோணியது. பதிந்த பார்வை சில நேரம் பிடித்தது. ஒரு கணத்துக்குப் பெற்றோர்களும் தங்கையும் தன்னையே துருவிப் பார்ப்பதைக்கூட உணர முடியவில்லை. அவளுடைய மையுண்ட கண்கள் தன்னைச் சந்தித்து, நெஞ்சு விம்மப் புன்னகை செய்யும் என்று உள்ளம் எண்ணிக்கொண்டது.

அவன் ஆவல் எல்லை மீற நின்றான். உடனேயே கோலக்குழலுடன் அவள் உள்ளே சென்று மறைந்து விட்டாள். அவனை ஏறிட்டுப் பார்க்கவேயில்லை.

ராஜாவின் முகம் துவண்டது. ஏன் இப்படி? பால நினைவுகளையெல்லாம் அவள் மறந்து விட்டாளா? நாட்கள் பழைய அன்பையெல்லாம் புதைத்து மறைத்து விட்டனவா? வளர்ச்சி, திரையிட்டு இருவரையும் விலக்கிவிட்டதா?



அடையாளம் தெரியவில்லையோ ஒருவேளை? அம்மா அவன் வருகையைப் பற்றிச் சொல்லாமலா இருந்திருப்பாள்? அம்மா மறந்திருந்தாலும் கமலாவால் சொல்லாமல் இருக்க முடியாதே? ஒருவேளை தன்

பெற்றோர்களின் எதிரில் வலியப் போர்த்திய ஒதுக்கமா இது? அல்லது பார்த்தும் பார்க்காதது போன்ற ஜாலத்தால் கவர்ச்சி கூடுகிறது என்ற எண்ணமாயிருக்குமோ?!

தன் ஆறுதலுக்காகத் தானே தரும் விளக்கங்கள் தனக்கே ருசிக்கவில்லை. எண்ணக் கனவின் மதுரம் தோய்ந்த உள்ளத்தில் திடீரென்று ஒரு சின்னஞ் சிறு அதிருப்தி துளிர்விட்டது.


நினைவு தெரிந்த நாட்களின் தொடக்கத்தில் தானும் அவளும் பரிவிலும் பாசத்திலுமாய் இணைந்திருந்து விட்டு, இப்பொழுது சில ஆண்டுகள் அவளுடைய அண்மையில் இல்லாததால் அந்த அன்பையெல்லாம் இழந்தாயிற்றோ என்ற அவநம்பிக்கை அவன் நெஞ்சில் நச்சரிப்பாய் முளைத்தது.

பெற்றோரும் தங்கையும் வரவேற்றபோது சிந்தனைக் கொந்தளிப்பை அடக்கிக் கொண்டு புன்னகை செய்தான். சாவதானமாய் அமர்ந்து மறுபடியும் யோசிக்கும்போது அந்த குழப்பங்களும் சற்று வடிந்தது போலிருந்தது. 'இம்மாதிரி சமயங்களில் மன இயல்பென்று தெளிவதுதான் நல்லது. அறியாததைப் பற்றி ஆராய்வது பேதைமை. அன்றைய ராதை வேறு. இன்றைய ராதை வேறு. அன்று போல் இன்றிருப்பது அழகில்லை' என்று தேற்றிக் கொண்டபின் நெஞ்சில் அமைதி மீண்டது.

அன்றைய ராதை வேறு, இன்றைய ராதை வேறுதான். அரும்புதான் மலரானாலும் அரும்பு வேறு, மலர் வேறு என்பதைப் போலத்தான். உள்ளத்தில் அந்த நாட்களின் நினைவு ஓடுகையில் மனமெல்லாம் புளகத்தால் பொங்கிப் பெருகி நிறைகிறது.

அன்று—ராதைக்கும் பத்து வயதுதான் இருக்கும். அவனுக்குப் பதினேந்து. விடியலை நோக்கி வரும் ஒளி பூத்த வெள்ளி போல் கள்ளமற்று, பேதமற்று, உள்ளங்கள் துள்ளிய நேரம் அது. புனிதமுத்துக்களில் துளிர்க்கும் பனித் துளி போல் அமுத எண்ணங்களில் மனம் சுடர் விட்ட காலம் அது. அந்த நாட்களின் எழில் எண்ணப் புதையிலிருந்து இன்னும் பொலிவு வீசுகிறது. அன்று பதிந்த ராதையின் வடிவம் இன்று பார்த்த ராதையின் பக்கலிலே நின்ற வண்ணம் இதழ்ச் சிரிப்புக் காட்டுகிறது.

வசந்தத்தின் மாந்தளிராய் அவளுக்கு மென்மையும் மிருதுவுமான மேனி அப்போது. இடையில் தவழும் பட்டுப் பாவாடையும், மேனி வளமையில் நிறைந்த சொக்காயுமாய் அவள் ஓடி வருகையில் கால் கொலுசு 'ஜல் ஜல்'லென்று ஒலித்து மயக்கும். வளையல் குலுங்கும் மென்கொடிக் கரங்களுடன் தன் கைகளைப் பிணைத்துக் கொண்டு, தரையை உந்தி உந்தித் தட்டாமாலை சுற்றுவது என்றால் ராஜாவுக்கு ஏக குஷி. சுற்றி நின்றதும், கண்ணெதிரே காட்சிகள் சுழன்று ஓடி, நிலை குலைந்து ஒருவர்மேல் ஒருவர் விழுவதும் சகஜம். படிந்த மண்ணைத் தட்டிக்



கொண்டு எழுகையில் ஒரு சிரிப்பொலி ஜலதரங்கமாய் எழுந்து ஒன்றில் ஒன்று குழையும்.

வாழ்வின் அந்த இன்பத்துக்கு நேர் எதுவுமில்லை. விளங்காத அன்பு அது. அந்த அன்பின் தூய்மை நெஞ்சை அடைத்துக் கொண்டு நினைவில் எழும் இப்போதும் கர்வச் செருக்குத் தோன்றுகிறது.

பள்ளிக்கூடத்துக்கு அவனும், அவளும் தினம் சேர்ந்துதான் செல்வார்கள். ஒருவரின்றி மற்றவர் மட்டுமே சென்றால் அன்று முழுவதும் இருவர் மனமும் நிலைகொள்ளாமல் தவிக்கும். அவன் விரல்களைப் பற்றியபடி வீதியில் நடக்கும்போது தெளிவற்ற மகிழ்ச்சியில் அவள் மெய்மறந்து போவாள். எத்தனையோ முறை ஏதோ ஒரு சுவாரசியத்தில் தங்கை கமலாவும் தங்களோடு வருவது இருவருக்குமே நினைவின்றிப் போனதுண்டு. பள்ளியில் அவனோடு அவள் பெயரை இணைத்து என்னென்னவோ சொல்லி நண்பர்கள் கேலி செய்கையில் அவனுக்குக் கோபத்துக்குப் பதில் பெருமைதான் தோன்றும்.

விடுமுறை நாட்களென்றால் வீட்டில் தாயமும் சோழியும் குலுங்கி உருளும். எப்போதும் ராஜாவும், ராதையும்தான் ஒரு கட்சி. அந்தக் கட்சி தோற்று யாருக்கும் தெரியாது. வெற்றிக் குதூகலத்தில் அவன் பின்னலை இழுத்து விஷமம் செய்வான் அவன். "விடுடா பின்னலை!" என்று சிணுங்கும் வட்ட முகம் இன்னும் நெஞ்சோரத்திலிருந்து எட்டிப் பார்க்கிறது.

அன்றுபோல் ராதை இன்றில்லை என்ற அதிருப்திக்கு அர்த்தமேயில்லைதான். இளமை மலர்ச்சி தோன்றியபின் அதே போல் எப்படி இருக்க முடியும்?

தானே அன்றிருந்தாற்போல் இன்றில்லை என்ற சுய ஞானம் அவனைச் சட்டெனச் சிலிர்க்க வைத்தது; என்னத்தைச் சொக்க வைத்தது. தன்னை அவள் ஏறிட்டுப் பார்க்கவில்லை என்ற ஒரே நினைவில் தான் இத்தனை குழம்பக் காரணம் என்ன என்று உணரும் போது பூரித்த இளமை புதுமலர்ச்சி புரிந்தது. இயல்பான நாணத்தில் உள்ளம் கூசியது.

பகலில் அன்னமிடும்போது கமலாவோடு பேச்சுத் தொடுத்தான் ராஜா. சமையலறையில் அவளும், அவளும் மட்டுமே இருந்தாலும் சொற்கள் தயங்கித் தயங்கித்தான் வெளிவந்தன.

"காலையில் பக்கத்து வீட்டில் கோலம் போட்டுக்கொண்டு நின்றது யாரு? ராதை தானே?" தெரிந்ததையே திரும்பக் கேட்டுத் தெரிந்து கொள்வதிலும் ஓர் இன்பம் உண்டு.

"அவளைக் கூடவா மறந்துவிட்டாய்?"

நேராகப் பார்த்தால் தங்கை தன் நெஞ்சை அளந்து விடுவாள் என்ற பயத்தில் தலை இலைக்குக் கவிழ்ந்திருந்தது.

"மறக்கவில்லை. சந்தேகமாயிருந்தது."

"தினம் இங்கே மத்தியானம் வருவாள். நீ வேறு வந்திருக்கிறாய் இன்று...." கமலாவின் சொற்களில் அனுஸ்வரங்கள் சிந்திநிறைந்து போயிருந்தது.

அதற்குமேல் அவன் எதுவும் கேட்கவில்லை. தயக்கம் பாறையாய் நெஞ்சை அடைத்தது.

மத்தியானம் முழுதும் நடுக் கூடத்தை விட்டு ராஜாவுக்கு நகரத் தோன்றவில்லை. 'யார்' வந்தாலும் நடுக் கூடத்தைத் தாண்டித் தானே செல்ல வேண்டும் என்ற தைரியம். அன்று கடைசிவரை யாருமே வரவில்லை.

அவனுள் வேதனைபெருமூச்செறிந்தது. 'இது என்ன இது? என்னென்னவோ எதிர்பார்த்தாகிறது. எதிர்பார்ப்பது எல்லாம் எவ்வளவு தூரம் நிறைவேறப் போகிறது? தங்கி நிற்குமோ? அல்லது மங்கிப் போகுமோ?'

அன்றைய மாலையில் நடை பழகிய வண்ணம் காவேரிப் படித்துறைக்கு வந்தான் ராஜா. மஞ்சள் வெய்யிலின் பொன்னுருக்கில் வண்டலும் கரைசலுமாய்ப் புரண்டு எழுந்து நிலைகொள்ளா வேகமாய்க் கரையைத் தொட்டு, சுழித்துச் செல்லும் காட்சி காணரம்யமாய் இருந்தது. அந்த லயிப்பில் அவன் மூழ்குகையில் அவன் இமை விளிம்புக்குள் அன்று பார்த்த ராதையின் வடிவம் அரவிந்தமாய் நடமிட்டது.

முன்பெல்லாம் ஆடிப்பெருக்கில், ஆற்றின் படிக்கட்டில், அருகருகே அமர்ந்து அவனும் அவளும் சித்திரான்னம் உண்டது நினைவில் வருகிறது. சப்பரத்தைப் பிடித்த வண்ணம் நிற்பாள் ராதை. சரசரவென்று அரசமரத்தின் மீதேறி நீட்டிய கைகளுடன் அம்புபோல் ராஜா நீருக்குள் பாய்வதைப் பார்த்து அவள் நெஞ்சம் அச்சத்தில் நடுங்கும். மைதீட்டிய விழி இரண்டும் காதுவரை நீண்டு தவிக்கும்.

ராஜாவுக்கு எப்போதுமே விளையாட்டுத் தான். ஆற்றின் சுழலும், வேகமும் அவனுக்கு விளையாட்டுப் பொருள். ராதையின் நெஞ்சு நடுக்கம் அவனுக்கு வேடிக்கைக் காட்சி. அப்போதெல்லாம் அவனைத் தடுக்கவும் மாட்டாமல் அடக்கவும் மாட்டாமல் துடிக்கும் அவள் பிஞ்சு உள்ளம்.

அவள் பயந்தபடிதான் ஒருநாள் ஆயிற்று. போட்டி போட்டுக்கொண்டு அக்கரையைத் தொட்டுவிட்டுத் திரும்பும்போது சுழலின் நடுவே அவனுக்குக் கைகளைத்துப் போயிற்று. வெள்ளப் பெருக்கில் உடல் தலையாட்டிப் பொம்மையாய் ஆழ்ந்து ஆழ்ந்து எழுந்தவிதம், தவிப்பில் கத்த நினைத்துத் துடித்தபோது ஒலி எழும்பாமல் நீரின் மேற்பரப்பில் சிற்றலைகள் பரவும் வகை, இதையெல்லாம் பார்த்ததும் வாய்விட்டு அலறிவிட்டாள் ராதை. அருகில் இருந்த சிலர் சரியான நேரத்தில் அவனைக் கரைக்கு இழுத்துப் போட்டார்கள்.

அன்று அவள் அருகில் இல்லையானால் இன்று அவனில்லை. இன்றும் அப்படித்தான். நேருக்கு நேர் காணாமல் இருந்தாலும், இந்த எட்டு வருஷங்களில் கனவிலும் நினைவிலும் அவளை எண்ணி எண்ணி எண்ணமே அவளாக ஆகிய பின், அவளின்றி அவனில்லைதான்.

மெல்ல ராஜா இமைகளைத் திறந்ததும், பூக்கள் மேலே சொரிந்தாற்போல் ஒரு புதுக் களிப்பு அவன் நெஞ்சில் மதமதத்தது.

இடையில் குடம் தாங்கித் துறையின் படிக்கட்டுகளில் ராதை அடி வைத்து மேலே வருகையில், உணர்வின் குறுகுறுப்பில் உடல் நிலைகொள்ளவில்லை. நர்த்தனத்துக்குத் தாளம் அமைவதுபோல் சதங்கை ஒலிக்கு இணையாகக் குடத்தினுள் நீர் ததும்பும் 'கல கல' என்ற ஒலியைப் பரப்பியபடி அவள் அவனை நோக்கி வருகையில், வியர்வை குப்பென்றுபெருகியது.

அவன் இதழ்கள் ஆர்வத்தால் புன்னகையில் மலர்ந்தன. அவளேயே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றான்.

அவன் அவளை ஒரு முறை நேராகப் பார்த்தான். பார்வையை உடனேயே அப்பால் திருப்பிக்கொண்டு, நிற்காமல் மேலே சென்று விட்டாள். அந்தப் பார்வையில் ஒரு சலனமோ, நடையில் ஒரு தயக்கமோ இல்லையென்று தான் அவனுக்குத் தோன்றியது.

நிமிஷத்தில் ராஜாவின் அவநம்பிக்கை பெரிதாக வளர்ந்தது. அதன் சுமையில் வேதனை தாங்க முடியவில்லை.

விளக்கேற்றி வைத்ததும் கோயிலுக்குப் போய் வரலாம் என்று தோன்றியது ராஜாவுக்கு. வீட்டுக்கும் கோவிலுக்கும் வெகு தூரம் இல்லை. கோவிலின் அம்மன் அலாதியான அழகு. அடுக்கடுக்காய், இதழ் இதழாய்ச் சங்கிலியிலிருந்து தொங்கும் சர விளக்குகளின் சுடரொளியில் கண்களில் கருணையும், இதழ்களில் புன்னகையும், கையில் கமலமுமாய் நிற்பாள் தேவி.

பிராகாரத்துக்குள் கொட்டிக் கிடக்கும் மணல்வெளியில் சிறு வயதில் ராதையும் அவனும் விளையாடித் திரிவார்கள். அந்த ஊரை விட்டுச் சென்னைக்கு மாற்றிக்கொண்டு கிளம்பும் தினத்தன்று வெகு நேரம் அவனும் அவளும் அங்கேதான் அமர்ந்திருந்தனர்.

ஒருவரை யொருவர் பிரிகிறோம் என்ற துக்கம் இருவர் நெஞ்சிலும் அலைபுரண்டது. கண்ணீர் சலசலவென்று கன்னங்களில் இறங்கியது. மார்பே வெடித்து விடும் போல் கேவிக் கேவி அழுதாள் ராதை.

அவள் கண்களைத் துடைக்கவோ, அவளைத் தேற்றவோ அவனுக்குத் தோன்றவில்லை. வேதனை எல்லை மீறி உணர்ச்சிகளை ஸ்தம்பித்து விட்டன.

பிரிவதற்கு முன்பாகத் தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கண்ணாடி மணி மாலையை எடுத்து அவள் கழுத்தில் அணிவித்தான் ராஜா. கறுப்பு மணிகளிடையே பகட்டுத் தங்கப் பதக்கம் கண்ணைப் பறித்தது. தாய் தந்தை தனக்கென்று நாளடைவில் தந்த காசைச் சேர்த்து வைத்து இன்று தன் அன்புப் பரிசாம் அந்த மாலையை வாங்கியிருந்தான். கமலாதான் கடைக்கு வந்து அந்த மாலையைத் தேர்ந்தெடுத்து வாங்கினாள். மாலையின் விலை ஒன்றும் பிரமாதமில்லை. அன்புதான் அதன் பெரும் விலை.

"நான் போயிட்டு வரேன், ராதை! நான் போன பிறகு என்னை நீ மறந்துவிடமாட்டாயே?" அவன் குரல் கம்மிக் கொண்டது.

"எப்படிடா, ராஜா என்னாலே உன்னை மறக்கமுடியும்?" சிறு அழுகையில் குரல் நடுங்கியது.

"நானும் என்றைக்கும் உன்னை மறக்க மாட்டேன், ராதை !"

அன்று சொன்னபடியே அவன் அவளைப் பின்னர் மறக்கவில்லை. ஆனால் அவள் அவனை எவ்வளவு தூரம் மறக்காமல் இருக்கிறாள் ?

கோவிலை ராஜா அடையும் போது வானத்தில் மேகங்கள் குவிந்திருந்தன.

அம்மன் சன்னிதானத்தில் கரம் கூப்பியபடி நிற்கையில் சட்டென அவன் நிமிர்ந்தான். சன்னிதானத்துக்குள் ராதை நுழைந்து சர விளக்குகளின் திரி தூண்டி எண்ணெய் ஊற்றுவதைக் கண்டான். சுடரொளியின் பொலிவில் அவள் கண்களின் கருமணிகள் பளபளத்தன.

'தெய்வத் தாய்க்கு அஞ்சலி! நெஞ்சின் ஆசையை அவள் நிறைவேற்றி வைக்கட்டும்!' அவன் உதடுகள் துடித்தன. உள்ளம் மலர்ந்தது.

பிராகாரத்தைச் சுற்றிவிட்டு, கோபுரத்தின் கீழ்த் திண்ணையில் ராஜா காத்து நின்றான். எப்படியும் அவனைக் கடந்துதானே ராதை சென்றாக வேண்டும்?

இருண்ட வானத்திலிருந்து திடு திடுவென்று மழை இறங்கிக் கொட்ட ஆரம்பித்தது. ராஜாவின் நெஞ்சில் மகிழ்ச்சி ததும்பியது. எப்படியும் ராதை இப்போது தப்பிக்க முடியாது. மழை விடும்வரை கோபுரத்தின் கீழ்த் திண்ணையில்தான் நின்றாக வேண்டும்.

ஆர்வத்தில் அவன் விம்மி விம்மி நின்ற போதே கோபுரத்தின் கீழ்த் திண்ணைக்கு ராதை வந்து விட்டாள். அவன் கண்களில் மகிழ்வின் தாரகையொளி பளிச்சிட்டது.

"ராதை !"

அவள் திரும்பவேயில்லை.

பக்கத்தில் யாருமில்லை. அப்போதும் கவனிக்காமல் சென்றால் வேண்டுமென்றே செய்வதுதானே? இதற்கு ஒரே விளக்கம்தான் உண்டு. கடந்த எட்டு வருஷங்களில் அவனுடைய அன்பு தேய்ந்து விட்டது. அவனைப் பற்றி அவளுக்கு இப்போது கொஞ்சம்கூட லட்சியமில்லை.

அந்தப் பழைய அன்பைத் தான் மட்டும் வளர்த்துக் கொண்டு நிற்பதில் இனியும் அர்த்தமில்லை.

மழை விட்டதும் வீட்டுக்குத் திரும்புகையில் அவனுடைய குறையே அவன் நெஞ்சை அறுத்தது. அவளைக் கவர முடியாததே அவனுடைய பெருங் குறைதானே !

அவன் பெருமூச்செறிந்தான். தன் மேல் தனக்கே அலுப்புத் தட்டியது.

வீட்டில் நுழையும் போது அப்பாவும் அம்மாவும் சாப்பிடாமல் அவனுக்காகக் காத்திருந்தனர். இரவுச் சாப்பாட்டுக்குப் பிறகு சீக்கிரமே அப்பா தூங்கப் போய் விட்டார்.

நெஞ்சில் பழையனவும் புதியனவுமாக நெருக்கி அடித்துக்கொண்டு நினைவுகள் புரண்டு புரண்டு எழுகையில் நிம்மதியிழந்து, மாடியறையில் அமர்ந்திருந்தான் ராஜா. அவனருகே அம்மா சுவாதீனமாய் வந்தமர்ந்தாள். எல்லையில்லாத பாசம் அம்மாவின் கண்களில் ஒளிவிட்டது. "இந்த வருஷம் உன் கல்யாணத்தை முடித்துவிட வேண்டும் என்று அப்பா துடிக்கிறார்...."

அவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

"அடுத்த வீட்டு ராதையைத்தான் உனக்குத் தெரியுமே, அவளையே முடித்துவிடலாம் என்றிருக்கிறோம்...உன் மனசு தெரிந்தால்."

அவன் கண்ணெதிரே ராதையின் வடிவம் வந்து நின்றது. தடம் மாறி மயங்கும் நெஞ்சை அவன் ஒதுக்கித் தள்ளினான்.

"எனக்கு அதில் இஷ்டமில்லை, அம்மா !"

அம்மா அவனைத் துருவிப் பார்த்தாள்.

"ஏன் என்று கேட்டால் எனக்குச் சொல்லத் தெரியாது. எனக்கு அதில் இஷ்டமில்லை !"

அம்மா அதைப் பற்றி மேலே பேச்சை வளர்க்கவில்லை.

மனத்தின் அமைதியையெல்லாம் ராஜா பறிகொடுத்துத் தவித்தான். வாழ்வின் இணைப்பு இரு மனங்களைப் பொருத்தது என்று ஏன்தான் இந்தப் பெற்றோர்களுக்குப் புரியவில்லையோ ? ஒன்றின் சம்மதத்தைக் கேட்பவர்கள் மற்றொன்றின் சம்மதத்தை ஏன் புரிந்து கொள்ள முயல்வதில்லை ? ஒன்றில் கசப்பும் இன்னொன்றில் இனிப்புமாய்க் கூடினால் முடிவில் நேருவது கசப்புத்தானே ?

'சிறு பிராயத்தில் எவ்வளவோ நடந்தது. அதையே நினைத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. இப்போது வளர்ந்து மலர்ந்தாயிற்று. வளர்ச்சியோடு மன இயல்பும் ஆசாபாசங்களும் மாறுவதில் வியப்பொன்றுமில்லை. ராதை பழைய ராதை இல்லை....' இரவு முழுவதும் ராஜாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. எண்ணக் கனவுகளின் அடித்தளமே சரிந்துவிட்ட ஏக்கத்தைத் தாங்க முடியவில்லை.

மறுநாள் காலையில் வீட்டின் தோட்டத்தில், கிணற்றடிக்குப் பக்கத்தில், துவைக்கிற கல்லின் மேல் துவண்டு அமர்ந்திருந்தான் ராஜா. வானம் மூட்டமிட்டு அழுதது.

தோளின் மேல் இரு கைகள் அழுந்தியதும் திரும்பிப் பார்த்தான் ராஜா. அவனருகில் துவைக்கிற கல்லின் மேலேயே ஒட்டி உட்கார்ந்தாள் கமலா.

"அண்ணா !"

"ஊம் !"

"நேற்று அம்மாவிடம் ராதையைக் கல்யாணம் செய்து கொள்ள இஷ்டமில்லை என்றாயாமே !"

"அதை மறுபடியும் கிளப்பாமல் இருக்க மாட்டாயா, கமலா !"

"உன்னை இன்றுதான் புரிந்து கொண்டேன். நீ பெரிய மேதாவியாகி யிருக்கிறாய். மேதாவித்தனத்தோடு சுயநலமும் வளர்ந்திருக்கிறது. நேற்றைய நிலையெல்லாம் மறந்தாயிற்று..."

"ஏதாவது உளறாதே, கமலா !"

"ஏன் பின்னே இஷ்டமில்லை என்றாயாம்?"

"என்னுடைய இஷ்டம் அப்புறம் இருக்கட்டும். ராதைக்கே அதில் இஷ்டமில்லை என்று எனக்குத் தெரியும்..." தன்னையறியாமல் சொற்கள் குதித்து விட்டன.

கமலாவுக்குச் சற்றுக் குழப்பமாயிருந்தது. "உனக்கு எப்படித் தெரியும்?"

"இதை அறியத் தனி சாதுர்யம் தேவையில்லை. அன்பிருக்கும் இடத்தில் அலட்சியம் இருப்பதில்லை."

அவள் அதிர்ந்தாள். சொன்னதை வாங்கிக்கொண்டு, வாக்கியத்தைப் புரிந்து கொள்ள

நேரம் பிடித்தது. மெல்ல ஒரு காட்சி நினைவில் தலை தூக்கியது. நேற்றைய இளம் காலை அடுத்த வீட்டு வாசலில் கோலமிட்ட வடிவமும், அதைக் கூர்ந்து நோக்கிய கண்களும், மறுபார்வை இல்லாமல் முன்னது மறைந்ததும் —

வடித்த அன்னத்தில் ஒரு சோறு எடுத்துப் பதம் காணுதல்போல், அந்த ஒரு சம்பவத்தின் பின்னரங்கை ஊகித்துப் பார்த்ததும் அண்ணனின் உள்ளப்பாங்கு புரிந்தது.

கமலா சுற்றிலும் கண்ணோட்டம்விட்டாள். மௌனம் ஒரு கணம் தேங்கிற்று.

"உனக்கு எல்லாம் தெரியும் என்று நினைத்தேன். உனக்குத் தெரிந்தது இத்தனைதானா?"

அவன் உசுப்பிக் கொண்டு எழுந்தான். "என்ன?"

"அதோ, அங்கே பெரிது பெரிதாய் இதழ்களுடன் நீண்ட நீண்ட மகரந்தக் குழலுடன் ரத்தச் சிவப்பாய் மரம் முழுதும் இலைகளே தெரியாமல் அட்டகாசமாய்ப் பூத்துக் குலுங்குகிறதே செம்பருத்தி, அதற்கு மணமுமில்லை. மதிப்புமில்லை. தெரியுமா, அண்ணா?"

பேச்சின் போக்கு ராஜாவுக்குப் புரியவில்லை.

"அதே சமயம் எங்கோ இலையோடு இலையாய்க் கண்ணிலேயே படாமல் ஒளிந்து பூக்கும் மனோரஞ்சிதத்தின் மணத்துக்கு இணையேயில்லை. போதையும் மயக்கமும் இங்கே தாங்க முடியவில்லை..."

ராஜாவுக்குப் புரிந்தது. ராதை மனோரஞ்சிதமா? நம்ப முடியவில்லை.

தன் மூடியிருந்த வலது கையை அவன் கண்ணெதிரே கொண்டு வந்து விரல்களை மெல்லப் பிரித்தாள் கமலா. விரல்களின் ரோஜா வண்ணத்திடையே கருமணி மாலை பகட்டுத் தங்கப் பதக்கத்துடன் மின்னியது.

ராஜாவின் பிடரி புல்லரித்தது.

"உன்னிடம் இதைக் காட்டிச் சண்டையிட வேண்டும் என்று வந்தேன். இப்போது உன்னோடு சண்டையிடத் தோன்றவில்லை. அசட்டுத்தனத்தைப் பார்த்துச் சிரிக்க வேண்டுமென்றிருக்கிறது. எட்டு வருஷங்களுக்கு முன் நீ ராதைக்குப் பரிசாகத் தந்தது இது. இல்லையென்று உன்னால் சொல்லிவிட முடியாது. நான்தான் தேர்ந்தெடுத்து வாங்கினேன்..."

"கமலா!"

"உஸ்! நான் பேசும்போது குறுக்கே பேசினால் எனக்குப் பிடிக்காது. கெட்ட கோபம் வந்து விடும். தன் பெட்டிக்குள் வைத்துப் போற்றி வந்ததை இன்று 'ஸ்பெஷ'லாக எடுத்துப் போட்டுக் கொண்டு அவள் கண்ணாடியில் அழகு பார்க்கும்போது நான் அங்கே போய் விட்டேன். முதலில், உள்ள ரகசியத்தை மறைக்க முயற்சி நடந்தது. அதில் தோற்றபின் எதையும் மறைக்க முடியவில்லை, பாவம்! மாலையை மட்டும் பிடுங்கி வந்திருக்கிறேன். போதுமா?"

ராஜாவுக்குச் சொற்கள் வரவில்லை.

"இப்போது சம்மதமா?" குவிந்த நீள் விரல்கள் நையாண்டி காட்டின.

நன்றியறிதலில் அவன் தங்கையின் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான். அவன் கைகளை விடுவித்துக் கொண்டபோது ஏனோ அவை நனைந்திருந்தன.



நரிவேட்டை 12
டெலிரிமாவைக் கொன்றதாகக் குமார் மீது குற்றம் சாட்டி ஏசுகிறான் ரவி. ஆத்திரமடைந்த குமார் ரவியை அறையப் புடைத்து விடுகிறான்.
கீழே விழுந்த ரவி எழும் திருக்கையில் அவன் கையில் ஒரு துப்பாக்கி இருக்கிறது. வின்மி செய்வதறியாது திகைக்கிறாள்.
துப்பாக்கி இருக்கும் துணிவில் குமாரை நெருங்குகிறான் ரவி.
கதை: ஜெயந்தி
சித்திரம்: விஜய
என்னைக் கைநீட்டி அடித்தவன் உயிருடன் வாழமுடியாது!
அடுத்த கணம் பின்புறத்திலிருந்து ஒரு தடி பறந்து வந்து...
வலி பொறுக்கமாட்டாமல் துப்பாக்கியைக் கீழே போட்டு விட்டுத் திரும்பும் ரவி, தடி எறிந்து தன்னைத் தாக்கிய இன்ஸ்பெக்டரைக் காண்கிறான்.
ஆ! அப்பா!
குமார் பாய்ந்து துப்பாக்கியை ஒரு மூலையில் உதைத்துத் தள்ளுகிறான்.
இனி, தன் ஜம்பம் சாயாது என்று பின் வாசல் வழியே ஓடுகிறான் ரவி.
குமார்! நீ இங்கேயே இருந்து இவளைக் கவனித்துக் கொள்.


ரவியைப் பிடிக்க முயலுகிறார் இன்ஸ்பெக்டர்.
அதோ! அந்தத் தெருவில்தான் நுழைந்தான் போலிருக்கிறதே!
சந்து பொந்துகளில் புகுந்து தப்பி விடுகிறான் ரவி.
ஸ்டேஷனுக்குத் தகவல் தெரிவித்து ரவியைப் பிடிக்க ஏற்பாடு செய்வோம்.
ஹோட்டல் டெலிமோலில்...
எவ்வளவு பெரிய அபாயத்திலிருந்து தப்பினீர்கள்! பொறுமை கொன்று உங்கள் உயிரைப் பறிக்க இருந்தானே பாவி!
விரல் ரேகை அடையாளங்கள் அழியாதிருக்கக்குமார் துப்பாக்கியைப் பத்திரமாக எடுத்து.....
பொறுமையா? ஏன்? எதற்காக?
அவனுக்கு என்னை மணமுடித்துக்கொடுப்பதாய் இருந்தார் அப்பா!...
...ஒரு கைக்குட்டையில் சுற்றி வைக்கிறான்.
அதற்கு உன் பதில்?
பிடிவாதமாய் மறுத்து விட்டேன். உங்களுக்குச் சந்தோஷம் தானே?


குமாரிடம் வின்மி எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை. இன்ஸ்பெக்டர் திரும்புகிறார்.
திருட்டுப் பயல்! ஓடிவிட்டான்
சரியான சமயத்திற்கு வந்து என்னைக் காப்பாற்றினீர்கள்.
நீங்கள் காஸிம் பாங்குக்கு வந்ததிலிருந்து எனக்கு நிம்மதியே இல்லை குமார்! முன்னெச்சரிக்கையுடன் இருந்து வருகிறேன்.
துப்பாக்கி, சாட்சியமாகப் பயன்படும் என்கிறார் இன்ஸ்பெக்டர்.
நான் வருகிறேன் வின்மி!
என் மீது ஏற்பட்ட சந்தேகம் இன்னும் தீரவில்லை அவருக்கு!
புறப்படுவோமா?
இன்ஸ்பெக்டரும் குமாரும் ரவியைத் தேடிச் செல்கிறார்கள்.
ரவி ஒரு கம்பளி வியாபாரி என்று வின்மி கூறியிருக்கிறாள்.
SAMSONS
இந்த ஊரில் மிகப் பெரிய கம்பளி வியாபாரி லாஷாதான். ஒருவேளை அவனுக்கும் ரவிக்கும் இடையே ஏதாவது தொடர்பு இருக்கலாமோ?
லாஷாவின் பங்களாவில்....
என்னை எங்கே அழைத்து வந்திருக்கிறீர்கள்?
பேசாமல் நட! கூச்சல் போட்டாயோ தொலைந்தாய்!
லாஷாவுக்கு எதிரே நிறுத்தப்படுகிறாள் ஷியாமா
நீதான் குமாரின் மனைவியா?
நான் யாராக இருந்தால் உங்களுக்கென்ன?
தொடரும்

மணிபல்லவம்

9. பெண்ணில் ஒரு புதுமை

நா. பார்த்தசாரதி

பெண்மை என்னும் தமிழ்ச் சொல்லுக்குக் 'கண்ணிற் புலனாவதோர் அமைதித் தன்மை' என்று இளங்குமரன் பலரிடம் பொருள் விளக்கம் கேட்டு அறிந்திருந்தான். இன்று 'விசாகை' என்னும் பெண்ணைப் பார்த்தபோது கேட்டு அறிந்திருந்த அந்தப் பொருளைக் கண்டும் அறிந்தான். கண்களின் பார்வையில், முகத்தின் சாயலில், இதழ்களின் சிரிப்பில் எங்கும் எதிலும் அமைதி நிகழ அமர்ந்திருந்தாள் விசாகை.

திருநாங்கூர் அடிகள் இளங்குமரனை நோக்கிப் புன்னகை புரிந்தவாறு கூறலானார்:

"இளங்குமரா! விசாகையின் கதை அழிவற்றது. 'மனிதர்களால் இவ்வளவுதான் முடியும்' என்று வரையறை செய்திருக்கும் அளவுக்கும் அப்பாற்பட்டது. 'இன்ன காரணத்தினால் இப்படிச் செய்தாள்' என்று இணைத்து விளக்குவதற்குத் தொடர்பும் அற்றது. அழிவு அற்றதை அழிவைக் கொண்டும், அளவு அற்றதை அளவைக் கொண்டும், தொடர்பு அற்றதைத் தொடர்பைக் கொண்டும் எப்படி விளக்கிச் சொல்ல முடியும்? விசாகையின் வாழ்க்கையிலிருந்து ஒரு புதிய தத்துவமே மலர்ந்திருக்கிறது. பெண்ணில் இவள் ஒரு புதுமை! வாழ்வில் அறம் செய்கிறவர்கள் பலர்; ஆனால் வாழ்வையே அறமாகச் செய்கிறவர்கள் விசாகையைப் போல் சிலரினும் சிலர்தாம் தோன்றுகிறார்கள்.

இந்தப் பெண் இங்கு வந்து சேர்ந்த முதல் நாளை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சி அது. கார்த்திகை மாத நடுப் பகுதி. அடைமழை பெய்து கொண்டிருந்த காலம். தொடர்ந்து வானம் கண் விழிக்கவே இல்லை. ஆறுகளும், வாய்க்கால்களும், குளங்களும் ஓடைகளும் கரை நிமிரப் புனல் பெருகிப் பொங்கிப் பாய்ந்து கொண்டிருந்தன. ஊரே நீர்ப் பெருக்கில் மூழ்கியெழுந்தது போல் குளிர்ந்து போயிருந்தது. பூக்கள் வாடவில்லை. செடிகள், கொடிகள் துவண்டு சோரவில்லை. கார் காலம் என்னும் தம்முடைய பருவத்தைக் கொண்டாடிக் குலவுவது போல முல்லைப் புதர்கள் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தன.

இப்போது நான் அமர்ந்து கொண்டிருக்கிற இதே இரந்த சாலையில் இதே இடத்தில்தான் அன்றும் அமர்ந்து கொண்டிருந்தேன். நாலைந்து மாணவர்கள் சுற்றிலும் இருந்து ஏதோ ஒரு நூலைப் பாடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். வெளியில் மின்னலும் இடியுமாகப் பெருமழை பெய்து கொண்டிருந்தது. பாடத்தின் இடையே என்னுடைய மாணவர்களில் ஒருவன், 'இன்ன செயலை இந்த நேரத்தில் இப்படிச் செய்ய வேண்டும் என்னும் ஊக்கம் மனித மனத்தில் எப்படி எழுகிறது? எப்படி வளர்கிறது? எப்படி நிறைவேறுகிறது?' என்று ஒரு கேள்வியைக் கேட்டு என்னிடமிருந்து விடையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது இரந்த சாலையின் வாயிற்புறத்து மறைவிலிருந்து ஒரு பெண் குரல், 'உலகத்தார்க்குப் பண்பின் வழியே ஊக்கம் நிகழும். ஊக்கமாவது செயலைச் செய்வதற்குரிய நினைவைத் தூண்டும் முனைப்பு. ஊக்கத்தின் வழியே இதை இப்படித்தான் செய்ய வேண்டுமென்று துணிகிற ஒழுக்கம் நிகழும். கற்று அடங்கி அமையாத மனத்தில் பண்பு இல்லை. பண்பில்லாத மனத்தில் ஊக்கம் இல்லை. ஊக்கமில்லாத மனத்தில் ஒழுக்கம் இல்லை' என்று பதில் கூறியது. உடனே நானும் மாணவர்களும் திகைப்படைந்து எழுந்து போய் வாயிற்புறம் பார்த்தோம். சொட்டச் சொட்ட மழையில் நனைந்தவளாய்ப் பால்வடியும் வதனத்தில் அமைதியே புன்னகையாய்ச் சாயல் காட்டக் கைகளில் அட்சய பாத்திரம் ஏந்திக் கொண்டு

துறவுக் கோலத்தில் இந்தப் பெண் நின்றாள். என்னைக் கண்டவுடனே அட்சய பாத்திரத்தைக் கீழே வைத்து விட்டு வணங்கினாள்.

'இந்த மழையில் யாராவது பிட்சைக்குப் புறப்படுவார்களா? புறப்பட்டு வந்ததுதான் வந்தாய்; எதற்காக வெளியே நனைந்து கொண்டு நிற்கிறாய்? உள்ளே வரலாமே?' என்றேன். துறவு நெறி மேற்கொண்ட எவளோ ஒரு புத்த சமயப் பெண் பிட்சைக்கு வந்திருக்கிறாள் என்று எண்ணியே நான் அப்படிக் கேட்டேன். இவளுடைய பேதைமை மாறாத இளமையைக் கண்டு, 'இந்தப் பருவத்திலேயே இப்படி ஒரு துறவா?' என்று எண்ணி வியந்து கொண்டிருந்தது என் மனம். அதற்குள் என்னுடைய மாணவன் ஒருவன் எங்கள் பூம்பொழிலின் மடைப்பள்ளிக்குச் சென்று நெய் விட்ட வெண் சோறும், சில காய்கனிகளும் கொண்டு வந்து இவளுடைய பிட்சைப் பாத்திரத்தில் இடுவதற்குப் போனான். சிரித்தபடியே, தான் அதற்காக வரவில்லை என்று குறிப்பினால் புலப்படுத்துகிறவளைப் போல் தன்னுடைய பிட்சைப் பாத்திரத்தைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு விலகி நின்றாள் இவள்.

"நான் ஏற்க வந்திருக்கிற பிட்சைக்கு நானேதான் பாத்திரம். இது அல்ல!" என்று சொல்லி அட்சய பாத்திரத்தை ஒதுக்கிவைத்தாள். பின்புதான் மழைக்கு ஒதுங்கினாற் போல் நின்ற இடத்தினருகே வைத்துக் கொண்டிருந்த துணி முடிப்பை அவிழ்த்து அதிலிருந்து இரண்டு மூன்று ஓலைகள் அடங்கிய திருமுகம் ஒன்றை எடுத்து என்னிடம் நீட்டினாள். மனத்தில் இன்னதென்று விளங்காமல் பெருகும் வியப்புடன் இவள் கொடுத்த ஓலையை வாங்கிப் படித்தேன். ஓலை பாலி மொழியில் எழுதப்பட்டிருந்தது. மணிபல்லவத் தீவுக்கு அருகில் சமந்த கூடமலையில் வாழ்ந்து வந்த புத்ததத்தர் என்னும் துறவி அந்த ஓலையை எனக்கு எழுதியிருந்தார். அந்தத் துறவி எனக்கு நெருங்கிய நண்பர். பல முறை காவிரிப் பூம் பட்டினத்துக்கும், திருநாங்கூருக்கும் வந்து பழகியவர். சமய வாதம் புரியுமிடங்களில் எல்லாம் இருவரும் சந்தித்திருக்கிறோம். இரண்டொரு சமயங்களில் நானே அவரை வாதத்தில் வென்று *'நாவலோ நாவல்' என்று வெற்றி முழக்கமிட்டுக் கூவியிருக்கிறேன். அவர் பாலி மொழியில் எனக்கு எழுதியிருந்த ஓலையில் இந்தப் பெண்ணைப் பற்றிய வரலாற்றைக் கூறி அறிமுகப் படுத்தியிருந்தார். அன்று அவர் எனக்கு எழுதியனுப்பியிருந்தவற்றை அப்படியே தமிழில் உனக்கு விவரித்துச் சொல்கிறேன், இளங்குமரா!

'முற்று இளமையும் முதிராப் பருவமுமாக உங்களிடம் வந்து நிற்கும் இந்தப் பெண்ணின் பெயர் விசாகை. உடம்பும், பருவமும், முதிர்ச்சி யடையாவிட்டாலும், மனத்தில் முதிர்ச்சியும், செம்மையும் பெற்றவள் இவள். மற்றப் பெண்கள் பாவையும், அம்மானையும் கொண்டு கன்னி மாடங்களில் பின்னைப் பருவத்து விளையாட்டுக்களை விளையாடிப் பொழுது போக்கிக் கொண்டிருந்த வயதிலேயே இவள் அறநூல்களையும், ஞான நூல்களையும் தக்க ஆசிரியரிடம் பாடம் கேட்கத் தொடங்கி விட்டாள். சில செடிகள் முளைக்கும்போதே தமக்குரிய மணத்தை மண்ணுக்கு மேலே பரவச் செய்து கொண்டு முளைக்கும். அதைப் போல் விட்ட குறை தொட்ட குறையை நிறைவு செய்யப் பிறந்தவளோ என்று பெற்றவர்களே மருண்டு அஞ்சும் புண்ணியப் பிழம்பாயிருந்தாள் இவள்.

இவளைப் பெற்றவர்களும், சாதாரணமானவர்கள் அல்லர். சாவக நாட்டுச் சிற்றரசர்களில் சிறந்தவனும், பெருஞ் செல்வத்துக்குரியவனுமாகிய சூடாமணி வர்மனின் ஒரே மகளாக இவள் பிறந்தாள். உலகின் நிலையாமையும், துன்பங்களும், இளம் வயதிலேயே இவள் மனத்தில் உறைத்துப் பதிந்து விட்டன. மற்றவர்கள் பாக்கியங்களாக நினைத்த அரச போக ஆடம்பரங்கள் இவளுக்குத் துர்ப்பாக்கியங்களாக உறுத்தின. 'இவற்றிலிருந்து விடுபட்டுச் செல்! துன்ப விலங்குகளிலிருந்து விடுபட அறியாமல் தவிக்கும் மக்களுக்கெல்லாம் விடுபடும் வழியை விளக்கு' என்று இவள் மனத்தில் இடைவிடாத தூண்டுதல் ஒன்று பெருகி வந்தது. நினைவு வராப் பருவத்திலேயே இவள் தன் தாயை இழக்கும்படி நேர்ந்தது.

இவளுடைய ஒப்பிலா அழகையும், அறிவையும் பார்த்து இவள் தந்தை சூடாமணிவர்மன் என்னென்னவோ கனவுகள் கண்டு கொண்டிருந்தான். சுயம்வர ஏற்பாடுகள் நடந்தன. விசாகையின் அழகைக் கேள்விப்பட்டிருந்த இளவரசர்கள் எல்லாரும் சூடாமணி வர்மனின் சுயம்வர மண்டபத்தில் கூடி

---

* அந்தக் காலத்தில் சமயவாதம் செய்ய விரும்புவோர் ஒரு நாவல் மரக்கிளையை நட்டுப் பிறரை வாதுக்கு அழைப்பதும், எதிர்வாதம் புரிய வருவோர் வாதத்தில் வென்ற பின்பே அக் கிளையைப் பறித்து எறிய வேண்டுமென்பதும் வழக்கு. வாதத்தில் வென்றவர் 'நாவலோ நாவல்' என வெற்றிக் குரல் முழக்குவதும் உண்டு.

னர்கள். கடல் கடந்த நாடுகளிலிருந்தும் விசாகையின் அழகைக் கேட்டு மயங்கியவர்கள் வந்திருந்தார்கள். 'எந்தப் பிறவியிலோ செய்த தவப்பயன் இப்படி ஒரு பெண்ணைப் பிறந்திருக்கிறது' என்று சூடாமணிவர்மன் கர்வப்பட்டுக் கொண்டிருந்தான். விசாகையின் சுயம்வர நாள் விழாவைச் சாவகநாடே களிப்புடன் கொண்டாடிப் போற்றிக் கொண்டிருந்தது. அறிவும், திருவும், வனப்பும், செல்வமும், ஒருங்கு வாய்ந்த நாயகன் விசாகைக்கு வாய்க்க வேண்டுமென்று மனத்தில் தெய்வத்தை வேண்டிக்கொண்டிருந்தான் சூடாமணிவர்மன்.


சுயம்வர மண்டபத்துக்கு வெளியே இனிய மங்கல வாத்தியங்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. அரண்மனை யெங்கும் வாசனை வெள்ளம் பாய்ந்து பரவிக் கொண்டிருந்தது. திரும்பிய பக்கமெல்லாம் பொன்னும், முத்தும், மணியும், அரசர் முடிகளும் ஒளிர்ந்தன. பெண்களிற் பேரழகியாக வந்து பிறந்தவளைச் சொந்தமாக்கிக் கொள்ள ஆண்களிற் பேரழகர்களாக வந்து பிறந்தவர்கள் எல்லாம் கூடியிருந்தார்கள்.

தோழிகளும், பணிப்பெண்களும் அழகுக்கே அழகு செய்வதுபோல் விசாகையை அலங்காரம் செய்து கொண்டிருந்தார்கள். விசாகை பொம்மையைப் போல் வீற்றிருந்தாள். பட்டுச் சிற்றாடையும், பவழ மணிமாலைகளும், பொன்னும், பூவுமாகத் தன் உடம்பைச் சிறை செய்து கட்டுவதாகத் தோன்றியது இவளுக்கு. 'நீ இதற்காகவா பிறந்தாய்?' என்று உள்மனத்தில் முள் குத்துவது போல் ஒரு கேள்வி நீங்கமாட்டாமல் குத்தி உறுத்திக் கொண்டிருந்தது. கோலக் குழல் முடித்துக் குங்குமத் திலகமிட்டு, நீலப்பட்டுடுத்தி, நித்தில மாலையிட்டுப் பணிப்பெண்கள் விசாகையின் தோற்றத்தில் கவர்ச்சியைப் பிறப்பிக்க முயன்று கொண்டிருந்தபோது இவள் கண்களில் நீர் பிறந்தது. நெஞ்சினுள் எதிலிருந்தோ, எதற்காகவோ, விடுபட்டுப் பறக்க வேண்டும் போலத் தவிப்புப் பிறந்தது. எப்போதோ, எங்கேயோ, ஏதோ ஒரு செயலை அரைகுறையாக விட்டு வந்திருப்பது போலவும், அதை நிறைவு செய்ய எழுந்து போக வேண்டிய நேரம் நெருங்குவது போலவும் உணர்வு பிறந்தது. விசாகையின் பின்புறம் இவள் கூந்தலில் பூச்சூடிக் கொண்டிருந்த பணிப்பெண்கள் எதிரேயிருந்த கண்ணாடியில், மௌனமாகக் கண்ணீர் வடித்தவாறு தெரியும் தங்கள் தலைவியின் முகத்தைக் கண்டு திகைத்தார்கள். 'மனத்துக்கு விருப்பமான கணவனைத் தேர்ந்தெடுப்பதற்காக மாலையேந்திச் செல்லும்போது யாராவது இப்படி அழுவார்களா?' என்று எண்ணிக் காரணம் புரியாமல் அஞ்சினார்கள் பணிப்பெண்கள்.

'நம் தலைவி அழவில்லையம்மா; கண்களுக்கு மை தீட்டும்போது அதிகமாகத் தீட்டிவிட்டார்களோ, என்னவோ? மை கண்களில் கரித்து உறுத்துகிறது போலிருக்கிறது. அதனால்தான் கண்களிலிருந்து நீர் வடிகிறது' என்று காரணத்தை ஆராய்ந்து கண்டவள்போல் சொல்லிச் சிரித்தாள் ஒரு பணிப்பெண். விசாகை ஒன்றும் பேசாமல் சிலையாக அமர்ந்திருந்தாள். பேச வராத பருவத்துச் சிறு குழந்தை தனக்கு உற்ற நோவு இன்னதெனச் சொல்லவும் மொழியின்றித் தாங்கவும் ஆற்றலின்றித் தாய் முகம் தேடி நோக்கி அழுவதுபோலத் தன் தவிப்பைக் கூற இயலாமல் பணிமகளிர் புனையும் அலங்கார விலங்குகளைத் தாங்கியவாறே கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள் விசாகை. கண்களைப் போல் இவள் மனமும் அழுதது. உணர்வுகளும் அழுதன. எதிரே கண்ணாடியில் தெரியும் தன் முகத்தைத் தானே பார்த்தாள் விசாகை. கண்ணீரைத் துடைத்துக் கொள்வதற்காக இவள் கை மேலே எழுந்தபோது, 'உன் கண்ணீரைத் துடைத்துக் கொள்வதற்கு முன்னால் உலகத்தின் கண்ணீரைத் துடைக்க வேண்டாமா, அம்மா? நீ இன்று அபூர்வமாக அழும் இதே விதமான துக்கத்தையும் அந்தத் துக்கம் எங்கிருந்து உற்பத்தியாகிறது என்பதையும், அதைப் போக்குவதையும், போக்குவதற்கான வழியையும் நீ காண வேண்டாமா அம்மா?' என்று தெய்விகக் குரல் ஒன்று தன் மனத்துள்ளும் செவிகளுக்குள்ளும் ஒலிப்பதை விசாகை கேட்டாள். தன்னுடன் பிறந்து தன் உணர்வுடன் ஒன்றி வளர்ந்து தன்னினும் வளர்ந்துவிட்ட தனது மனமே அந்தக் குரலை ஒலிக்கிறதென்று இவளால் விளங்கிக் கொள்ள முடியாவிட்டாலும், இவள் அதற்கு வசப்பட்டாள். ஒரு குறிப்பிட்ட காலத்தில் உடலின் அங்கமான மனம் உடலைக் காட்டிலும் பெருமையுடையதாய், நுண்மையுடையதாய் வளர்ந்து விடுகிறது. அப்படி வளர்வதால்தானோ என்னவோ, மனச்சான்று என்ற ஒருணர்வு உடம்பின் செயல்களிலேயே நல்லது கெட்டது தேர்ந்து நல்லதை ஏற்கவும், தீயதை இடித்துரைக்கவும் துணிகிறது.

கண்ணீர் வடியும் தன் முகத்தின் பிரதிபிம்பத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டே, 'எங்கோ விடுபட்டுச் செல்ல

டாக்டர்கள் மில்க் ஆப் மக்னீஷியாவையே சிபாரிசு செய்கிறார்கள் — மிதமாக பேதி ஆவது, அமிலத்தை எதிர்த்து பூர்ண நிவாரணமளிப்பதில் சக்தி வாய்ந்தது.



உலகத்திலுள்ள ஆயிரக்கணக்கான டாக்டர்களையும், சிசு வைத்திய நிபுணர்களையும், பிரசவ வைத்தியர்களையும், ரண சிகிச்சை வைத்தியர்களையும் "நீங்கள் உங்கள் நோயாளிகளுக்கு பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவை சிபார்சு செய்கிறீர்களா?" என்று கேட்டதற்கு அவர்களில் அனேகர் "ஆம்!" என்று பதிலளித்தார்கள்.

ஆம், குழந்தைகளுக்கும், பிரசவம் மற்றும் ரண சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கும் கூட பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா மிகவும் பலன் தரக்கூடியது என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.

இதில் ஆச்சரியமொன்றுமில்லை!


பேதி மருந்து ஆனாலும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா நிதானமாகவும், செம்மையாகவும், இதமாகவும் வேலை செய்கிறது; ஜீரண உறுப்புகளை பலவந்தப்படுத்துவதில்லை. அமிலங்களை அடக்கும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வயிற்றுக் கோளாறு, வாயு, நெஞ்செரிச்சல் மற்றும் மலச்சிக்கலுடன் வரும் இதர அமில உபாதைகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது.

எந்தவிதமான பேதி மருந்தும் இம்மாதிரி சுகமான பரிபூரண நிவாரணமளிக்காது!


உங்கள் டாக்டரைக் கேளுங்கள்! ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டியது

பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா

RECD. TRADE MARK



இரைப்பையில் மித மிஞ்சிய அமிலத்தால் ஏற்படக்கூடும் அஜீரணத்திலிருந்து உடனடியாக நிவாரணம் பெற எங்கும், என்றும் இன்பமான, இனிப்பான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வில்லைகளை உட்கொள்ளுங்கள். 4 வில்லைகளை கொண்ட கையடக்கமான பாக்கெட்டுகளிலும், 75, 150 கொண்ட புட்டிகளிலும் கிடைக்கும்.



ஏக விநியோகஸ்தர்கள்:
டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை,

வேண்டும்' என்ற தவிப்பை உணர்ந்தும், உணராமலும், 'தவித்தபோது விசாகை என்ற உடம்பின் வலிமையை மீறிக் கொண்டு விசாகை என்ற மனத்தின் வலிமை ஓங்கி வளர்ந்து ஆட்கொண்டது. பணிப்பெண்கள் விசாகையை எழுந்திருக்கச் செய்து சுயம்வர மாலையைக் கையில் கொடுத்தார்கள். கண்ணீரைத் துடைப்பதற்காக அருகில் வந்தாள் ஒரு தோழி. அப்போது மறுபடியும் அந்தக் குரல் இவள் உள்ளத்திலிருந்து ஒலித்தது:

'உன் கண்ணீரைத் துடைத்துக்கொள்வதற்கு முன் உலகத்தின் கண்ணீரைத் துடைக்க வேண்டாமா, அம்மா? இன்று அபூர்வமாக நீ அழும் இதே அழுகையை ஏற்கெனவே பலர் தினந்தோறும் அழுது கொண்டிருக்கிறார்களே?' —

தன் கண்ணீரைத் துடைப்பதற்காக முகத்தருகே நெருங்கிய தோழியின் கையை விலக்கி ஒதுக்கினாள் விசாகை.

"தலைவிக்கு விருப்பமில்லையானால் கண்ணீரைத் துடைக்க வேண்டாம். விட்டு விடு. சுயம்வரத்துக்கு வந்திருக்கிற அரசகுமாரர்கள் எல்லாம் நம் தலைவி ஆனந்தக் கண்ணீர் சிந்துவதாக நினைத்துக் கொள்ளட்டுமே" என்று வேடிக்கையாகக் கூறினாள் குறும்புக்காரியான பணிப்பெண் ஒருத்தி.

'ஆனந்தக் கண்ணீராமே; ஆனந்தக் கண்ணீர்! கண்ணீரே ஆனந்தம்தானே? பிறருடைய துன்பத்தில் நம்முடைய மனம் நெகிழுகிறது என்பதற்கு அடையாளம்தானே கண்ணீர். அன்பு செலுத்துவதிலும், மனம் நெகிழ்வதிலும் ஆனந்தமில்லாமல் துக்கமா உண்டாகும்? ஒருவர் இருவருக்காக நெகிழ்ந்து அழுவதிலேயே இவ்வளவு ஆனந்தமானால், பிரபஞ்சத்தையே எண்ணிப் பிரபஞ்சத்தின் துக்கத்துக்காகவே மௌனமாக அழுதவர்கள், தவம் செய்தவர்கள், சிந்தித்தவர்கள், மதம் கண்டவர்கள் எல்லாரும் எவ்வளவு ஆனந்தத்தை அடைந்திருக்க வேண்டும்?'

இப்படி எண்ணியவாறே சுயம்வர மண்டபத்துக்குள் நுழையும் வாயிலுக்கு இந்தப் பக்கத்தில் மாலை ஏந்திய கைகள் நடுங்க, மனம் நடுங்க, நினைவுகள் நடுங்க, கண்களில் நீர் நடுங்க விசாகை நின்றாள்.

அளவற்ற துக்கத்தையும், எல்லையற்ற அநுதாபப் பெருக்கையும், குறிப்பதற்கே தமிழில் ஆனந்தம் என்று ஒரு சொல் இருப்பது விசாகைக்கு நினைவு வந்தது. தமிழ்ப் புறப்பொருள் இலக்கணத்தில் போரின்போது, வீரக் கணவனை இழந்த மனைவி அவன் நினைவில் மெலிந்து வருந்தும் வருத்தத்தைக் கூறும் பாடலுக்கு 'ஆனந்தம்' என்று பெயர் வைத்திருப்பதை இவள் நினைத்தாள். எல்லையற்ற ஆனந்தத்தைத் தந்து கொண்டிருந்த பொருள் அழியும்போது எல்லையற்ற துக்கம் உண்டாகிறது. ஆனந்தத்துக்கும் துக்கத்துக்கும் ஆனந்தமே காரணமாவது பற்றித்தான் தமிழ் இலக்கண ஆசிரியர்கள் துயரத்துக்கும் ஆனந்தம் என்று பெயரிட்டிருக்க வேண்டுமென எண்ணினாள் விசாகை. சிந்தனை பெருகப் பெருக இவள் கண்களில் நீரும் பெருகிற்று.

கூட்டுக்குள்ளிருந்து வெளியே தலை நீட்டி எட்டிப் பார்க்கும் கிளிக் குஞ்சு போல், தான் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்து சுயம்வர மண்டபத்துக்குள் செல்லும் வாயிலில் எட்டிப் பார்த்தாள் விசாகை.

மண்டபத்தில் வரிசை வரிசையாய் அரச குமாரர்கள் வீற்றிருந்தார்கள். இயற்கையாகவே அழகுடையவர்கள் சிலர். செயற்கையாகப் புனைந்து அழகு படுத்திக் கொண்டு வந்திருந்தவர்கள் சிலர். நம்பிக்கையோடு வந்தவர்கள், ஆசைப்பட்டு வந்தவர்கள், நம்பிக்கையும் அவநம்பிக்கையும் கலந்த மனத்தோடு வந்தவர்கள், எல்லாரும் இருந்தார்கள். எல்லாருடைய கண்களும் இவள் மண்டபத்துக்குள் நுழையப் போகிற வழியையே பார்த்துக் கொண்டிருந்தன. இவளோ எல்லாருடைய கண்களிலும் ஆசை ஒன்றே நிறைந்திருந்ததைப் பார்த்தாள். இவள் கைகளும் கைகளிலிருந்த மாலையும் முன்னினும் அதிகமாய் நடுங்கின.

சுயம்வர மண்டபத்தில் முதன்மையான இடத்தில் அமைச்சர் பிரதானிகள் புடைசூழ இவள் தந்தை சூடாமணி வர்மன் இருந்தார். மண்டபத்தின் நடுவில் வெண் பளிங்குக் கல்லில் செய்த புத்தர் சிலை ஒன்று அமர்ந்த கோலத்தில் காட்சியளித்தது. அந்தச் சிலையின் சாந்தம் தவழும் முகத்தில் வாயிதழ்கள் எப்போதும் மெல்லச் சிரித்துக்கொண்டே இருப்பதுபோல் ஒரு பாவனை அமைந்திருந்தது.

சாதாரண மனிதர்களுடைய அழுகையிலும் ஆனந்தம் இருக்கிறாற் போல் ஞானிகளுடைய சிரிப்பிலும் துக்கம் இருப்பதை அந்தப் புத்தர் சிலையின் முகம் விசாகைக்குக் கூறியது.

இரண்டு தோழிப் பெண்கள் பக்கத்துக்கு ஒருவராக விசாகைக்கு அருகில் வந்து நின்றுகொண்டு இவளைச் சுயம்வர மண்டபத்துக்குள் நடத்தி அழைத்துச் சென்றார்கள். இரண்டு கண்களின் அழகைக் காண்பதற்காக எத்தனையோ கண்கள் மலர்ந்தன. ஆனால் அத்தனை பேருடைய ஆவலையும் இளைச் செய்த அந்த இரண்டு கண்களில் நீர் நெகிழ்ந்திருந்தது.

தோழிகளின் துணையோடு கைகால்கள் நடுங்கிய நிலையில் விசாகை தளர்ந்தாற் போல் மெல்ல நடந்து வந்து சுயம்வர மண்டபத்தில் வீற்றிருந்தவர்களை யெல்லாம் பார்த்தாள்.

'தன் மகள் எந்த நாட்டு இளவரசனுக்கு மாலையிடப் போகிறாள்' என்று ஆர்வம் பெருகும் விழிகளால் இமையாது பார்த்துக் கொண்டிருக்கும் தந்தை சூடாமணிவர்மனையும் நிமிர்ந்து நோக்கினாள். பெண்ணின் கண்கள் ஏன் கலங்கியிருக்கின்றன என்பது தந்தைக்குப் புரியவில்லை. நிவினைகளின் வினைவுகள் சூழ்ந்து வரும்போது தடுமாறி நிற்கும் உயிர் போல் விசாகை தயங்கி நின்றாள். மருண்டு பார்த்தாள். கண்ணீர் பெருக்கினாள். 'குழந்தை ஏன் அழுகிறாள்?' என்று தோழிகளை அருகில் அழைத்துக் கேட்டான் சூடாமணிவர்மன். 'கண்ணுக்கு இட்ட மை கரித்து நீர் வருகிறது. அழவில்லை' என்று தங்களுக்குத் தோன்றியதைக் கூறினார்கள் அவர்கள். அரசனும் அப்படித்தானிருக்கும் என நம்பினான். உலகத்தின் கண்ணீரைத் துடைப்பதற்காக அவள் கண்ணில் நீர் பிறந்திருக்கிறதென்று அவர்களுக்கு எப்படித் தெரியும்? பாவம்! உண்மையைத் தெரிந்து கொள்ள இயலாதவரை தங்களுக்குத் தெரிந்ததைத்தானே உண்மையாகக் கொள்ள வேண்டும்?

சுயம்வர மண்டபத்திலிருந்த எல்லாரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தயங்கிநின்ற விசாகை விரைந்து நடந்தாள். தோழிகள் இவளைப் பின்தொடர முடியாத வேகத்தில் நடந்தாள். மண்டபத்தின் நடுவில் சிரித்துக் கொண்டிருந்த புத்தர் சிலையை நெருங்கினாள். சுற்றிலும் ஒரு முறை நிமிர்ந்து பார்த்த பின் தன் கைகளிலிருந்த மணமாலையை அந்தச் சிலையின் பாதங்களில் பயபக்தியோடு வைத்து விட்டு வணங்கினாள். இவள் கைகளிலிருந்த மாலையைப் பெற்றபின் அந்தச் சிலையின் முகத்தில் சாந்தமும், சிரிப்பும், இன்னும் அதிகமானாற் போல் ஒரு தோற்றம் ஏற்பட்டது. சூடாமணிவர்மன், இருக்கையிலிருந்து எழுந்து மகளை நோக்கி ஓடி வந்தான்.

"இது என்ன காரியம் செய்கிறாய், மகளே? நீ வாழ்க்கைப் படவேண்டியவருக்குச் சூட்டும் மாலையை வணங்கப்பட வேண்டியவருடைய பாதங்களில் சூட்டுகிறாயே?"

"எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து நான் இவருடைய கொள்கைகளுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டேன், அப்பா. வேறு விதமாக மனிதருக்கு வாழ்க்கைப்படும் ஆசை எனக்கு இல்லை. 'அப்படி வாழ நான் பிறக்கவில்லை' என்று என் மனமே எனக்குச் சொல்கிறது! வாழ்க்கைப்படுவதற்கு ஒருவரும் வணங்கப்படுவதற்கு ஒருவருமாக இருவரிடம் பக்தி செலுத்த எனக்கு விதியில்லை. என்னை விட்டு விடுங்கள். நான் விடுபட்டுப் போக வேண்டும்!"

"எங்கே போக வேண்டும், மகளே?"

"உலகத்தின் கண்ணீரைத் துடைப்பதற்குப் போக வேண்டும்."

"நீ போனபின் என்னுடைய கண்ணீரை யார் துடைப்பார்கள்?" இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று விசாகைக்குத் தெரியவில்லை. தந்தையின் பாதங்களைப் பற்றிக் கொண்டு மேலும் கண்ணீர் பெருக்கினாள். தந்தையின் பாதங்களையும், பாசங்களையும் விலக்கி விட்டு இவள் எழுந்தபோது தந்தை வேரற்ற பெரு மரம் போல் மயக்கமுற்றுக் கீழே விழுந்தார். அழுக்குகளை நீக்குவது போலத் தன் உடம்பிலிருந்து பொன்னையும், மணியையும், பட்டையும் வேறுக்கி விட்டு விசாகை புறப்பட்டாள்.

உலகத்தின் கண்ணீரைத் துடைப்பதற்காகச் சுகங்களிலிருந்து விடுபட்டுப் புறப்பட்டாள்....."



விசாகையின் கதையைக் கேட்டு முடித்ததும் தான் மீண்டும் இளைத்துப் போய்விட்டதாக உணர்ந்தான் இளங்குமரன். மனத்தின் வலிமையால் உலகத்தை வென்று நிற்பவர்களைப் பற்றி அறிந்தாலும், நினைத்தாலும், அந்தக் கணத்தில் தான் குன்றி ஒடுங்கிப் போனதாக ஏற்படும் தாழ்வை அவனால் மீற முடியவில்லை.

உலகில் மிகச் சிறந்த வலிமை மனத்தின் வலிமைதான். மிகச் சிறந்த விடுதலையும் மனத்தின் விடுதலைதான் புலன்களிலிருந்து விடுபட்டுச் சிந்திக்கும் தூய மனம்தான் பெரிய சுதந்திரம். புலன்களுக்கும், உணர்வுகளுக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கிறவர்கள் உடம்பினால் விடுதலை பெற்று என்ன பயன் என்றெல்லாம் விசாகையின் வரலாற்றைக் கேட்டிருந்த கிளர்ச்சியில் எண்ணினான் இளங்குமரன். அவள் வரலாறு அவன் மனத்தில் தாய்மைக் கிளர்ச்சியைத் தூண்டியிருந்தது.

உலகத்தின் கண்ணீரைத் துடைப்பதற்காகத் தாமும் கண்ணீர் சிந்திய அந்த விழிகளை இன்னொரு முறை தரிசனம் செய்ய வேண்டுமென்று நிமிர்ந்தான் அவன். விசாகையின் அழகிய கண்களில் இப்போதும் நீர் நெகிழ்ந்திருந்தது. பழைய நிகழ்ச்சிகளைக் கேட்க நேர்ந்ததால் சிறிதளவு அவள் கலங்கியிருந்தாள்.

அடிகள் இளங்குமரனைக் கேட்டார் : "இவளுடைய வாழ்க்கையைப் பற்றி என்ன நினைக்கிறாய், இளங்குமரா?"

"நினைப்பதற்குரிய வாழ்க்கை அல்ல இது! வணங்குவதற்குரிய வாழ்க்கை ஐயா ! இந்த அம்மையாருடைய மனத்தின் வலிமையைப் பற்றி நீங்கள் கூறிய போது என்னுடைய மனத்தின் ஏழைமையை நான் உணர்ந்தேன்.'

"நல்லது! இவளுடைய கதையை எந்த விளைவுக்காக உன்னிடம் சொல்ல வேண்டுமென்று விரும்பினேனோ, அந்த



விளைவு நிகழ்ந்திருக்கிறது. மேலும் கேள்! சாவக நாட்டிலிருந்து இவள் மணிபல்லவத்துக்கு வந்தாள். அங்கே புத்த பீடிகையைத் தரிசனம் செய்தாள். கோமுகிப் பொய்கையைக் கண்டாள். சமந்த கூட மலைக்குச் சென்று அங்குள்ள என் நண்பரான புத்ததத்தரிடம் சமய ஞானம் பெற்றாள். 'மண் திணிந்த இவ்வுலகத்தில் வாழ்கிறவர்களுக்கு உணவு கொடுத்து உதவுகிறவர்கள் உயிர் கொடுப்பதற்கு இணையான செயலைச் செய்பவர்கள்' என்ற கருத்துடன் தன் அட்சய பாத்திரத்தைப் பலரிடம் ஏந்தி உணவை நிரப்பி வந்து, நிரம்ப வழியின்றித் தவிக்கும் ஏழை வயிறுகளுக்கு அளித்து மீந்ததைத் தான் உண்ணும் தியாக வாழ்வை இவள் தொடங்கினாள். சமய வாதத்திலும், இன்னும் சில நுணுக்கமான ஞான நூல்களிலும் இவள் நன்கு பயிற்சி பெற வேண்டும் என்று கருதிப் புத்ததத்தர் சமந்தகூட மலையிலிருந்து இவளை இங்கு அனுப்பியிருக்கிறார். புத்ததத்தரின் அறிமுக ஓலையோடு மூன்றாண்டுகளுக்கு முன் ஒரு கார்த்திகை மாதத்து அடைமழை நாளில், 'உலகத்தார்க்குப் பண்பின் வழியே உளக்கம் நிகழும்' என்ற அரும் பெரும் தத்துவ வாக்கியத்தை ஒலித்துக்கொண்டே இவள் இந்தக் கிரந்த சாலைக்குள் முதன் முதலாக அடியெடுத்து வைத்தாள். இன்று சோழ நாட்டிலே இவள் பாதங்கள் பட்ட இடமெல்லாம் ஏழைகளுக்குப் பசி தீர்கிறது. நோயாளிகளுக்கு நோய் தீர்கிறது. துன்பப்படுகிறவர்களுக்கு ஆறுதல் கிடைக்கிறது...''

'' மற்றவர்கள் உங்களிடமே உங்களைப் பற்றிப் புகழும்போது அதை விரும்பாத நீங்கள் இப்போது என்னை இப்படி மிகையாகப் புகழ்கிறீர்களே தாத்தா?'' என்று விசாகை குறுக்கிட்டாள்.

''இந்தப் புகழ் எல்லாம் உனக்கு அல்ல, விசாகை! நீ செய்கிற அறங்களுக்கு மட்டுமே உரியது. உலகத்தின் கண்ணீரைத் துடைப்பதற்காக உன் கண்களில் நீரைச் சுமக்கிறாயே, அந்தப் பண்புக்கு உரியது...'' என்று பொருத்தமான மறுமொழி அடிகளிடமிருந்து வந்தது.

' அதுதான் 'உலகத்தார்க்குப் பண்பின் வழியே உளக்கம் நிகழும்'-என்று நீங்களே தத்துவம் சொல்லியிருக்கிறீர்களே?'' என்று முதல்முறையாக விசாகையிடம் பேசினான் இளங்குமரன்.

''தத்துவம் என்னுடையதன்று. நியாய நூல்களிலிருந்தும் பெரியவர்களிடமிருந்தும் நான் கற்றது.''

'' தத்துவங்களைக் கண்டுபிடிக்கிறவர்களைவிடக் கடைப்பிடிக்கிறவர்கள்தான் பெரியவர்கள். கடைப்பிடிக்கிறவர்கள் வாழும் தத்துவமாக உயிருடன் நிற்கிறார்கள். கண்டுபிடிக்கிறவர்கள் ஏட்டளவில் மட்டுமே நிற்கிறார்கள். நீங்கள் வாழும் தத்துவமாக என் முன் இருக்கிறீர்கள்'' என்றான் இளங்குமரன்.

''வாழும் தத்துவம் என்று என்னைச் சொன்னால் பொருந்தாது ஐயா! நமக்கெல்லாம் ஞானப் பசி தீர்த்து வாழும் அடிகள்தான் மிகப் பெரிய தத்துவம். அடிகளைச் சுற்றியிருக்கிற ஒவ்வொருவருடைய வாழ்வும் ஒரு சிறிய காவியம். அவர் இவற்றையெல்லாம் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் மகா காவியத்தைப் போன்றவர்'' என்று விசாகை இளங்குமரனிடம் தன்னைப் புகழ்ந்து சொல்லியதைக் கேட்டுச் சிரித்தபடி இருந்தார் நாங்கூர் அடிகள்.

''நான் உன்னைப் புகழ்ந்ததற்கு நீ என்னைப் பழிவாங்குகிறாயா, விசாகை?''

''இந்தப் புகழ் எல்லாம் உங்களுக்கு அல்ல தாத்தா! உங்களுடைய ஞானத்துக்கு மட்டுமே உரியது. பலருடைய ஞானப் பசியைத் தீர்ப்பதற்காக உங்களுடைய மனமாகிய அட்சய பாத்திரத்தில் ஞானத்தை நிறைத்துக் கொண்டிருக்கிறீர்களே, அந்த நிறைவுக்கு உரியது.''

அவர் தனக்குக் கூறிய பழைய சமாதானத்தை அவரிடமே திருப்பினாள் விசாகை. அவர் குழந்தையைப் போல் சிரித்தவாறு தலைகுனிந்தார். பல நூறு பட்டி மண்டபங்களில் பல நூறு சமய வாதிகளை வென்று அவர்கள் நாட்டிய நாவல் மரக் கிளைகளைப் பறித்து 'நாவலோ நாவல்' என வெற்றி முழக்கமிட்டிருக்கிற அந்தப் பெரியவருக்கு விசாகையிடம் விளையாட்டுக்காகத் தோற்றுப் போனது போன்று விட்டுக் கொடுப்பதில் ஒரு திருப்தி உண்டு.

இளங்குமரன் சிந்தித்தான்.

'இணையிலாத அழகின் வலிமையால் என்னை நெகிழச் செய்திட முயன்ற சுரமஞ்சரியிடம் நான் தோற்கவில்லை. நான் தன்னுடைய உடைமை என்று பேதைத்தனமாக நினைத்துக் கொண்டிருக்கும் வீரசோழிய வளநாடுடையார் பெண் முல்லையிடம் நான் தோற்கவில்லை. அவர்களெல்லாம் என்னுடைய காதலைக் கூடச் சம்பாதிக்க முடியவில்லை. எண்ணெயின்றி முடிந்த சடையும், துறவுக் கோலமுமாக எதிரே இருக்கும் விசாகை என்ற இந்தப் பெண்ணோ என்னைத் தன் மேல் பக்தி செலுத்துவதற்கே தூண்டுகிறாளே! இது என்ன விந்தை?'

உடம்பும், மனமும், புலன்களும், எல்லாமே வலிமையாக இருக்க வேண்டுமென்று கருதும் நீலநாகமறவர், மனம்

சென்ற இதழில் 59-ம் பக்கத்தில் இரண்டு திங்களுக்கு முன் என்பது. இரண்டு தினங்களுக்கு முன் என்று தவறாக அச்சாகியிருப்பதைத் திருத்திக் கொள்ளவும்.

வலிதாயிருந்தால் போதுமென்று கூறும் விசாகை, வாழும் தத்துவமாகத் தோன்றும் பூம்பொழில் நம்பியாகிய நாங்கூர் அடிகள், எல்லாரையும் இணைத்து நினைத்தது இளங்குமரன் மனம். தான் கற்பதற்கிருந்த கவடிகள் தவிர உலகமே பக்கத்துக்குப் பக்கம், ஏட்டுக்கு ஏடு, வேறுபாடுள்ள மாபெருங் கவடியாகத் தோன்றியது அவனுக்கு.

சிறிது நேரம் கழித்து நாங்கூர் அடிகள் பூம்பொழிலில் உலவச் சென்றார். இரந்த சாலையில் விசாகையும், இளங்குமரனும் மட்டுமே இருந்தார்கள். அப்போது விசாகை, இளங்குமரன் சற்றும் எதிர்பாராத காரியமொன்றைச் செய்தாள்.

"இதில் ஏதேனும் இடுங்கள்! இன்றைக்கு முதல் பிட்சை உங்களுடையதாக இருக்கட்டும்" என்று அட்சய பாத்திரத்தை அவனுக்கு முன் நீட்டினாள். கையில் கவடிகளைத் தவிர இளங்குமரனிடம் அப்போது வேறு ஒன்றும் இல்லை. இளங்குமரன் எழுந்து நின்றான். அவனுக்கு மெய்சிலிர்த்தது.

"என் இதயத்தில் உங்கள் மேல் எல்லையற்றுப் பெருகும் தூய்மையான பக்தியையே இந்த அட்சய பாத்திரத்தில் இடுகிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறி, பிட்சைப் பாத்திரத்தின் விளிம்பைத் தொட்டு வணங்கினான் அவன்.

விசாகை கண்கள் மலர அவன் முகத்தைப் பார்த்தாள்.

"அவ்வளவு பெரிய பொருளை ஏற்றுக் கொள்கிற சக்தி இந்தப் பாத்திரத்துக்கு இல்லை ஐயா!"

"பாத்திரமறிந்து பிச்சையிடு என்று சொல்லியிருக்கிறார்கள் அம்மையாரே! இந்தப் பாத்திரத்தில் இடுவதற்கு ஏற்ற பொருள் பக்திதான்."

இதைக் கேட்டு விசாகை சிரித்தாள். பொய்மையைச் சிதைக்கும் அந்தச் சிரிப்பில் சத்தியம் ஒளிர்ந்தது.

"உங்களை இதற்கு முன்பே நான் ஒரு நாள் பார்த்திருக்கிறேன் ஐயா! ஆனால் அப்போது உங்களிடம் இவ்வளவு பணிவையும், பண்பையும், விநயத்தையும் என்னால் பார்க்க முடியவில்லையே?"

"எங்கே பார்த்தீர்கள் அம்மையாரே?"

"காவிரிப்பூம் பட்டினத்து இந்திர விகாரத்து வாயிலில், ஒரு துறவியை முரட்டுத்தனமாக நீங்கள் கைப்பற்றி இழுத்துப் போனபோது பார்த்தேன். இன்று பாத்திரமறிந்து இடும் பிச்சையில் சிறிது அன்றும் இட்டிருக்கலாமே?"

இளங்குமரன் முதல் அநுபவமாக ஒரு பெண்ணின் கேள்விக்கு முன் நாணித் தலை குனிந்தான். (தொடரும்)



புது
நவீனங்களை
நிர்மாணிக்கும்!
மபத்லால்
க்ரூப்
பிரின்டட்
பாப்ளின்கள்
.நியூ ஷர்ராக் (ஷர்ராக்), அஹமதாபாத். நியூ ஷர்ராக், காதியாத்.
ஸ்டாண்டர்ட், பம்பாய். ஸ்டாண்டர்ட் (நியூ சைனு), பம்பாய்.
ஸ்டாண்டர்ட், டிவாஸ். ஸஸ்ஸூன், பம்பாய்.
ஸஸ்ஸூன் (நியூ யூனியன்), பம்பாய். சூரத் காட்டன், சூரத்.
மபத்லால் பைன், நவ்ஸாரி. ககல்பாய் ஜூட், கல்கத்தா.
இந்தியன் டைஸ்டப், பம்பாய்.



பாசம்

கோமதி சுவாமிநாதன்



கந்தவேலு தீர்மானத்துடன் ரயிலில் ஏறி உட்கார்ந்து விட்டான். அதற்கு முன்னு லேயே சென்னை எழும்பூர் ரயில் நிலையத்துக் கான ரயில்வே டிக்கட் அவன் இடுப்பில் சரண் புகுந்திருந்தது. ரங்கம்மாளின் கெஞ்ச லும் புலம்பலும் கந்தவேலுவின் பிடிவாதத் தைத் தளர்த்தக் கொஞ்சம்கூட உதவவில்லே.

''நீ கம்மாக் கிட பின்னே! என் மகனேப் போயி நான் பார்க்கிறதைத் தடுக்க நீ யாரு?'' என்றான் அலட்சியமாக! கைதான் அலட்சியமாக ஆடியதே தவிர குரலில் முழுக்க முழுக்கப் பாசம் ஒலித்தது.

''எனக்கு மாத்திரம் மனசு கல்லா? அவனே ஒரு வாட்டி வந்துட்டுப் போகும்படி லட்டரு எழுதிப் போடுங்க! அம்மாம் பெரிய பட்டி னத்திலே நீங்க ஒண்டியாப் போயி முருகன் புயலைக் கண்டுபிடிச்சுட முடியுமா?''

ரங்கம்மா பேசவில்லே! புலம்பினுள்.

''அந்த ரோசக்காரப் பய மவன் அப்படி யெல்லாம் வந்துடுவானு? மணியக்கார ஐயாவை விட்டு நாலு லட்டரு எழுதியாச்சு! அவுரு உத்தியோகம் பார்த்துச் சம்பாதிக்கிற ஜோரிலே இருக்கிருரு! நமக்கு ஆத்திரம்னு போயிட்டுத்தான் வரணும்.''

அறுபது வருஷங்களாக வஜ்ரம் பாய்ந்து வளர்ந்த கட்டை கந்தவேலு. இன்றைக்கும் வயற்காட்டில் நின்று பொழுது சாய்கிற நேரம் வரை உழைத்துச் சாப்பிட உரம் படைத்த நெஞ்சம் உண்டு. பையன் முருகன் பத்து வகுப்புவரை படித்தான். பெரிய தனக் காரர்களின் குழந்தைகள் மாதிரி தன் மகனும் ஆபீசுக்குப் போய்ப் பேனுப் பிடித்து வேலே செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டான். களத்துமேட்டுப் பக்கம் அவனேத் தலைகாட்ட விடவில்லே. ஆனல் முருகன் பிறருக்குக் கைகட்டி வேலே செய்யவும் விரும்பவில்லே! சொந்த நிலத்தில் பாடுபட்டு உழைக்கவும் ஆர்வம் காட்டவில்லே. விளைவு? தண்டச் சோற்றுத் தடிராமனுகச் சோம்பேறி நண்பர்க ளுடன் சுற்றத் தொடங்கினன். வயதும் இருபத்திஞன்குக்கு மேலாகி விட்டது.

அப்போதுதான் முருகன், பொய்க்கால் குதிரை ஆட்டத்துக்கு ஒரு ஜோடி சேர்த்துக் கொண்டு தயார் செய்து வருவதாகக் கந்த வேலுவின் காதுக்குச் செய்தி எட்டியது. கந்தவேலுவின் நெற்றி நரம்புகள் புடைத் தன. ஜோடி சேர்ந்திருப்ப தாகச் சொல்லப்பட்ட அந் தப் பெண்ணின் சரித்திரம் அந்த வட்டாரம் சிரித்த விஷயம்.

சாப்பாட்டுக்கு வந்து இலேயின் முன் உட் கார்ந்திருந்த மகனேப் பார்த்ததும் கந்தவேலு வின் பாசம் கட்டுக்கடங்காத ஆவேசமாக மாறிவிட்டது. கையிலகப்பட்ட கட்டையைத் தூக்கித் தன் செல்வ மகனின் முதுகில் கொஞ்ச கொஞ்சென்று கொஞ்சி விட்டான்.

அவ்வளவு தான்; அப்படியே சாப்பிடாமல் முருகன் எழுந்து போனவன்தான்! இரண்டு மாதங்கள் வரை அவனேப் பற்றித் தகவலே இல்லே. கந்தவேலு பச்சாத்தாபத்தால் உருகிப் போனுன். பழைய பொய்க்கால் குதிரை ஜோடி வேறு ஒருவனேப் பிடித்துக் கொண்டு விட்டாள் என்ற செய்தி ஓரளவு மன நிம்மதியை அளிக்கவில்லே.

ஆனல், இரண்டு மாதங்களுக்குப் பிறகு கந்தவேலு தன் வாழ்க்கையில் முதல் தடவை யாகக் கைநாட்டு இட்டுப் பெற்றுக் கொண்ட மணியார்டர் பணமும், அந்த மணியார்டர் கூப்பன் தாங்கி வந்த செய்தியும் கந்த வேலுவின் வயோதிக மார்பை அளவுக்கு அதிகமாகவே நிமிரச் செய்தன.

முருகன்தான் பட்டினத்திலிருந்து இருபது ரூபாய் பணம் அனுப்பியிருந்தான். பட்டி னத்தில் அவன் ஓர் ஆபீஸில் வேலே பார்க் கிருனும். தெரிந்த மலேயாளிப் பையனுடன் தங்கியிருக்கிருனும். இப்போது பேரை நாக ரிகமாக முருகதாஸ் என்று வைத்துக்கொண் டிருக்கிருனும்.

தன் மகன் திருந்தி மனிதனுகி விட்டான் என்ற பெருமிதத்தில் மிதந்தான். தன் மகனும் ஒரு மேஜை நாற்காலியில் உட்கார்ந்து பட்டி னத்தையே கதிகலங்க வைத்துக் கொண்டிருக் கிருன் என்ற கற்பனையில் மிதந்தான் அவன்.

அப்புறம் தொடர்ந்து மாதா மாதம் இருபது ரூபாய் மணியார்டர் வந்தது. சென்னே எழும்பூர்ப் பகுதியிலுள்ள கெங்கு ரெட்டி ஸ்தாவிலுள்ள ஒரு வீட்டு நம்பரை, தந்தை பதில் எழுதுவதற்கு வசதியாகக் கொடுத் திருந்தான். ஆனல் ஒவ்வொரு மணி யார்டர் கூப்பனிலும் பட்டினத்துக்குத் தன் தந்தையோ தாயோ வரக்கூடாது; அவர்கள் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது என்று தவருமல் எழுதி வந்தான். தான் வேலே பார்க்குமிடத்தைப் பற்றி, வேலேயின் தன்மை பற்றி ஒரு வார்த்தைகூட எழுதவில்லே!

எழும்பூர் ரயில் நிலையத்தில் காலை எட்டரை மணி சுமாருக்கு வந்திறங்கிய கந்தவேலுவுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருந்தது. அதிகமான ஜனத் திரளையும் கார்ப் போக்குவரத்தையும் மனிதர்களின் வேகத்தையும் கண்டு அவனுக்கு அப்போதே அப்படியே ஊருக்குத் திரும்பிவிட வேண்டுமென்ற உணர்ச்சி தோன்றிவிட்டது. அதைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

வழி விசாரிக்க அவன் இரண்டு மூன்று பேர்களை அணுகியபோது ஒருவராவது அவன் பேச்சைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

எப்படியோ முண்டியடித்துக் கொண்டு எதிர்ச் சாரிக்கு வந்து சேர்ந்தான்.

அப்போது அவன் கண்ட காட்சி ஒன்று அவனைக் காலோடு தலை உலுக்கி விட்டது.

ஆம்! மனிதனை உட்கார்த்தி மாடுபோல் மற்றொரு மனிதன் அந்த வண்டியை இழுத்து ஓடும் காட்சி கந்தவேலுவுக்குப் புதிதுதான். ரிக்ஷா என்ற வாகனத்தைப் பற்றி அவன் இதற்குமுன் கேள்விப்பட்டதுமில்லை; பார்த்ததுமில்லை. மனிதனுகப் பிறந்துவிட்டு ஏன் இந்த மாட்டுத் தொழில் செய்கிறான் என்ற அருவருப்பு அவனைப் பற்றிக் கொண்டது. வேறு பிழைப்பே இல்லையா?

எத்தனை நிமிடங்கள் அப்படிச் சிலையாகப் பிரமை பிடித்து நின்றிருப்பானே தெரியாது. "என்ன நாயனு! சவாரி வறியா? ஏறிக் குந்து" என்றான் ரிக்ஷாக்காரன்.

அவன் தலை தானாகவே 'வேண்டாம்' என்று பாவனையில் அசைந்தது.

"சும்மா வா நாயனு! என்னு கூச்சப்படறீயே?" என்று உறவு கொண்டாட ஆரம்பித்தான் அவன். பட்டினத்துக்குப் புதிசான கந்தவேலுவிடம் சிரமப்படாமல் கூட எட்டு அணு தட்டும் வாய்ப்பை இழக்க விரும்புவானு?

கந்தவேலு அவன் பார்வையிலிருந்து மறைந்து தள்ளிப் போய் நின்று வழி கேட்பதில் முனைந்தான். ரயில் நிலையத்திலிருந்து நாலு பர்லாங்கு தூரத்துக்கு உள்ளேயே இருக்கும் கெங்கு ரெட்டி ரோட்டை அடையும்போது பத்து மணி ஆகிவிட்டிருந்தது.

கெங்கு ரெட்டி ரோட்டில் அவன் தேடி வந்த நம்பரில் வீடு ஒன்றும் இல்லை. ஒரு வெற்றிலைபாக்குக் கடைதான் இருந்தது.

அந்தக் கடையிலும் ஓர் அரை டிக்கட் பையன்தான் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தான். பெரியவர்கள் யாருமில்லை. இந்தக் கடையில் எப்படி முருகன் இருப்பான்? ஒரு வேளை பகலில் காரியாலயத்தில் வேலை பார்த்துவிட்டு இரவில் இங்கு படுத்துக் கொள்கிறானு?

"தம்பி! முருகன்னு யாராவது இங்கே இருக்காங்களா?" என்றான் மரியாதையுடன்.

பையன், கிழவனைக் காலோடு தலை பார்த்தான். "ஓ! முருகனு? இருக்கானே!" என்றான் யாருக்கோ சர்பத் ஊற்றியபடியே.

தன் மகனை ஏக வசனத்தில் 'அவன் இவன்' என்று அந்த வாண்டுப்பயல் குறிப்பிட்டது கந்தவேலுவுக்கு என்னவோ போலிருந்தது. மேலும் அதிக நேரம் நிற்க விரும்பாமல் "நான் அவரைப் பார்க்கணுமே" என்று தன்மட்டில் தன் மகனுக்கு மரியாதை கொடுத்தான்.

பையன் யோசித்தான். "இப்போ கான் வெண்டுக்குப் போயிருப்பான்" என்றான். 'கான்வெண்ட்' என்று அந்தப் பையன் குறிப்பிட்ட பதம் 'கவர்மெண்டு' என்று கந்தவேலுவின் காதில் ஒலித்தது. தன் பையன் சர்க்கார் உத்தியோகம் பார்க்கிறான் என்று களித்துக் கொண்டான். அந்தப் பெருமிதத்தில் பசிகூடக் குறைந்து விட்டது.

"இப்போ அவரை எங்கே போனால் பார்க்கலாம் தம்பி?" என்றான் கந்தவேலு. சர்பத் சாப்பிட்டவர் சில்லறையைக் கொடுத்து விட்டுப் போயிருந்தார். பையன் தனிமையில் இருந்தான். இந்தக் கிழவன் முருகனை 'அவர் இவர்' என்று மரியாதை வைத்துப் பேசியது அவனுக்கு வியப்பாக இருந்தது.

"அவனை இப்போ எங்கே பார்க்கிறது? யாருக்குத் தெரியும்? ராத்திரி எட்டு மணிக்கு மேலேதான் வருவான். நான் அவனைப் பார்த்தே இரண்டு மூணு நாளாச்சே!"

கந்தவேலு முகவாய்க் கட்டையைத் தடவிக் கொண்டான். அலுவலகத்திலே அவனுக்கு அவ்வளவு அதிக வேலையா?

"தம்பி! பக்கத்திலே ஏதாவது பலகாரக் கடை இருக்குதா?" என்றான் பசி வேகத்தில்.

"அதோ! அந்த மூலை திரும்பி மெயின் ரோட்டுக்குப் போ! போர்டு மாட்டி யிருப்பான்" என்று கையைக் காட்டினுன் பையன். கந்தவேலுவின் கையில் ஒரு துணிப்பைதான். வீசிக்கொண்டு நடந்தான். அந்தப் பையன் குறிப்பிட்ட ஓட்டலுக்குக் கந்தவேலுவின் காசை வாங்கிக் கொள்ளும் அதிருஷ்டமில்லை. தெரு முனையில் திடீரென்று திரும்பிய ஒரு

டாக்ஸியைக் கண்டு பின்வாங்கிய அவனைப் பின்னால் வந்து கொண்டிருந்த பூதாகார பஸ் முன்னால் மோதித் தள்ளியது! கையிலிருந்த பை எங்கோ போய் விழுந்தது. அதற்கு முன்பே அவன்பிரக்ஞை எங்கோ ஓடி ஒளிந்தது.

கந்தவேலுவுக்கு ஓரளவு மெல்லிய இழையாகத் தன் நினைவு திரும்பியபோது என்ன நினைத்துக் கொண்டானோ, மேலே அண்ணாந்து பார்த்தான். ஹோட்டலோ, நாயர் வெற்றிலை பாக்குக் கடையோ காணுமே!

அவன் எழுந்து உட்கார முயன்றபோது தான், யாரோ வந்து அவனை எழுந்திருக்க விடாமல் கீழே தள்ளிப் படுக்க வைத்ததை உணர்ந்தான். பார்வையைத் தெளிவாக்கிக் கொள்ளக் கண்களைத் தேய்க்க முயன்றான். கையையே தூக்க முடியவில்லையே. கை, உடம்பு எல்லாம் என்ன ஒரே வெள்ளைத் துணிக்கட்டு? வலது கண்கூட அல்லவா தலையோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது!

அவனைக் கீழே தள்ளிப் படுக்க வைத்த உருவம் அவன் வாயில் ஏதோ கசப்புத் திரவத்தை ஊற்றிவிட்டுப் போயிற்று.

வறண்டிருந்த தொண்டையில் ஈரப் பசை ஏற்பட்டது போல் அவன் நினைவிலும் திவலைகள் ஒளி பெற்றன. காரில் அடிபட்டு விழுந்தது நினைவுக்கு வந்தது. ஆனால் அதற்குப் பிறகு முழுசாக மூன்று நாட்கள் ஓடிவிட்டிருந்தது அவனுக்குத் தெரியாது. எப்படியோ டாக்டர்கள் அவன் உயிரை இழுத்து நிறுத்தி விட்டார்கள். முருகன் நினைவு கூடவே வந்தது. அவனுக்குச் சொல்லி யனுப்பினால் தேவலை போலிருந்தது. யார் போவார்கள்? நினைவு மீண்டும் மங்கியது.

மீண்டும் அவனுக்கு நினைவு வந்தபோது இருட்டி வெகு நேரமாகி இருந்தது. பக்கத்துக் கட்டிலிலிருந்து 'அப்பா! அம்மா!' என்று யாரோ அரற்றினான்.

"என்ன தம்பி! உடம்புக்கு என்ன?" என்றான் கந்தவேலு. பக்கத்து ஆசாமி சட்டென்று பேசவில்லை. முனகலை நிறுத்திப்பிறகு சாவகாசமாக, "என்னையா கேட்கிறே?" என்றான்.

"ஆமாம்! உன்னைத்தான். காய்ச்சலா?"

"காய்ச்சலுமில்லே! காலராவுமில்லே! கலவரம்! எந்தப் பயலோ கூட்டத்திலே கலாட்டாப் பண்ணிச் சோடாப் புட்டியை எறிஞ்சான். என் தலை அதுக்கு நேரா வந்திருச்சு! வண்டி ஒரு பக்கம் நான் ஒரு பக்கம் போய் விழுந்தேன்! வண்டி என்ன ஆச்சோ, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!"

"வண்டியா?......மாட்டு வண்டியா?"

"ரிக்ஷா வண்டி! முதலாளி பெரிய முசுடு!"

ரிக்ஷா வண்டி என்றதும் கந்தவேலுவுக்கு என்னவோ போலிருந்தது.

"ஏன் தம்பி! அந்த வண்டியிழுக்கிறது உனக்குப் பிடிச்சிருக்கா?"

"ஹூம்! நம்ப இஷ்டத்தைப் பார்த்தால் வயிறு பிழைக்கவேண்டாமா! அது சரி உனக்கு என்ன நோவு வந்துடுச்சு?" என்றான்.

"பட்டிணத்துக்கு வந்து நுழைஞ்சதும் பாவிப் பயல் மோட்டார்க்காரன் எமனா வந்துட்டான் தம்பி!" என்றான் கந்தவேலு.

'த்ஸோ த்ஸோ'. சத்தத்தைத் தொடர்ந்து சற்று மௌனம் நிலவியது. பிறகு "நீயும்

பட்டிணத்துக்கும் புதிசா?.... உனக்கு எந்த ஊரு?'' என்று கேள்வி வந்தது.

'' தெக்கத்தி சீமை சேரமாதேவிப் பக்கம்!''

'' என்ன? சேரமாதேவிப் பக்கமா?''

''என்ன தம்பி அப்படி ஆவலாக்கேக்கறே?''

'' சும்மாத்தான் கேட்டேன்! இங்கே என்ன அலுவலா வந்தியோ?....''

'' என் மகனைப் பார்க்க வந்தேன். இங்கே சர்க்காரு வேலை பார்த்துச் சம்பாதிக்கிறான்.''

'' பார்த்துட்டியா?''

'' ஹாம்! அதுக்கு முன்னாலே மோட்டார் யமனைத்தான் பார்த்தேன், தம்பி!''

'' எந்த ஆபீஸிலே உன் மகன் வேலை பார்க்கிறான்?''

'' அது தெரியாது தம்பி. அவன் தங்கியிருக்கிற இடம் தெரியும். அங்கே போய் விசாரிச்சுட்டுத் திரும்பறபோதுதான் ஆபத்திலே மாட்டிக் கிட்டேன்.''

'' அடபாவமே! உன் மவன் பேரு என்ன?''

'' முருகன் தம்பி!''

'' முருகன்!...முருகன்.....முருகன்...''

''என்ன தம்பி திருப்பித் திருப்பிச் சொல்றே?''

'' என் பேருகூட அதுதான்! உன் மகன் என்ன அலுவல் பார்க்கிறான்?''

'' அதுதான் தெரியலியே! ஏழெட்டு மாசத்துக்கு முன்னாலே ஊரைவிட்டு இங்கே வந்தான். மாசாமாசம் பணம் அனுப்பிறான். அந்தக் கெங்குரெட்டி தெரு நாயர் பையனுக்கும் தெரியலே! என்னவோ கவர்மென்டுன்னு சொன்னான். என் மவன் படிச்சவன் தம்பி! கெட்டிக்காரப் பையன்...''

சில விநாடிகள் மௌனத்தைத் தொடர்ந்து கலகலத்த சிரிப்பொலி. அதில் வேதனையின் சாயலும் படிந்திருந்தது.

'' என்ன தம்பி சிரிக்கிறே?'' கந்தவேலுவால் சிரிப்பைக் கேட்க முடிந்ததே தவிர சிரித்த முகத்தைப் பார்க்க முடியவில்லை.

'' சும்மாத்தான் சிரிச்சேன்! என்ன வேலை செய்யறான்கிறதைக் கூடத் தெரிந்து கொள்ளாமே அவ்வளவு தூரத்திலிருந்து தேடிக்கிட்டு வந்திருக்கியேன்னுதான் சிரிச்சேன்! உன் மகன் உன்னை ஏமாத்திப்பிட்டான்!''

'' என்ன ஏமாற்றவா? என் முருகன் யோக்கியன்! ரோஷக்காரன் தம்பி! மாசா மாசம் இருபது ரூபாய் பணம் அனுப்பிறான்.''

''ஏன்? பட்டிணத்திலே ஜேப்படி அடிச்சுப் பிழைக்கலாம்! பணம் கிடைக்காமலா போயிடும்?''

'' தம்பி! என்னாலே எழுந்திருக்க முடியலே. முடிஞ்சா உன்னை அடிச்சேபுடுவேன்! என் மகனுக்கு அந்தப் புத்தி வராது!

இவர் என்ன புத்தகம் படிக்கிறார்?

விடை:

1. மர்மக் கதை 2. ஆராய்ச்சி
3. ரேகை சாஸ்திரம்
4. வேதாந்தம் 5. யோகாசனம்
6. பக்தி 7. காதல்
8. ஹாஸ்யம் 9. அரசியல்

''விட்டுத்தள்ளு! என் மாதிரி ரிக்ஷா இழுத்துப் பிழைக்கிறான் என்று வச்சுக்க! அப்போ அவன் என் மகன் இல்லேன்னுடுவியா?''

'' ரிக்ஷா இழுக்கவா? அவன் மாட்டான்!''

'' அதிலே என்ன தப்பு இருக்குன்னு எனக்குத் தெரியலியே! உடம்பை உழைச்சு யோக்கியமா பிழைச்சா குற்றமா?''

'' தப்பு, தப்பு இல்லேங்கிறதைப் பற்றி நான் பேசலே தம்பி! ஆனால் என் மகன் ரிக்ஷா இழுக்கிறதை நான் பார்த்தேன், அப்பவே என் பிராணன் போகக்கூன்னு போயிடும்! பாசம் தம்பி பாசம்!''

'' நீ பட்டிணத்துக்கு வந்ததே தப்பு.''

'' என் மகன் அடிக்கடி எழுதினதைத்தான் நீ சொல்றே!''

'' சரிதான்! உன் மகன் ரிக்ஷா இழுக்கறவனாகத்தான் இருக்கணும்! அந்தப் பிழைப்பு பரிதாபகரமாக இருக்கலாம். ஆனால் அது யோக்கியமான பிழைப்பு! அவன் உன்னைத் தன் ரிக்ஷாவிலே ஏற்றிக்கிட்டுப் பட்டிணத்தைச் சுற்றிக் காட்டுவான்!''

'' தம்பி! நீ கசாப்புக் கடையிலே வேலை செஞ்சவன் போலிருக்கு! என்னை ஏன் இப்படி உன் பேச்சாலே வெட்டிப் போடறே! என் மகன் சௌக்கியமா, கௌரவமா பேனாப் பிடிச்சுச் சர்க்கார் வேலை செய்யறான். நாளைக்கு டாக்டர்கிட்டே அவன் விலாசத்தைச் சொல்லி அவனைக் கூட்டிட்டுவரச் சொல்றேன்! நீயே அவனைப் பார்க்கப்போறே!''

வார்டில் நர்ஸின் பாதரட்சை ஒலி கேட்க ஆரம்பித்தது. வாலிபன் பேச்சை நிறுத்தினான்.

காலையில் கந்தவேலு கண் விழித்தபோது பொழுது விடிந்து வெகு நேரமாகி விட்டிருந்தது. வார்டில் ஒரே வெளிச்சம். மருத்துவ விடுதி சிப்பந்தி கந்தவேலுவைச் சற்று நிமிர்ந்திருந்தபோல் சாத்திப் படுக்க வைத்தான். இப்போது கழுத்தையும் திருப்ப முடிந்தது. பக்கத்துக் கட்டில் காலியாக இருந்தது!

''ஒரு பையன் படுத்திருந்தானே இங்கே? எங்கே போயிட்டான்?'' என்று சிப்பந்தியைக் கேட்டான் கந்தவேலு.

''அவனா!...ஓரேயடியாய்ப் போயிட்டான்! காலை நாலுமணிக்கு ஜன்னி வந்தது. ஐந்து மணிக்கு ஆள் குளோஸ்!''

'' அட பாவமே!...ராத்திரி என்கூடப் பேசினானே?...அவங்க வீட்டிலேயிருந்து ஆட்கள் வந்து கொண்டு போயிட்டாங்களா?''

'' ஆ னா வ து மண்ணாங்கட்டியாவது!... ரிக்ஷாக்காரப் பையன்! அவன் சட்டைப் பையிலே இருந்த கடுதாசிகளிலிருந்து அவன் வெளியூர்க்காரன்னு பேசிக்கிட்டாங்க!... அவன் பேரு முருகனாம்! அவனைப் பெத்தவங்க எங்கேயோ திருநெல்வேலிச் சீமையிலே பத்த மடையிலே இருக்காங்களாம்! அப்பன் பேரு கந்தவேலுவோ தங்கவேலுவோன்னு சொன்னாங்க. அனாதைப் பிணமா அடக்கம் பண்ணிட்டு வீட்டுக்குத் தகவல் கொடுப்பாங்க!..''

''முருகா!'' என்ற அலறல் அந்த வார்டையே திகைக்க வைத்தது. கந்தவேலுவும் அக்கணமே ஒரு மாதிரி மனிதனாகி விட்டிருந்தான். இரண்டு மணி நேரம் கழித்து அந்தக் கட்டிலும் காலியாகக் கிடந்தது!



உங்கள் குழந்தைக்கும்

க்ரைமிக்ஸ் கொடுங்கள்



க்ரைமிக்ஸ் குழந்தைதான் எப்பொழுதும் முன்னிற்பவன்

—விவேகமுள்ள தாய் தன் குழந்தைக்கு நல்ல க்ரைப் மிக்சரான க்ரைமிக்ஸையே தருகிறாள். க்ரைமிக்ஸ் அவ்வளவு உன்னதமானது. உங்கள் குழந்தைக்கு குடல்வலி, வாயு மற்றும் வயிற்றுக்கோளாறுகளினின்றும் அபாயமின்றி உடனடி நிவாரண மளிக்கிறது. குழந்தைக்கு பல் முளைக்கும்பொழுதும், தாய்ப்பாலை மறக்கச்செய்யும்பொழுதும் ஆரோக்கியமாகவும், புன்சிரிப்புடனும் இருக்கச் செய்கிறது. உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்துக்கு க்ரைமிக்ஸ் மிகவும் அவசியமென்பது ஞாபகமிருக்கட்டும்

பிணுக்ஸ் மற்றும் பர்ஜுல் தயாரிப்பாளர்களான Boots பூட்ஸ் கம்பெனியாரின் ஓர் சிறந்த தயாரிப்பு


TAM

NATIONAL-BG-388

அழகர் கோயில் அழகன்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்

கோவையில் ஒரு பட்டி மண்டபம். "அழகை ஆராதனை பண்ணியவள் ஆண்டாள்; அறிவை ஆராதனை பண்ணியவர் மாணிக்க வாசகர்: இருவரது ஆராதனையில் எவரது ஆராதனை சிறந்தது?" என்பது விவாதத்துக்கு எடுத்துக் கொண்ட பொருள். ஆண்டாள் பாசுரங்களையும் மாணிக்கவாசகரது திருவாசகப் பாடல்களையும் அலசி ஆராய்ந்து விவாதித்தனர், விவாதத்தில் கலந்துகொண்டவர்கள். பட்டி மண்டபத்தின் தலைமையை ஏற்றிருந்த நான் விவாதத்தில் தீர்ப்புக் கூறி முற்றுப்புள்ளி வைக்க வேண்டியிருந்தது. அந்த வேலை எவ்வளவு சிரமமானது என்பதை அப்போது உணர்ந்தேன்; நான் சொன்னேன்: 'அழகு சிறந்ததா? அறிவு சிறந்ததா?' என்பது விவாதம் அல்ல. ஆராதனைக்கு உரியவைகளில் அறிவு சிறந்ததா, அழகு சிறந்ததா? என்பதுதான். அறிவுடைமை அழகுடைமையை விடச் சிறந்தது தான். என்றாலும் அறிவு, இறைவன் தன்மைகள் என்ன என்று விவகரித்து அதில் தெளிவு காண உதவுமே அன்றி ஆராதனைக்கு உரிய ஒன்றாக அமைதல் இயலாது. ஆனால் ஆராதனைக்கு உரியதாக இறைவனது அழகுதான் உதவுதல் கூடும் என்று பீடிகை போட்டு, ஆண்டாள் தன் காதலனது அழகை எப்படி எப்படி அனுபவித்து ஆராதனை பண்ணுகிறாள் என்று பல பாசுரங்களை மேற்கோளாகக் காட்டினேன். திருவரங்கத்து அழகனைக் கண்டு காதலித்து நிற்கும் அவள் நிலையை விளக்கும் பாடல் ஒன்றையும் குறித்தேன். பாடல் இதுதான். தன் தோழியைப் பார்த்துப் பேசுகிறாள் ஆண்டாள்.



கோபுரம்

எழில் உடைய அம்மனைமீர்!
என் அரங்கத்து இன்னமுதர்
குழல் அழகர், வாய் அழகர்
கண் அழகர், கொப்பூழில்
எழுகமலப் பூ அழகர்
எம்மானார் என்னுடைய
கழல் வளையைத் தாமும்
கழல் வளையே ஆக்கினரே

என்று ஏங்குகிற பாடலில் ஆண்டாள் எப்படி அரங்கத்து அழகனின் குழல் அழகிலும், கண் அழகிலும், கொப்பூழ் அழகிலும் உள்ளம் பறி கொடுத்து நின்றிருக்கிறாள் என்பதைப் பார்க்கிறோம். அன்று மிதிலை நகரில் உலா வந்த ராமனைக் கண்ட பெண்கள் எப்படி அவனது தோள், தாள், தடக்கை முதலிய அவயவங்களைக் கண்டு மோகித்து அந்த அவயவங்களில் வைத்த கண்ணை எடுக்க முடியாமல் நிறை நின்றார்கள் என்று கம்பன் வர்ணிக்கிறானே, அதையும் மிஞ்சிய நிலையில் அழகனது அவயவங்கள் எல்லாவற்றையுமே ஆராதித்துக் காணும் பேறு பெற்றவள். ஆதலால் அவளது அழகு ஆராதனையே சிறந்தது என்று கூறினேன் நான். இப்படித்தான் அந்த அழகன் ஸ்ரீமந் நாராயணன் எல்லா ஆழ்வார்களாலும் ஆராதிக்கப் பட்டிருக்கிறான். ஆழ்வார்கள் கண்ட அழகர்களில் எல்லாம் சிறந்த அழகனாக இருப்பவனே திருமாலிருஞ்சோலை என்னும் அழகர் கோயிலில் அழகன் என்ற பெயரோடு கோயில் கொண்டிருக்கிறான். அந்த அழகன் இருக்கும் அழகர் கோயிலுக்கே செல்கிறோம் இன்று.

அழகர் கோயில் என்னும் திருமாலிருஞ்சோலை மதுரைக்கு வடக்கே 12 மைல் தொலைவில் இருக்கிறது. இதனையே சோலைமலை என்றும் கூறுகின்றனர். சோலைமலை, திருமாலிருஞ்சோலை என்றெல்லாம் கூறினால் வண்டிக்காரர்களுக்கோ, பஸ்காரர்களுக்கோ தெரியாது. அழகர் கோயில் என்று சொன்னால் மாத்திரமே தெரியும். மதுரையிலிருந்து காரில் செல்லலாம், பஸ்ஸில் செல்லலாம். இல்லாவிட்டால் ஜட்கா பிடித்துக் கொண்டும் செல்லலாம். அப்படிச் சென்று சேர்ந்தால் முதலில் நம்மை ஒரு பெரிய சோலையிலே இறக்கி விடுவார்கள். சோலைக்கு மேற்கும் வடக்கும் நீண்டுயர்ந்த மலைச்சிகரம். ஆதலால் சோலைமலை என்று அந்தத் தலம் பெயர் பெற்றது பொருத்தம் என்றே தோன்றும். அத்துடன் அங்குள்ள சோலையும் மரங்கள் நிறைந்து நன்றாக இருண்டே இருக்கும். அதனால் அதனைத் திருமாலிருஞ்சோலை என்று பாராட்டுவதும் பொருத்தம்தான். இந்தச் சோலையின் நடுவிலேதான் கோயில். கோயிலின் பிரதான வாயில் எப்போதும் அடைத்தே வைத்திருக்கும். அங்குதான்

கோயிலின் காவல் தெய்வமான பதினெட்டாம்படிக் கருப்பன் இருக்கிறார். இந்தக் கருப்பண்ணசாமிக்கு இங்கு உருவம் இல்லை. பதினெட்டாம்படிக் கதவுகளையே தெய்வமாக எண்ணிப் பூஜை நடக்கிறது. பதினெட்டாம் படிக் கருப்பன் முன்பு சத்தியம் செய்வது என்பது இன்னும் நடக்கிறது. அவருடைய சந்நிதி முன்பு யாரும் பொய் சொல்லத் துணிய மாட்டார்கள். இவருடைய காவலின் கீழ்தான் அழகர் கோயில் அழகன் வாழ்கிறார். தினந்தோறும் கோயிலில் உள்ள பண்டாரத்தைப் பூட்டி, சாவியை இந்தப் பதினெட்டாம்படிக் கருப்பனிடம் கொண்டு வைத்துவிடுவார்கள். மறுநாள் காலை வந்து பட்டர், சாவி எடுத்துக் கொண்டு செல்வார். இன்னும் அழகர், மதுரைக்கு மீனாக்ஷி கல்யாணத்துக்காகப் புறப்படும்போது அவர் அணிந்துள்ள நகைகளின் ஜாபிதாவை இக்காவல் தெய்வத்தின் முன்பு படித்துக் காட்டுவார்கள். அழகர் திரும்பும்போதும், ஜாபிதா கருப்பண்ணர் முன் படித்துக் காட்டப்படும். இத்தனை அக்கறையுடன் கோயிலையும் கோயில் சொத்துக்களையும் பராமரிக்கும் தெய்வமாக இவர் விளங்குகிறார்.



உலகளந்தார்

கோயிலுள் செல்ல, பதினெட்டாம் படி வாசலுக்கு வடபுறம் உள்ள மதிலின் ஒரு சுவர் திறந்திருக்கும். அதுதான் வண்டி வாசல். அந்த வாசல் வழியே நுழைந்து கோயிலின் வெளிப்பிராகாரத்தை அடையலாம். அங்கு கோயில் முன்பு இருக்கும் பிரதான மண்டபமே கல்யாண மண்டபம். இங்குதான் நல்ல சிற்ப வடிவங்களை உடைய தூண்கள் இருக்கின்றன. இரணியன் உடல் கிழிக்கும் நரசிம்மர், வேணு கோபாலன், ரதி மன்மதன், கருடவாகன விஷ்ணு, திரிவிக்ரமர், லக்ஷ்மி வராகர் எல்லாம் நல்ல அழகான சிற்பங்கள். இவைகளைக் காண்பதற்கென்றே ஒரு நடை இக்கோயிலுக்குப் போகலாம்.

இனித்தான் கோயிலின் பிரதான வாயிலான தொண்டைமான் கோபுர வாசலைக் கடந்து உள் பிராகாரங்களுக்குச் செல்ல வேணும். கோயில் மிகப் பெரிய கோயில். இரண்டு மூன்று பிராகாரங்களைக் கடந்துதான் கருவறை சேர வேண்டும். வழியில் இருப்பவை, சுந்தர பாண்டியன் மண்டபம், ஆரியன் மண்டபம், முனையதரையன் மண்டபம் முதலியன. கோயிலின் கருவறையில் மூலவராக நிற்பவர் ஸ்ரீ பரமசாமி. இவர் ஐம்படை தாங்கியவராய்க் கம்பீரமாக நிற்கிறார். ஸ்ரீதேவியும் பூதேவியும் இருபுறம் நிற்கிறார்கள். இவர் கையிலுள்ள சக்கரம் பிரயோக சக்கரம். இவர் முன்பு எழுந்தருளியிருக்கும் உற்சவ மூர்த்தியே அழகர் என்னும் சுந்தரராஜர். ஏற்றிருக்கும் பெயருக்கு ஏற்ப மிகவும் சுந்தரமான வடிவம். அபரஞ்சித் தங்கத்தால் ஆனவர். இவருக்கு அபிஷேகம் எல்லாம் நூபுர கங்கைத் தீர்த்தத்தில்தான். வேறு தீர்த்தத்தால் அபிஷேகம் செய்தால் கறுத்து விடுகிறாராம். இவரே சோலைமலைக் கரசர். இந்த உற்சவரைத் தவிர வேறு சில உற்சவ மூர்த்திகளும் உண்டு. அவர்கள் எல்லாம் ஸ்ரீ சுந்தரபாஹு, ஸ்ரீநிவாசர், நித்யோத்ஸவர் முதலியோர். இவர்கள் எல்லாம் வெள்ளியில் செய்யப்பட்டவர்கள். இந்தக் கருவறையை அடுத்த பிராகாரத்திலேயே வலம்புரி விநாயகர் இருக்கிறார். இந்தப் பிராகாரத்திலேயே சேனை முதலியார், விஷ்வக் சேனர் இருக்கிறார்கள். இங்குள்ள பைரவர் க்ஷேத்திர பாலகர் என்று அழைக்கப்படுகிறார். இவர் நிரம்பவும் வரப்பிரசித்தி உடையவர். கோயிலின் அர்த்தசாம பூஜை முடிந்ததும் கோயில் கதவைப் பூட்டிச் சாவியை இந்த க்ஷேத்திர பாலகர் முன் வைத்து விடுவார்கள். மறுநாள் காலையில் எடுத்துக் கோயிலைத் திறப்பார்கள்.

இக்கோயிலின் தாயார் சந்நிதி தென்பக்கம் இருக்கிறது. இவளே கல்யாண சுந்தரவல்லி. தனிக் கோயில் தாயார் என்றும் அழைப்பார்கள் மக்கள். கல்யாண சுந்தரவல்லி என்ற பெயருக் கேற்ப அதிக சௌந்தர்யத்துடனேயே விளங்குகிறாள். கோயிலின் வடக்கும் பிராகாரத்தில் ஆண்டாள் சந்நிதி. உற்சவ மூர்த்தியான ஆண்டாள், மற்ற தலங்களைப் போல் அல்லாது உட்கார்ந்திருக்கும் பாவனையில் இருக்கிறது. சுந்தரராஜர் தமது திருக்கல்யாண தினத்தன்று ஸ்ரீதேவி, பூதேவி, கல்யாண சுந்தரவல்லி, ஆண்டாள் என்னும் நான்கு தேவிமார்களுடன் எழுந்தருளுகிறார். ஸ்ரீ ஆண்டாள் ரங்கநாதரையும், அவருடைய அம்சமான சுந்தரராஜரையும் தம் கணவனாக வரித்துக் கொண்டாள் என்று சொல்லப்படுகிறது. இந்த சந்நிதிகள் தவிர இக்கோயிலில் ஸ்ரீ சுதர்சன சக்கரர், யோக நரசிம்மர் முதலிய சந்நிதிகளும் விசேஷமானவை. இன்னும் இங்குள்ள ராக்காயி அம்மனும் ஸ்தல தீர்த்தங்களுடன் அதி தேவதையாக விளங்குகிறாள்.

இந்த ஸ்தலத்தில் கோயிலுக்கு அடுத்தபடியாக இரண்டு தீர்த்தங்கள். ஒன்று நூபுர



அன்னாசிப்பழம் துருவத்திலே

கிடைக்குமா?  இல்லை,

தகாத காரியங்களை நாங்கள் கூறவில்லை

 மிட்லண்டாரால் 

இதுவும் செய்ய

முடியும். மிட்லண்ட் அன்னாசி பழங்கள்

மனங்கவரும்  கூட்டுச் சாதனங்கள்

நாவிற்கினிய சிற்றுண்டிகள் 

இவைகளின் திகட்டாத சுவையினால்

தான் பன்மடங்கு கீர்த்தியடைந்துள்ளது

Midland

மிட்லண்ட்-சுவை மிகுந்த 28 வகைகள் பழங்களாகவும், மரக்கறிகளாகவும், ஜாம்களாகவும், ஜெல்லிகளாகவும், மற்றும் கெச்சப்களாகவும் கிடைக்கின்றன.

தயாரிப்பாளர்கள் : மிட்லண்ட் ப்ருட் அன்டு வெஜிடபிள் ப்ரொடக்ட்ஸ் (இந்தியா) மதுரா.

ஏக-போக விநியோகஸ்தர்கள் : கார்ன் ப்ரொடக்ட்ஸ் கோ., (இந்தியா) பிரைவேட் லிட்., பம்பாய்

இந்தியாவிற்கான ஏஜெண்டுகள் : பாரி அன்டு கம்பெனி லிமிடெட்.

கங்கை. மற்றொன்று சிலம்பாறு. கோயில் வடக்கு வாயில் வழியாக மலை ஏறி இரண்டு மைல் தூரம் சென்றால் நூபுர கங்கை என்னும் தீர்த்தத்தை அடையலாம். அதன் உற்பத்தி ஸ்தானம் தெரியவில்லை. யானைத் துதிக்கை போல் அமைந்திருக்கும் கோமுகியின் வழியாக மாதவி மண்டபத்துக்கு வருவதைத்தான் பார்க்கிறோம். இந்தத் தீர்த்தத்தில் இரும்புச் சத்தும் தாமிரச் சத்தும் இருக்கின்றனவாம். அதனால் இதில் நீராடுபவர்களுக்குத் தீராத நோயெல்லாம் தீர்கிறது. இத்தீர்த்தம் தெற்கு நோக்கிப் பாயும்போது சிலம்பாறு என்று பெயர் பெறுகிறது. இந்தச் சிலம்பாறு ஆதியில் பிரமன் திரிவிக்கிரமனின் தூக்கிய திருவடியில் அபிஷேகம் செய்த நீர் என்று நம்பிக்கை. இன்று இந்த ஆறு சுந்தரராஜனின் அடிகளை வருடிக்கொண்டு பாய்ந்து பெருகி வயல்களை வளப்படுத்துகிறது. இதன் சுவை இனிமையாக இருக்கிறது. ஆதலால் இதனைத் தேன் அருவி என்று அழைக்கிறார்கள் மக்கள். இந்த நூபுர கங்கை சிலம்பாறு இருந்த இடத்தில்தான் அந்தப் 'பழமுதிர்ச்சோலைமலை கிழவோனான முருகன் அன்று கோயில் கொண்டிருந்தான். அதுவே ஆறுபடை வீடுகளில் ஒன்றான பழமுதிர்ச்சோலைமலை என்றும் அறிகிறோம். இல்லை, இது விவாதத்துக்கு உரிய விஷயம் என்று வாதிடுவோர் உண்டு. இத்தனை விவாதங்களுக்கு இடையிலும் சமீபகாலத்தில் அங்கு முருகனுக்கு ஒரு கோயில் எடுப்பித்திருக்கிறார்கள் பக்தர்கள். எப்படியோ இந்த மலை ஆதிமுதல் முருகனுக்கும், திருமாலுக்கும் உரிய மலையாக இருந்து வந்திருக்கிறது. கந்த புராணம் அதனாலேயே இதனை முத்திதரு பேரழகர் திருமலை என்று சிறப்பிக்கிறது.

அழகர் மலை அழகனான சுந்தரராஜன் நிரம்பச் செல்வம் படைத்தவர். ஸ்ரீரங்கத்து அரவணையான் சொத்து எவ்வளவு என்று ஒருவாறு நாம் அறிவோம். 'அரங்கன் சொத்து அழகன் அங்கவடிக்கும் காணாது' என்பது பழமொழி. என்றால் அழகன் எவ்வளவு செல்வர் என்று கணிக்கலாம். சித்திரா பௌர்ணமியில் அவன் சர்வாலங்கார பூஷிதனாக மதுரைக்கு எழுந்தருளும் கோலாகலம் ஒன்றைப் பார்த்தாலே தெரியும். சுந்தரராஜன் நித்யோத்சவப் பெருமாள். பிரதி தினமும் ஏதாவது உத்சவம் நடந்து கொண்டேயிருக்கும். இவற்றில் சிறப்பானது சித்திரா பௌர்ணமித் திருநாள்தான். மதுரையில் மீனாக்ஷி சுந்தரேசுவரருக்கு அன்று திருமணம் நடக்கிறது. அதைக் காணச் சீர் வரிசைகளுடன் புறப்படுகிறார் சுந்தரராஜர். அவர் வைகைக்கரை வந்து சேருமுன் அவரை மக்கள் எதிர்கொண்டு அழைக்கின்றனர். வழியில் உள்ள மண்டபங்களில் எல்லாம் தங்கிப் பக்தர்களது வழிபாட்டை ஏற்றுக்கொள்கிறார். சித்ரா பௌர்ணமியன்று வைகை ஆற்றில் இறங்கி வண்டியூர் வரை சென்று தேனூர் மண்டபத்தில் தங்கித் திரும்புகிறார். திரும்பும்போது நடக்கும் புஷ்பப் பல்லக்கு சேவை எல்லாம் பிரசித்தமானது. இந்த உலாவைப் பற்றி மக்கள் பேசிக்கொள்வதெல்லாம் விசித்திரமானது. அதாவது சுந்தரராஜன் தன் தங்கை திருமணத்துக்குச் சீர் வரிசைகளுடன் வருவதாகவும் அப்படி வருவதில் கொஞ்சம் தாமதம் ஏற்பட்ட காரணத்தால் குறித்த காலத்தில் வந்து சேர முடியவில்லை என்றும், ஆதலால் இவர் வருமுன்பே முகூர்த்தம் நடந்து விடுவதாகவும், அதனால் கோபம் கொண்டு மதுரை நகருக்கு வராமல் வைகை வழியாகவே வண்டியூர் செல்வதாகவும் சொல்வர். இக்கூற்றில் உண்மை இல்லை. மீனாக்ஷி திருமணத்துக்குச் சுந்தரராஜன் வந்திருந்து தங்கையைத் தாரை வார்த்துக் கொடுத்ததாகவே வரலாறு. இதற்குரிய சிற்ப வடிவமும் சோமசுந்தரர் கோயிலில் இருக்கிறது. அப்படியிருக்க மக்கள் இப்படிக் கதை திரிப்பது சரியல்லதான். என்றாலும் இப்படியெல்லாம் கடவுளர் வாழ்விலும் பிணக்குகள் ஏற்படுத்தி அனுபவிப்பதிலே ஓர் இன்பமே காண்கிறார்கள் பொதுமக்கள்.

பன்னிரு ஆழ்வார்களில் பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார் முதலிய அறுவரால் இந்த அழகர் சுந்தரராஜன் மங்களாசாஸனம் செய்யப்பட்டிருக்கிறார். பெரியாழ்வாருடன் ஆண்டாள் இந்தச் சோலைமலைக்கு வந்திருக்கிறாள். அவள் சூடிக் கொடுத்த மாலையை அழகர் உவந்து ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

குலமலை கோலமலை
குளிர் மாமலை கொற்றமலை
நீலமலை, நீண்டமலை
திருமாலிருஞ் சோலைமலை

என்று பெரியாழ்வார் பாடியிருக்கிறார்.

திருமாலிருஞ் சோலை
என்றேன், என்னத்
திருமால் வந்து என் நெஞ்சு
நிறையப் புகுந்தான்

என்று நம்மாழ்வார் பாடுகின்றார்.

ஆழ்வார்கள் காலத்துக்கும் முந்திய பழம் பெருமை உடையது இத்திருக்கோயில். சங்க இலக்கியங்களில் ஒன்றான பரிபாடலில் இங்குள்ள கண்ணன்–பலராமன் கோயில் பேசப்படுகின்றது. சங்க காலத்துக்குப் பிந்திய இலக்கியமான சிலப்பதிகாரத்திலும் இம்மலை, இம்மலைமேல் உள்ள திருமால், தீர்த்தங்கள் எல்லாம் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இக்கோயிலை, மதுரையை ஆண்ட மலயத்துவஜன் கட்டினான் என்பது வரலாறு. பாண்டிய மன்னர் பலர் இக்கோயிலுக்குப் பலவகையான திருப்பணிகளைச் செய்திருக்கிறார்கள். ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் இக்கோயில் விமானத்துக்குப் பொன் வேய்ந்திருக்கிறான். பின்னர் விஜயநகர நாயக்க மன்னர்களின் பிரதிநிதியான விசுவநாத நாயக்கர் எவ்வளவோ திருப்பணிகளைச் செய்திருக்கிறார். இப்படியாக விரிவடைந்து புகழ் பெற்று நிற்கும் அழகனைத்தான் மக்கள் கள்ளழகன் என்கின்றனர். அந்த வட்டாரத்துக் கள்ளர் குல மக்கள் தலைவன் என்பதால் அப்பெயர் பெற்றான் என்பர். எனக்குத் தோன்றுகிறது, இப்படிச் சொல்வது தவறு என்று. கோயிலுக்குவருவோர்உள்ளங்களைக் கவர்ந்துகொள்ளும் கள்வனாக இருப்பதினால்தான் அவனைக் கள்ளழகன் என்று சொல்கிறார்கள் பொதுமக்கள். நீங்களும் சென்று அவனால் களவாடப்பட்டு, உள்ளம் பறிகொடுத்துத் திரும்பினால் நான் ஒன்றும் அதிசயப்பட மாட்டேன்.



கடிதம் தந்த கலவரம்

ஒரு மனிதனின் சித்த ஸ்வாதீனத்தைப்பற்றி ஒரு பத்துப் பன்னிரண்டு பேர்கள் கேள்வி போட்டு விட்டால் அவனுக்கே தன்னைப் பற்றி வலுத்த சந்தேகம் ஏற்பட்டுவிடுகிறது. முன்பு வாயிற் காப்போனாக இருந்த அந்த சிங்குக்கு இந்த அனுபவம்தான் ஏற்பட்டது. அதற்காக மற்றவர்களையும் குறைகூறக் கூடாது. ஒட்டிய ரிஜிஸ்தர் தபால் ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் ஓர் ஆசாமி, "இதற்குள்ளே என்ன இருக்கு?" என்று கேட்டால் நீங்கள் மட்டும் என்ன செய்வீர்களாம்? "திறந்து பார் அப்பனே!" என்றுதானே சொல்லுவீர்கள்! அவனுக்கோ இந்த யோசனை பயப்பிராந்தியை உண்டு பண்ணுகிறது. "ஊஹூம். அது மட்டும் முடியாது" என்று சொல்லி விட்டுச் செல்கிறான். எங்கும் யாரும் அதே யோசனையைத்தான் சொல்கிறார்கள். சரி, அத்தனை பேருக்குமே பைத்தியம் பிடித்து விட்டது என்று அவன் முடிவு கட்டுகிறான். அப்போது யாரோ ஒருவர் சொல்கிறார்: "கவரைத் திறக்காமலே அதற்குள்ளிருப்பதை அறிய விரும்பினால் அதை ஒரு எக்ஸ்-ரே நிலையத்துக்கு எடுத்துச் செல்லேன்" என்று. இந்த யோசனை தெரிவித்தவர் ஒரு முன்னாள் கம்பவுண்டர் — அடுத்த தெருக்காரர்.

"அப்படி யென்றால்?" என்றான் கோவிந்தசிங். விளக்கமும் தரப்பட்டது. "அது எங்கே இருக்கிறது?" என்றான். வழிகாட்டினார் அவர்.

அவன் எக்ஸ்-ரே நிலையம் நோக்கி முன்னேறுவதற்குள் நாமும் கொஞ்சம் பின்னேறி அவனது சரித்திரத்தின் முந்தைய அத்தியாயம் ஒன்றை அறிந்து கொள்வது நலமாயிருக்கும்.

* *

1914-லிருந்து 1918 வரை நடைபெற்ற போரில் பணியாற்றி விட்டுத் திரும்பிய கோவிந்த சிங்குக்கு வாயிற் காப்போன் வேலை அளிக்கப்பட்டது. அவனுக்கு அந்த வேலை ரொம்பவும் பிடித்துப் போயிற்று. அவனுக்கு காக்கி யூனிபாரமும், தோளில் அணிந்துகொள்ளப் பளபளக்கும் பட்டையும், குறுந்தடி ஒன்றும் கொடுத்தார்கள். ஆபீஸ் வாயிலில் ஒரு ஸ்டூலைப் போட்டுக் கொண்டு குறுந்தடியைப் பிடித்தவாறு அவன் அமர்ந்திருப்பான். அவனது அதிபரின் கார், வாயிலில் வரும்போது அவன் விரைப்பாக 'அட்டென்ஷ'னில் நின்று ராணுவ சலாம் ஒன்று போடுவான். வேலை நேர முடிவில் ஜெனரல் மானேஜர் படிகளில் இறங்கிவரும் அடியோசைக்காகக் காத்திருந்து, விரைப்பாக 'அட்டென்ஷ'னில் நிற்பான். அவர் போனபின் அந்த ஆபீஸின் நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்கள் வெளியேறுவார்கள். கதவுகள் சாத்தப்படும். சிங் தன் ஸ்டூலை எடுத்துச் சென்று மாடிப் படிக்கட்டின் கீழே வைப்பான்; அதன் மீது குறுந்தடியை வைப்பான். வெளியே வந்து பிரதான வாயிலையும் அடைத்துப் பூட்டிவிடுவான். இந்தமாதிரி இருபத்தைந்தாண்டுகள் அவன் கழித்தாயிற்று. ஒருநாள் 'பென்ஷன்' பெறவேணுமென்று கேட்டுக்கொண்டான். இந்தக் கண்ணும் காதும் மட்டும் மங்கலாக, மந்தமாகப் போய் அவனைக் கைவிடாதிருந்தால் அவன் 'ரிடேர்' ஆவது பற்றிச் சிறிதும் எண்ணியே இருக்கமாட்டான். என்ன செய்ய?

ஒரு நாள் அதிபரின் 'திரு முன்னர்' அவன் ஆஜர்ப்படுத்தப்பட்டான். தஸ்தாவேஜிகளிலிருந்து தம் நோக்கை ஒரு க்ஷண காலத்துக்கு எடுத்த அதிபர் "உன் வேலையில் எங்களுக்குப் பரம திருப்தி; அதனால் உன் ஆயுட்காலம் வரைக்கும் உனக்கு

மாதம் பன்னிரண்டு ரூபாய் பென்ஷன் தரக் கம்பெனி உத்தேசித்திருக்கிறது'' என்று மெல்லிய குரலில் கூறினார். சிங்கின் இதயத் தில் நன்றியும் பெருமிதமும் விம்மித் ததும் பின. அவன் வாழ்நாளில் இரண்டாம் முறை யாக அந்தப் 'பெட' மனிதர் அவனிடம் பேசி விட்டார்! முதலில் பேசியது அவன் வேலையில் சேர்ந்த அன்று. சிங்கின் கண்களில் அவர் தெய்வத் தன்மையே பெற்று விட்டவர். தெய்வம் யாரிடமானாலும் ஓரிரு சமயங்களில் பேசிவிட்டாலே போதாதா என்ன?

அவன் வாழ்க்கை தடங்கலின்றியே சென்றது. அவனுடைய 'பென்ஷன்', அதோடு அவன் பெண்ஜாதி இரண்டு வீடுகளில் பெருக்கி, துணி தோய்த்துப் போட்டுக் கொண்டு வந்தது—இந்த வருமானம் போது மானதா யிருந்தது. சாப்பிடுவான், நண்பர் களைப் பார்ப்பான், தூங்குவான். மாலை வேளை களில் அவன் தாயாதி வைத்திருந்த வெற்றிலை பாக்குக் கடையில் உட்கார்ந்திருப்பான். இந்த வழக்கமான கதி மாதப் பிறப்பன்று மட்டும் மாறுபடும். அன்றைக்கு அவன் காக்கி யூனிபாரத்தை அணிந்து தனது பழைய ஆபீஸுக்குச் செல்வான்; 'பென்ஷன்' தொகையைப் பெறுவான்.

அவனுக்குத்தான் எவ்வளவு அவகாசம இருந்தது! ஓய்வுக் கடல் என்றே அதைச் சொல்லலாம்! அப்போதுதான் அவன் தன்னைப் பற்றிய ஒரு விஷயத்தையே கண்டு பிடித்துக் கொண்டான். அதாவது அவனுக் குக் களிமண்ணினாலும், மரத் தானாலும் பொம்மைசெய்யத் தெரிந்திருந்தது. அண்டை வீட்டுக் குழந்தை யொன்று தனது பொம் மையை அவனிடம் 'ரிபேர்' செய்துகொள்ளக் கொண்டு வந்தபோது அவன் அதை வெறு மனே 'ரிபேர்' மட்டும் செய்யவில்லை; புதிய தொரு பொம்மையாகவே ஆக்கிவிட்டான். இதில் அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியில் அவன் இந்த வேலையிலேயே ஆழ்ந்து போகத் தொடங்கி விட்டான்.

காலம் ஓடியது. வீட்டின் முன் பக்கம் அமர்ந்து கொண்டு, குழைத்த களிமண் முன் குனிந்து உட்கார்ந்து உழைத்து, இந்தப் பிரபஞ்சம் முழுவதற்கும் ஒரு சின்னஞ்சிறு பிரதியை சிருஷ்டிக்கலானான். வாழ்வின் சாயல்கள் யாவற்றையும் அங்கே காணலாம்; சகலமான நிலைகளையும், எல்லா ஜந்துக்களை யும் காணலாம். ஒவ்வொன்றும் அவன் பாம்பு விரல் அளவுதான். அதிலேயே முழு கிராமங்கள், பட்டினங்கள், அவன் பாரா காத்த ஆபீஸ் வாசலில் பார்த்த பிச்சைக் காரி, வெள்ளரிக்காய் வியாபாரி இத்தியாதி! கார்ட்டூன்காரரின் கண் இருந்தது இந்தக் கோவிந்தசிங்குக்கு. மெல்லிய மரப் பீடங் களில் தன் படைப்பைப் பொருத்தி, கவர்ச்சி யைக் கூடுதலாக்குவான். தாயாதியின் கடையில் கொண்டு போய் வைப்பான். அவை ஏராளமான மக்களை ஈர்த்தன; அதி விரைவில் விற்பனையாயின.

பொம்மை வேலை தொடங்கியபின் வந்த அந்த முதல் பென்ஷன் தினத்தன்று அவன் தெருக்காட்சிப் பொம்மைத் தொகுப்பு ஒன்றை ஆபீசுக்கு எடுத்துச் சென்றான். அது தன் தலை சிறந்த படைப்பு என்று அவன் கருதி னான். அதை அக்கவுண்டண்டிடம் கொடுத்து ''சாஹேபிடம் கொடுங்கள்'' என்றான்!

''ஆல்ரைட்''—புன்னகை செய்தார் அவர்.

ஆபீஸில் அது பெருத்த பரபரப்பை உண் டாக்கியது. அரை மணி காலம் வேலையே நடக்கவில்லை.

அடுத்த பென்ஷன் தினத்தன்று குழந்தைகள் விளையாட்டைச் சித்திரிக்கும் பொம்மையைக் கவுண்டரில் கொடுத்தான். ''அது சாஹேபுக் குப் பிடிச்சதா?'' என்று கேட்டான்.

''ஓ'' என்று பதில் வந்தது.

''இதையும் அவரிடம்...''

அதற்கப்புறம் ஒவ்வொரு பென்ஷன் தினத் தன்றும் எஜமானுக்குக் காணிக்கை செலுத்து வதை ஒரு சம்பிரதாயமாகவே செய்து கொண்டு விட்டான் சிங்.

''சாஹேப் என்ன சொன்னார்?'' என்ற அவனது வழக்கமான கேள்விக்கு, அக்கவுண் டெண்ட் வழக்கமாகக் கூறிய ''பேஷா யிருக்கு என்று சொன்னார்'' என்ற பதிலையே சன்மானமாகக் கருதி மகிழ்ந்தான் அவன்.

அவன் தன் சாதனைகளின் சிகரமான படைப்பைச் செய்து விட்டான். அவனுடைய

ஆர். கே. நாராயணன்

ஆபீசின் முகப்புப்புறம்; அவனே அங்கு இருக் கிறான்; வாயிலில் ஒரு கார்; அதிலிருந்து அதிபர் இறங்குகிறார்.

தத்ரூபமாக அமைந்து விட்டது அது. அதைப் பார்க்கும் போது அந்த ஆபீஸ் நாட்களுக்கே அது அவனை இழுத்துச் செல்வது போல் ஒரு பிரமை தட்டியது. பென்ஷன் தினத்தன்று அவன் அதைக் கவுண்டரில் நகர்த்திய உடன் ஆபீஸே அல்லோல கல்லோலப்பட்டது. ''யோவ்...! கடைசி யில் உன்னையும் விட்டு வைக்கவில்லையே நீ!'' என்று கூவிவிட்டனர் அவர்கள். பார்வையா லேயே அவனைப் பாராட்டினர்.

திடுமென சிங்கை ஒரு பயம் பிடித்துக் கொண்டது. ''சாஹேப் கோவிச்சுக்க மாட்டா ருங்களே?'' என்று கேட்டான்.

''மாட்டார், மாட்டார்! ஏதுக்குக் கோவிச் சுக்கணும்?'' என்றார் அக்கவுண்டண்ட்.

பென்ஷனைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினான் சிங்.

ஒரு வாரம் ஆயிற்று. திண்ணையில் களிமண் பிசைந்து கொண்டிருந்தான் சிங். தபால்காரர் 'ரிஜிஸ்தர் தபால்' என்றார்.

எந்தத் தபாலுமே சிங்கை நிலைதவறச் செய்துவிடும். இப்போதானால்.... ரிஜிஸ்தர் தபாலாமே!

''வக்கீலுங்கதான் ரிஜிஸ்தர் தபால் அனுப்பு வாங்க இல்லே?''

''சாதாரணமா அப்படித்தான்.''

''அப்போ இதைத் தயவுசெய்து திருப்பி எடுத்துட்டுப் போயிடுங்க.''

''''மறுத்துட்டாங்க'ன்னு போட்டுடவா?''

"ஆ! அதெல்லாம் போடாதிங்க. சும்மா அப்படியே கொண்டு போயிடுங்க, என்னைப் பாக்க முடியலைன்னு...."

"அது முடியாத காரியமாச்சே!"

இனி செய்வதற்கொன்றுமில்லை. தன் கையெழுத்தைக் கிறுக்கிவிட்டுக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டான் சிங். பிரமை பிடித்ததுபோல் உட்கார்ந்து விட்டான்—தரையை வெறித்து நோக்கியவாறு. வெளியேயிருந்து வந்த அவன் மனைவி இந்த நிலையில் அவனைப் பார்த்ததும் "என்னது அது?" என்றாள்.

"அதுவா? அதுதான் வந்துவிட்டதே!" என்றான். அவனுடைய குரல் தொண்டையிலேயே சிக்கிக் கொண்டது.

வீட்டு வேலைகளைக் கவனித்து விட்டுத் திரும்ப வாசலில் வரும்போதும் அவனை அதே நிலையிலேயே கண்ட அவன் மனைவி, "அதை ஏன் திறந்து, யாரையாவது விட்டுப் படிக்கக் காட்டச் சொல்லக் கூடாது?" என்றாள்.

அவன் பீதியுடன் கைகளை உயர்த்தினான். "பொன்னுா, நீ என்ன சொல்றேன்னு உனக்கே தெரியலே. அதைத் திறக்க முடியாது. என் பிஞ்சினை நிறுத்திட்டாங்களோ என்னவோ?"

"அப்ப ஆபீஸுக்கே போய், அவங்கிட்டயிருந்தே விஷயத்தைத் தெரிஞ்சுக்கலாமே?"

"நடக்காத காரியம்! என் மூஞ்சியை இனி நான் அங்கே காட்டவே மாட்டேன்.... அந்த ஆபீஸ் 'மாடல்' பண்ணறச்சேயே தெரியும்—வம்பை விலைக்கு வாங்கறேன்னு" என்று கூறியவன் மேலும் சிந்தனை செய்து சொன்னான்: "நான் ஒவ்வொரு தடவையும் போறபோது ஆபீஸ்காரங்க ஒரு மணி நேரம் வேலையை விட்டுட்டுக் கூட்டமா சுத்திக் கிட்டாங்க. இதெல்லாம் சாஹேப் காதுக்கு எட்டியிருக்கணும்."

கையில் கடிதமும், வாயில் இதே வாசகமுமாக அவன் சுற்றிச் சுற்றி வந்தான். உணவில் ருசி போயிற்று. தலையைச் சுற்றி மயிர் குத்திட்டு நிற்க, அலங்கோலமாக அவன் அலைந்தான். ராணுவ சேவை செய்ததில் வழக்கமாகவே எத்தனை 'டீக்'காக இருந்தவன் இந்தக் கோவிந்த சிங்! அவன் மனைவிக்கு மன அமைதி போய்விட்டது.

அவன் கடிதத்தைக் கையில் பற்றியபடி கூட்டு ரோட்டில் நின்று கொண்டு போகிறவர் வருபவர் யாவரிடமும், "சொல்லுங்க சாமி! இதிலே என்ன இருக்கு?" என்று கேட்டு வந்தான். அதைத் திறக்கும் யோசனையை மட்டும் அவனால் சகிக்க முடியவில்லை.

கடைசியில் ஒரு தீர்வு கிடைத்துவிட்டது!

எனவே உடனடியாக அந்த எக்ஸ்-ரே நிலையத்துக்கு விரைந்தான் சிங். உதவியாளருக்கு சலாம் வைத்து விட்டு, "இதைத் திறக்காமலேயே உள்ளே என்ன இருக்குன்னு நீங்க சொல்ல முடியும்னு சொன்னீங்க" என்றான்.

"நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டார் அவர். சிங், தன் வாழ்க்கை, தொழில், மனோபாவம் எல்லாவற்றையும் விவரித்தான். அவன் கன்னம் கண்ணீரில் நனைந்தது. இதற்கு முன் பலபேர் செய்தது போலவே அவனை விசித்திரமான அக்கறையுடன் பார்த்தார் உதவியாளர். மெல்ல நகைத்தவாறு, "வீட்டுக்குப் போய் 'ரெஸ்ட்' எடுத்துக் கொள்ளப்பா. உனக்கு உடம்பு சரியில்லை...ம்..." என்றார்.

"இதிலே என்ன இருக்குன்னு நீங்க சொல்ல முடியாதுங்களா?" என்றான் சிங் பரிதாபமாக. உதவியாளர் அதைக் கையிலெடுத்துப் பார்த்து விட்டு, "திறக்கலாமா?" என்றார். "கூடவே கூடாதுங்க" என்று கூவிய சிங் அதை அவரிடமிருந்து பிடுங்கிக் கொண்டான். அவன் கண்களில் அச்சம் நிறைந்திருந்தது. அவனையே பரிகாசக் கண்ணுடன் நோக்கினோர் அங்கு கூடியிருந்தோர்.

சிந்தித்தவாறே வீட்டுக்குத் திரும்பினான் சிங். "ஏதோ எனக்கும் பைத்தியம் பிடித்து விட்டதுபோல் ஏன் எல்லாருமே இப்படி நடந்து கொள்கிறார்கள்?" பைத்தியம்...... இந்த வார்த்தை அவன் எண்ணத்தில் தோன்றியதுதான் தாமதம், அப்படியே நடுச்சாலையிலேயே நின்று விட்டான். "ஓ அதுதான் சமாசாரம்! அதுவா? அதுவேதான். பைத்தியம், பைத்தியம்!" என்று சத்தமிட்டான். தன் மீது மக்கள் செலுத்திய பார்வையின் பொருளை இப்போதுதான் அவன் புரிந்து கொண்டான். இதைத் தெரிந்துகொண்டதில் ஒரு விநோதமான ஆறுதல் பெற்றான் சிங். "எனக்கும் பைத்தியமாக்கும் பிடித்திருக்கிறது. அது எனக்கே தெரியவில்லை."

அவன் பின்நோக்கி யோசனை விட்டான். கடந்த பல நாட்களாக அவன் செய்து வந்த ஒவ்வொரு சிறிய காரியமும்கூடப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்ற ஆரம்பித்தது: முக்கியமாகப் பொம்மை செய்கிறேனே அதைச் சொல்லுங்கள்! இருபத்தைந்து வருஷங்கள் கண்ணியமாய் ஆபீஸில் வேலை பார்த்த எந்த மூளையுள்ள மனிதனாவது களிமண் பொம்மை செய்வானோ, களிமண் பொம்மை?


தனது அங்கங்களிலெல்லாம் சுதந்திர உணர்ச்சி விம்மி எழுவது போல் உணர்ந்தான் சிங். அவனால் வழக்கமான கதியில் செல்லவே முடியவில்லை. பறந்தே விடமாட்டோமா என்றிருந்தது. கைகளை மேலும் கீழும் வீசியபடி, ஊளையிட்டவாறே ஓட ஆரம்பித்தான். ஜனங்கள் அவனையே நின்று கவனித்தபோது அவன் உரக்கக் கூறினான்:

"பைத்தியத்தைப் பார்த்து ஒண்ணும் சிரிக்கவேணும்...தேறு! யாரு கண்டாங்க— களிமண் பொம்மை பண்ண ஆரம்பிச்சா உங்களுக்கெல்லாம் கூடத்தான் பைத்தியம் பிடிக்குமோ என்னமோ?"

கண்டாலே பயப்படும் மாதிரியில் வீடு திரும்பினான் சிங். தோட்டத்தில் மிளகாய் இடித்துக் கொண்டிருந்த அவன் மனைவி, "என்னங்க இது?" என்று பதறிப் போய் விட்டாள். தலையில் தெருப் புழுதி; உடலெல்லாம் மண்பூச்சு; அவனோ சந்தோஷம் வாயை அடைக்க "என்ன நடந்திருக்கும், யோசிச்சுப் பார்" என்கிறான்!

"என்ன!" என்று எதிர்க் கேள்வி கேட்டாள் அவள். "எனக்குப் பைத்தியம் பிடிச்சிருக்கு. பைத்தியம்!" மூலையில் இருந்த கூடையைப் பார்த்தான் சிங். அதிலிருந்த களிமண்ணை வெட்டி யெடுத்து ஒரு தொப்பி செய்தான். அதைத் தலையில் மாட்டிக்

சித்திரம் உருவாகிறது



இரும்பு மற்றும் எஃகு தயாரிப்பதற்கான எல்லா சாதனங்களும் இப்பொழுது துர்க்காபூர் உருக்காலையில் நிறுவப்பட்டுள்ளன. தினசரி 1,250 டன் இரும்பு தயாரிப்பதற்கான முதல் இரண்டு துருத்தி உலைகளும் அடிக்கடி அதற்கு அதிகமாகவே உற்பத்தி செய்திருக்கின்றன. இப்பொழுது இயங்குவதற்கு தயாராயிருக்கும் மூன்றாவது துருத்தி உலையுடன் இரும்பு தயாரிக்கும் ஆலை பூர்த்தியடைகிறது. எஃகு உருக்கும் ஆலையில் இயக்கப்பட்டிருக்கும் திறந்த உருக்கு உலைகளில் இதுவரை இரண்டு லட்சம் டன் எஃகு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. திறந்த உருக்கு உலைகள் எல்லாம் இப்பொழுது வேலை செய்யத் தயாராயிருக்கின்றன.

ஹெட் ரைட்ஸன் & கம்பெனி லிமிடெட்.
தி வெல்மென் ஸ்மித் ஓவன் என்ஜினீரிங் கார்ப்பரேஷன் லிமிடெட்.
டவி & யுனைடெட் என்ஜினீரிங் கம்பெனி லிமிடெட்.
ஸைமன்-கார்வ்ஸ் லிமிடெட்.
தி ஸிமின்டேஷன் கம்பெனி லிமிடெட்.
அஸோசியேட்டட் எலெக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ் (ரக்பி) லிமிடெட்.
தி இங்கிலீஷ் எலெக்ட்ரிக் கம்பெனி லிமிடெட்.
தி ஜெனரல் எலெக்ட்ரிக் கம்பெனி லிமிடெட்.
அஸோசியேட்டட் எலெக்ட்ரிகல் இண்டஸ்ட்ரீஸ் (மான்செஸ்டர்) லிமிடெட்.
ஸர் வில்லியம் ஆரோல் & கம்பெனி லிமிடெட்.
க்ளீவ்லேண்ட் பிரிட்ஜ் & என்ஜினீரிங் கம்பெனி லிமிடெட்.
டோர்மென் லாங் (பிரிட்ஜ் & என்ஜினீரிங்) லிமிடெட்.
ஜோஸப் பார்க்ஸ் & ஸன் லிமிடெட்.
இஸ்கான் கேபிள் குரூப்.

இந்தியாவுக்காக வேலைசெய்யும்
பிரிட்டிஷ் கம்பெனிகள்

இஸ்கான்

இந்தியன் ஸ்டீல் வர்க்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்.

கொண்டான். தரையில் அவனது கைத்திறனின் கடைசி சிருஷ்டி பரப்பி வைக்கப்பட்டிருந்தது. அவனது பிறந்த கிராமத்தின் 'மாடல்' அது. நூறு வண்ணங்களும் இழைந்த சேர்க்கை அது — சாம்பல் நிறச் சாலை, சிவப்பு ஓடுகள், பச்சைத் தென்னைகள், தண்ணீர் கொண்டு வரும் பெண்களின் பல நிறப் புடவைகள். பரவச நிலையிலேயே அவன் செய்தது அந்தத் தொகுப்பு. "இதை நான் எனக்கே எனக்கு வெச்சுக்கப் போறேன். எங்க பெரியவங்க ஊருக்கு ஒரு ஞாபகமாச்சே இது" என்று சொல்லியிருக்கிறான். அது சரமாக இருந்ததால் தன் மனைவியை அதற்குப் பத்து கஜம் அருகேகூட அவன் அனுமதித்ததில்லை. "அப்பாலே போ, உன் கால் புழுதியெல்லாம் எங்க கிராமத்துக்கு வேண்டியதில்லே" என்பான். அப்படியெல்லாம் சொன்னவன், இன்று காலை உயர்த்தி அதன் மீது அழுத்தி வைத்துத் துவைத்தான். வண்ணங்கள் யாவும் குழம்பிய பிண்டமாயிற்று அது. அதை அப்படியே திரட்டி, தெருவில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு கழுதையிடம் எறிந்தான். "பிடிச்சால் இதைத் தின்னு. இது ஒரு நல்ல கிராமம்" என்றான்.

இரண்டாம் முறையாக ஊரைச் சுற்றப் புறப்பட்டான். இந்த 'உலா' முன்னைவிட அமைதியாக அமைந்தது. நிதானமாக நடந்தான், கைகளைப் பின்னால் சேர்த்துக்கொண்டபடியே. விரல்கள் அந்தப் பாழும் கடிதத்தை இறுகப் பிடித்திருந்தன. தான் ஒருவனே இந்த மாபெரும் உலகின் தனியொரு ஜீவன் என்ற எண்ணத்தோடு சந்தைச்சாலையில் நடந்தான்.

உயர்ந்து நின்ற விளக்குக் கம்பமொன்றில் பொருத்தியிருந்த ஒரு பல்பு அவன் கண்ணில் பட்டது. "பப்பாளிப் பழம்மாதிரி" என்று கூறிச் சிரித்துக் கொண்டான். அதன் மேல் கல்லெறிய வேண்டுமென்று அவனுக்கு நீண்ட நாளைய அவா. பழக்க வழக்கங்களின் தளையிலிருந்து தப்பியாயிற்று. இன்னும் தன் அபிலாஷைகளைத் தள்ளிப் போடுவானேன்? கூழாங் கல்லொன்றை எடுத்து, குறி பார்த்து அதை அடித்தான். கண்ணாடி நொறுங்கும் சத்தம் அவனுக்கு இசையாக இருந்தது.

போலீஸ்காரர் ஒருவர் அவன் தோளில் கையை அழுத்தினார். "ஏன் இப்படிச் செய்தாய்?" என்றார். சிங்குக்கு எரிச்சல் வந்தது. "கண்ணாடிப் பப்பாளிப் பழத்தை நொறுக்குவது எனக்குப் பிடிக்கும். அவ்வளவுதான்" என்றான். "ஸ்டேஷனுக்கு நட, தம்பி!" என்றார் போலீஸ்காரர்.

"ஜோரா! நான் மெஸபொடேமியாவிலே இருக்கச்சே அரை வயிறு ரேஷன்லே இருந்தவன்தான்" என்றான் போகும் வழியில்.

அவன் நின்றான்; தலையைச் சாய்த்துப் பார்த்தான். "இந்த ரோடு நேராகவே இல்லையே" என்றான். அந்த வழியே போன வாகனங்கள் அத்தனையும் தப்பு வழியிலேயே சென்றன! அதில் செல்பவர்களுக்கு யாராவது நல்ல புத்தி சொல்ல வேண்டாமோ?

அவன் தெருவின் நடுவே நின்று கொண்டான். கைகளை விரித்துக் கொண்டு, "நிறுத்துங்கள்" என்று கத்தினான்.

வண்டிகள் நின்றன. சைக்கிளில் சென்றவர்கள் குதித்தனர். ஒரு சொற்பொழிவே தொடங்கி விட்டான் சிங்.

போலீஸ்காரர் அவனைச் சாலை ஓரத்துக்கு இழுத்துச் சென்றார். போக்குவரவைத் தொடங்கலாம் என்பதற்கு சமிக்ஞை தெரிவித்தார். அப்போது, மீண்டும் செல்லத் தொடங்கிய சைக்கிளோட்டிகளில் ஒருவர் சட்டென்று ஆசனத்திலிருந்து குதித்து அவனருகே வந்தார். "என்னது! சிங்கா? சிங், இதென்ன விசித்திர அலங்காரம்? என்ன சமாசாரம்?" என்றார்.

புத்தித் தடுமாற்றத்தின் பனி மூட்டத்திலும் கூட சிங்குக்கு அந்தக் குரலை அடையாளம் காண முடிந்தது—ஆபீஸ் அக்கவுண்டண்ட் அல்லவா அவர்! சடாரென்று அவருக்கு சலாம் போட்டான் சிங். "மன்னிக்கணுங்க சார், உங்களை நிறுத்தணும்னு எனக்கு எண்ணமே கிடையாதுங்க. நீங்க போகலாம்" என்றான். தாராள மனத்துடன் அவருக்கு வழியையும் காட்டினான். அப்போது அவன் கையிலிருந்த கடிதத்தைப் பார்த்து விட்டார் அவர். அது அழுக்குப் படிந்து, கசங்கிப்போயிருந்தும் அவருக்கு அடையாளம் தெரிந்தது.

"சிங், ஆபீஸ் கடிதாக வந்ததோ?" என்றார்.

"வந்தது சார்-அதைப்பத்தியே பேசாதீங்க, நீங்க போகலாமுங்களே!"

"என்னப்பா விஷயம்?" என்று கூறிய அக்கவுண்டண்ட் கடிதத்தை அவன் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டார்.

"ஏன் இதை நீ திறக்கவேயில்லை?" என்று கேட்டவர், உறையைக் கிழித்து, கடிதத்தை வெளியே எடுத்தார். உரக்கப் படித்தார். ஆங்கிலத்தில் இருந்த அந்த வாசகம் வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டது.

"நீ அனுப்பிவைத்த கலை எழில் கொண்ட பொருட்களை ஜெனரல் மானேஜர் பெரிதும் ரசித்து உனக்கு நூறு ரூபாய் பரிசு வழங்கியிருக்கிறார். பொழுது போக்காகச் செய்யும் இந்த ரஞ்சகமான தொழிலில் உன்னை இது மேலும் ஊக்குவிக்குமென நம்புகிறார்."

கடிதத்துடன் அனுப்பி வைத்திருந்த நூறு ரூபாய்க்கான செக்கும் கோவிந்தசிங்கிடம் அளிக்கப்பட்டது. சிங் கடிதத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டான். தன் நெற்றியில் அடித்துக் கொண்டு விம்மும் குரலில் கேட்டான்: "சொல்லுங்க சார், எனக்குப் பைத்தியமா, இல்லையா?"

"நீ நன்றாகத்தானப்பா இருக்கிறாய். உனக்குப் பைத்தியமே இல்லை" என்றார் அக்கவுண்டண்ட்.

சிங் அவர் பாதங்களில் விழுந்தான். "நீங்கள் தெய்வம். நான் பைத்தியமில்லை என்று சொன்னீங்களே. எனக்கு ரொம்ப சந்தோஷமா...." என்று இறைஞ்சினான்.

அடுத்த 'பென்ஷன்' தினத்தன்று ஆபீஸில் கேட்டார்கள்: "இப்போ என்னென்ன செய்யறே?" என்று. "ஒண்ணுமில்லீங்க. இனிமேலேயே ஒண்ணும் கிடையாதுங்க. புத்தி சரியாயிருக்கிறவனுக்கு அது ஒரு தொழில் இல்லீங்க" என்றான் சிங். பென்ஷனை வாங்கிக் கொண்டு, ஆபீஸை விட்டு விரைப்பான நடையுடன் வெளியேறினான்.

வட்ட மேஜை

உண்ணாவிரதம் !

திரு தாமரைமணாளனின் 'உண்ணாவிரதம்' என்ற சிறுகதையைப் படித்தேன். அதிகமாகச் சிரித்தேன். சமுதாயத்தின் உண்மை நிலையை அப்பட்டமாக, சிந்தனையைத் தூண்டும் முறையில் கதை அமைந்துள்ளது. பல நாட்கள் பட்டினியுடன் போராடும் குப்பனுக்கு உண்ணாவிரதம் புதிதல்ல — பட்டினியைப் போக்க உண்ணாவிரதமிருக்கும் போலி ரத்தினசாமிகள் குப்பனின் கண்களுக்குப் புதிது. எளிய முறையில் சிந்தனையைத் தூண்டும் போலி ரத்தினசாமிகளின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் கதைகளே இன்றைய சமுதாயத்துக்குத் தேவை.

கோவை
16-5-61
கே. எஸ். கலிய பெருமாள்

கதை பிறவாத கதை

ஜூனின் 18ந் தேதி 'கல்கி' இதழில் வெளிவந்துள்ள "கதை பிறவாத கதை" சிறந்த கற்பனை. புதுமையான கருத்து. கதாசிரியர்களின் சங்கடத்தை எத்தனை நயமாக, அழகாக, தாராளமாக எடுத்துச் சொல்லி விட்டார்? வேலைப்பாடான சித்திரம். ஆனாலும் எல்லோரும் அனுபவிக்கக் கூடிய எளிய படைப்பு. என் பாராட்டுக்கள்.

சென்னை
17-6-61
வ. சா. நாகராஜன்

பலே ஜோர் !

ஆசிரியர் கல்கி எழுதிய கட்டுரைகளில் இரண்டு வரிகளுக்கு ஒரு தடவை வாய்விட்டுச் சிரிக்க வேண்டிவரும். அந்தமாதிரி ஒரு நிர்ப்பந்தத்தைக் கொண்டு வந்து விட்டார் திரு ரா. அ. பத்மநாபன் 11-6-61 கல்கியில் எழுதிய ரேடியோக் கட்டுரையில். திரு சாமாவின் படங்களும் பலே ஜோரா யிருந்தன. அந்த வயலின் வித்வான் எழுந்து நின்று வாசிக்கும் படத்தில் செந்தேள் கொடுக்கைத் தூக்கிக் கொண்டு நிற்பது ரொம்பத் தமாஷாக இருக்கிறது.

புது டில்லி
9-6-61
பா. சுந்தரராஜன்

ஆவி சிலிர்க்குது !

ஜூனின் 18-ந் தேதி இதழில் வெளியாகியுள்ள "ஆவி சிலிர்க்குது" என்னும், திரு வே. கோவிந்தராசன் அவர்களின் கதை, உண்மையிலேயே நம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறது. வறுமையின் கொடுமையைப் பிரதிபலிக்கிறது. ஆயினும் ஒன்று: மகனை வஞ்சித்துத்தான் உண்ண வேண்டும் என்று தாய் எண்ணுவதாகக் கூறுவது, தாய்மையைச் சிறுமைப் படுத்துவதாக இருப்பினும், "பெற்ற குழந்தையை வஞ்சிக்கும் காலமாச்சேடா" என்று முடித்திருப்பது, "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்னும் பழமொழியை உருவகப் படுத்துவது போலுள்ளது. இதன் ஆசிரியர் சற்று நிதானமாகவே எழுதினாலும் எழுதும் ஒவ்வொன்றும் மணிமணியாக உள்ளது.

கோயமுத்தூர்
17-6-61
என். ஜி. மீனு

ஆரமுது

"கல்கி"யின் நீண்ட இலக்கிய பாதையில் அதன் சொச் சாதனையாக நான் மதித்து மனதாரப் போற்றி வாழ்த்துவது "கல்கி"யில் தி. ஜானகிராமன் அவர்களது தொடர்கதை வெளியாகி வருவதைத்தான்.

திருப்பூர்
9-6-61
பி. சின்னசாமி பி. ஏ

நாவல் பிறக்கிறது

கல்கியில் 'நாவல் பிறக்கிறது' என்ற தலைப்பில் பல்வேறு புகழ்மிக்க ஆசிரியர்களைக் கொண்டு எழுதச் சொல்லி யிருப்பது போற்றுதற்குரியது. எழுத்தாளர் இதயத் தடத்தில் பாத்திரம் என்னும் மலர் எப்படி விதைக்கப்படுகிறது. அது எப்படி வளர்ந்து மொட்டவிழ்ந்து மலர்ந்து மணம் வீசுகிறது என்பதைச் சித்திரித்துக் காட்டுகிறது. இந்தப் பகுதியில் ஆயிரமாயிரம் இதயங்களில் நீங்கா இடம் பெற்ற 'பாவை விளக்கு' அளித்த திரு அகிலன் அவர்களின் முதல் கட்டுரை படிக்கப் படிக்கச் சுவையளிக்கிறது. கதைக்கரு உருவாவதற்கு ஆசிரியன் எத்தகைய சிரமப் பட வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

தங்கவயல்
8-6-61
சி. துரைராசன்

ஜூனின் 11-ந் தேதி இதழில் திரு அகிலனின் "நாவல் பிறக்கிறது" கட்டுரையைப் படித்தேன். என் குருநாதராக அவரை நான் ஐந்து வருடங்களாகப் பாவித்து வருகிறேன். அவர் எழுதியதுபோல் உடனுக்காக, உழைப்பால் வெறியம் பெறும் நான், அதை இன்று தான் படிக்க நேரம் இருந்தது. மூன்று தடவைகள் படித்தேன்.

சென்னை
13-6-61
சுகஜீவியன்

இரு சிகரங்கள்

திரு அகிலன் அவர்களின் நாவல் பிறக்கிறது கட்டுரை அவருடைய நாவல்களைப் போலவே மிகவும் இனிமையாக இருக்கிறது. திரை உலகில் புகுந்து விட்டாலும், இலக்கியத்தை ஒருகாலும் மறந்துவிடப் போவதில்லை என்று உறுதி கூறியிருப்பது ஆறுதலளிக்கிறது.

ஆசிரியர் தி. ஜா. வின் 'அம்பே ஆரமுதே' விறுவிறுப்பாக ஓடுகிறது. அனந்தசாமி, சந்திரா, நாகம்மாள், அருணகுமார் ஆகிய ஒவ்வொரு கதாபாத்திரமும் ஆசிரியரின் கைவண்ணம் பட்டு முழுமையாகத் திகழ்கிறது. அனைவரும் படிக்கத்தக்க எளிய நடை. இது ஆசிரியரின் தனி உடைமை.

தஞ்சாவூர்
12-6-61
சுந்தர ராமச்சந்திரன்



A Glimpse of Gandhiji

இராம, கிருஷ்ணாதியரின் சரிதங்கள் பெற்றுள்ள மகிமைக்குக் காரணம் அவற்றை இயற்றியுள்ள மகரிஷிகள் தங்கள் காவிய நாயகனின் குணாதிசயங்களில் அப்படியே திளைத்திருந்து, அவற்றை அநுபவ பூர்வமாக வெளியிட்டதுதான். அதேபோல், மகாபுருஷராகிய காந்திஜியுடன் நீண்டகாலத் தொடர்பு கொண்டு, இதயத்தால் அவருடன் ஒன்றியிருந்த ஸ்ரீ காகா கலேல்கர் எழுதியுள்ள இச்சிறு நூல் அழகும், ஆழமும், அழுத்தமும் பெற்று விளங்குகிறது. அடிகளின் பரிசுத்தமான வரலாற்றை எட்டு அத்தியாயங்களில் காண்கிறோம். எனினும் இந்நூலானது மகாத்மாவின் சரிதத்தையும், இந்திய நாட்டு வரலாற்றையும் ஏற்கனவே அறிந்தவர்களுக்கு ஒரு நினைவூட்டி போல்தான் அமைந்திருக்கிறது. இவற்றை அறியாதோருக்கும் பல இடங்களில் ஏதோ வெற்றிடம் தட்டியிருப்பது போன்ற உணர்ச்சிகூட ஏற்படலாம். எப்படியாயினும் மனத்துக்கு ஒரு நிறைவை அளிக்கும் புத்தகம்தான்.

வெளியீடு: சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர்; விலை: 50 புதுக்காசுகள்.

உயிரினங்கள் - தோற்றமும் வளர்ச்சியும்

பலப்பல பட்டங்களைப் பெற்ற நால்வரைக் கொண்ட ஆசிரியர் குழாம் எழுதிய நூலை, விஞ்ஞானமும் சட்டமும் கற்றுணர்ந்த நிபுணர் தமிழாக்க, அதனைச் சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தருடைய அணிந்துரையுடன் அறிவு நிலையத்தினர் வெளியிட்டிருக்கின்றனர்.

ஏன், பயந்து ஒதுங்குவானேன்? படித்துத்தான் பாருங்களேன்!

உலகில் உயிரினங்கள் உருவானது எப்படி என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு மண்டையை உடைத்துக் கொள்வதைக் காட்டிலும், 'ஆண்டவன் படைத்தான்' என்று நம்பி விட்டுப் போவது சுலபமாகப் படும் நம்மில் பலருக்கு. அதில் தவறொன்றும் இல்லைதான். அணுவினைக் கூறு போட்டு ஆராயும் விஞ்ஞானியும்கூட அங்கே ஆண்டவனின் அலகிலா விளையாட்டைக் கண்டு ஆனந்தமடைவதுடன் மனிதனின் சிறுமையையும் உணர்கிறான். என்றாலும் விநாடிக்கு விநாடி வளர்ந்துவரும் விஞ்ஞான உலகினைப் பற்றி அறியாமல் நாம் கிணற்றுத் தவளைகளாகவும் இருப்பதற்கில்லை அல்லவா? அதற்கு இது போன்ற நூல்கள் பெரிதும் உதவுகின்றன.

இப்படிப்பட்ட ஒரு புத்தகத்தைத் தமிழில் எழுதுவது எவ்வளவு கடினம் என்பதை வரிக்கு வரி தென்படும் ஆங்கிலச் சொற்கள் தெளிவுபடுத்துகின்றன. அந்த ஆங்கில வார்த்தைகள் இல்லாவிடில் விஷயத்தைப் புரிந்து கொள்வது கடினம் என்று மொழிபெயர்ப்பாளர் கருதியிருக்கிறார். ஆங்கிலத்தை அப்புறப்படுத்துவதில் அவசரப் படுவதற்கில்லை என்பதைத்தானே இது உணர்த்துகிறது? ஆசிரியர்கள்: கே. புவனேசுவரி, எம். லக்ஷ்மணன், ஆர். ஆண்டாள், டி. சுப்பிரமணியன்.

தமிழாக்கம்: எஸ். எஸ். ராமசாமி. வெளியிட்டோர்: அறிவு நிலையம், ராயப்பேட்டை, சென்னை—14. விலை: ரூ. 2—10.

முதல் உதவி

முதல் சிகிச்சை அளிக்கும் வாய்ப்பு எல்லாருக்கும் சுலபத்தில் கிட்டி விடுவதில்லை. ஆனாலும் எப்போதாவது ஒரு முறை அதற்கு அவசியம் ஏற்பட்டு விட்டால் ஓடிப் போய்ப் புத்தகத்தைத் தேடிக் கண்டுபிடித்து சிகிச்சை முறைகளை அவசரம் அவசரமாகப் படித்துத் தெரிந்துகொண்டு பின்னர் செயல்படுவதைக் காட்டிலும் முன்கூட்டியே அறிந்து வைத்துக் கொள்வது சாலச் சிறந்ததுதானே! சாரணர்கள் மிகவும் விரும்பிப் படிப்பார்கள் இந்தப் புத்தகத்தை. முதல் உதவிகளைப் பற்றி மட்டும் புரிந்துகொள்ள விரும்புவோர் இரண்டாம் அத்தியாயத்தைப் படித்து அவஸ்தைப்பட வேண்டுமென்பதில்லை.

ஆசிரியர்: டாக்டர் ஆர். ஸ்ரீனிவாசன். வெளியிட்டோர்: தமிழகம், 59, பிராட்வே, சென்னை — 1, விலை ரூ. 2.

மண் உருவங்கள்


'சீறிக்கு இயற்கையாக உள்ள சுவை கெடுமாறு தாளிதம் செய்யும் சமையற்காரனை நல்ல சமையற்காரனாக நான் கருத மாட்டேன்' என்று கூறுவதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை, இந்த 'மண் உருவங்க'ளைச் சமைத்த திரு ராம்ப்ருக்ஷ பேனிபுரி அவர்கள். தமது பிரதேசத்து மண் வாசனை வீசும்படி வாழ்க்கையோடு ஒட்டிய பன்னிரண்டு பாத்திரங்களைப் படைத்து நம்மிடையே உலவவும் விட்டிருக்கிறார். வளையல்காரி ரஜியா, சுபான்கான், பண்ணையாள் மங்கர், பரோபகாரி ஸரயூ அண்ணு, அன்னி போன்றவர்களை நாம் எங்கும் காணுகிறோம். அவர்களைப் பற்றிய சொல்லோவியங்களைப் படிக்கும்பொழுது, நம் மண்ணுக்கே இயல்பான அன்பு என்னும் நீர்ப்பெருக்கு எப்படிச் சுரக்கிறது, நம் பூமிக்கு எப்படிப் பெருமை சேர்க்கிறது என்பதைக் கூடக் காண்கிறோம். மூலத்தின் சுவை கெடாமல் இதைத் திறம்படத் தமிழாக்கித் தந்துள்ளார் திரு வி. எஸ். ரங்கநாதன்.

பிரசுரம்: கலைமகள் காரியாலயம், சென்னை—4. விலை: ரூ. 2—50.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10. Managing Editor, T. Sadasivam.

அன்னையின் அன்புலகிலே பொன்னான பொருள்களே யன்றி வேறுண்டோ?

ஆதரவுக்கு ஆதரவான அன்னைக்கு ஆதரவு: டால்டா





'அன்பு' 'அன்பு' என்கிறது நம் வீடு... நந்தாயின் இருப்பிடம்... அவள் தரும் பொருள்கள்... 'அன்பு' 'அன்பு' என்கிறது... நல்லுணவு! 'அன்பு 'அன்பு' என்கிறது அவள் சமைக்கும் ஒவ்வொரு காய்கறியும்! நம் சுகமே தன் சுகமெனக் கருதிப் பொன்னான பொருள்களையே எந்நாளும் தரும் தாய், கருத்துடன் சமையலுக்குத் தேர்ந்தெடுப்பது டால்டா.

அருமையான தாவர எண்ணெய்களாலான, தூய டால்டா; வளரும் உடம்புக்கு வேண்டிய வைட்டமின்கள் அடங்கிய, மேலான வனஸ்பதி... அறுசுவை நல்லுணவுக்கான டால்டா... அது நம்மவர்க்கே உகந்ததன்றோ...

டால்டா வனஸ்பதி: அறுசுவைச் சமையலுக்கு உறுதுணை

DL. 68-X52 TM

இந்துஸ்தான் லீவர் தயாரிப்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



